ஜோதி

ஆசிரியர் — வெ. சாமிநாத சர்மா

சுடர் 4 — விஷு ௵ சித்திரை ௴ — கதிர் 10

மே-1941

அடுத்த பக்கங்களில்

நமது நியாய சபை	—		1
அன்றாட உலகம்	—		8
துலாக்கோல்	—		16
காரி பால்டி	—		18
இன்றைய தேவை என்ன?	—	சி. இ. எம். ஜோட்	20
என்னை ஏன் காதலிக்கிறாய்?	—	"தேவகவி"	24
சிலப்பதிகாரம்—மதுரையின் மாண்பு	—	மா. சர்மா B. A. (Hons)	25

பீஷ்மன் (நாடகம்)	—	வெ. சா.	32
சூரிய மண்டலம்	—	"தமிழ் மகன்"	37
தமயனின் கடிதம்-16	—	"தேவிதாசன்"	41
விழுமிய செல்வம்	—	"ஆசிரமவாசி"	42
தேவ தூதன்		ஜி. கே. சுந்தரசாஸ்திரி, B. A. B. T.	44
உஜ்வலினி (சிறுகதை)	—		46
சுபாஷ் சந்திரபோஸ்	—	"ஒரு காங்கிரஸ்வாதி"	52
சூயஸ் கால்வாய்	—		56
யுத்தம் வேண்டாம்	—		58
ஐரோப்பிய அரசியலில் ஸ்பெயினின் முக்கியத்துவம்	—	ஸால்வடோர் மடாரி யாகா	61

சந்தா நேயர்களுக்கு!

நமது சந்தா நேயர்களிற் சிலர், நான்கைந்து மாதங்களுக்குப் பிறகு, தங்களுக்குப் பத்திரிகை கிடைக்கவில்லையென்று எழுதுகிறார்கள். இது நமக்கு மிகவும் சிரமமாயிருக்கிறது. பிரதிமாதப் பத்திரிகையும் அந்த மாத முடிவுக்குள்ளோ அல்லது அடுத்த மாதம் முதல் வாரத்திற்குள்ளோ தங்களுக்குக் கிடைக்காவிட்டால் உடனே சந்தா நேயர்கள் நமக்குத் தெரிவித்தால், அதனை உடனே கவனிப்பதற்குச் சௌகரியமாயிருக்கும். அப்படிக்கின்றி, பல மாதங்கள் கழித்து நமக்குத் தெரிவித்தால் அவற்றை நாம் கவனிக்கமுடியாதென்பதைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

மானேஜர்

ஜோதி

சுடர் 4 மே-1941 கதிர் 10

சீர்திருத்தம்

இது சீர்திருத்த காலம். சீர்திருத்தத்தைப் பற்றி பேசுவதும் எழுதுவதும் இப்பொழுது ஒரு நாகரிகமாகப் போய்விட்டது. நண்பர்கள் ஒருவர்க்கொருவர் சந்திக்கிறபோழ்து "என்ன, நீ இன்னும் சீர்திருந்தவில்லையா?" என்று கேட்கிறார்கள். உடைச் சீர்திருத்தம், உண்வுச் சீர்திருத்தம், அரசியல் சீர்திருத்தம், ஆசார சீர்திருத்தம்—ஆக எல்லாத் துறைகளிலும் இப்பொழுது சீர்திருத்தந்தான். இந்தச் சீர்திருத்த மனப்பான்மை இருப்பது நல்லதுதான். வீட்டில் அலமாரியில் வைத்திருக்கிற பொருளை நாம் அடிக்கடி எடுத்துப் பார்த்துத் துடைத்துவைக்காமற்போனால் அது சீர்கெட்டுப் போகிறது. அதைப்போலவே, ஒரு ஜாதியின் பல சம்பந்தப்பட்ட பிரச்னைகளையும், அந்த ஜாதியினர் அடிக்கடி பரிசீலனை செய்துபார்க்க வேண்டும். இடத்திற்கும் காலத்திற்கும் தகுந்தமாதிரி அந்தப் பிரச்னைகளைத் திருத்தியமைத்துக்கொள்ள வேண்டும். உலக சரித்திரத்தை நாம் பார்க்கிறபோது வளர்ச்சியடைந்து கொண்டு வந்திருக்கிற ஒவ்வொரு ஜாதியும் இப்படியே செய்து வந்திருக்கிறது. ஆனால் இப்படி வளர்ந்து கொண்டு வந்திருக்கிற ஒவ்வொரு ஜாதியும் சீர்திருத்தத் துறையிலே ஸ்நானஞ் செய்துவிட்டுமட்டும் வளர்ச்சியடையவில்லை. சிருஷ்டிக்கிற துறையிலும் தீவிரமாக வேலை செய்து வளர்ச்சியடைந்து வந்திருக்கிறது. இது முக்கியமான விஷயம். இதை நாம் அலட்சியமாகக் கருதிவிடக் கூடாது. பாரத ஜாதியின் தற்போதைய பரிஸ்திதியில் அது சிருஷ்டிக்க முடியாதென்பதை நாம் ஒப்புக்கொள்கிறோம். ஏனென்றால் அடிமை ஜாதிக்கு, சிருஷ்டிக்கிற சக்தியே இல்லாமற் போய்விடுகிறது. எனவே, இருக்கப்பட்டதை நாம் ஒழுங்காகச் சீர்திருத்தி யமைத்துக்கொள்ளவேண்டும். திடகாத்திரமுள்ள ஒருவன்தான் பிரஜா உற்பத்தி செய்ய முடியும். நோய்வாய்ப்பட்டுள்ள ஒருவன், சிருஷ்டிக்கிற தொழிலைப்பற்றி நினைக்கவே முடியாது. அப்படி நினைப்ப

தற்கு முன்னர் அவன், பல ஔஷதங்களைச் சாப்பிட்டு உடலிலே படிந்து கிடக்கும் நோய்களை அகற்றிக்கொள்வதோடு தன் தேக பலத்தையும் விருத்தி செய்துகொள்ள வேண்டும். இதைப்போலவே, அடிமை நோயினால் பீடிக்கப்பட்டிருக்கும் ஒரு ஜாதியும் நடந்துகொள்ள வேண்டும். நாம் அநுஷ்டிக்கிற சீர்திருத்த முறைகள், நம்முடைய வியாதிகளைப் போக்குவது மட்டுமல்லாமல், நமது ஜீவசத்தையும் விருத்தி செய்து கொடுக்கக் கூடியதாயிருக்கவேண்டும்.

ஆனால் துரதிருஷ்ட வசமாக இப்பொழுது நமது நாட்டிலே அநுஷ்டிக்கப் பட்டு வருகிற சீர்திருத்த முறைகளெல்லாம், கீழிருந்து தொடங்கப் படாமல் மேலிருந்தே தொடங்கப் படுகின்றன. விருட்சத்தின் அடியிலுள்ள ஆணி வேரில் அரித்துக் கொண்டிருக்கும் புழுக்களை அகற்ற நாம் பாடு படுகிறோமில்லை. உச்சாணிக் கிளையிலுள்ள இலையின் மீது ஒட்டிக் கொண்டிருக்கும் புழுக் கூட்டை அப்புறப் படுத்த முயல்கிறோம். அவ்வப்பொழுது சேரும் இந்தப் புழுக் கூடுகளை அவ்வப்பொழுது நாம் அப்புறப் படுத்தி விடுவதனால், மரம், மேற் பார்வைக்குச் சிறிது காலம் வரையில் அழகாகத்தான் இருக்கிறது. ஆனால், உள்ளுக்குள்ளே, அடி வேரிலிருந்து மரமானது பட்டுக் கொண்டு வருவது யாருக்கும் தெரிவதில்லை. திடீரென்று பட்டுப் போகிறபோது, யாருமே பிரமித்துப் போகிறார்கள்; தாங்கள் அநுஷ்டித்த பரிகார முறைகள் தவறென்று உணர்கிறார்கள். தீவிரமான முறை ஒன்றைக் கையாள வேண்டுமென்ற ஆத்திரம் அப்பொழுது இவர்களுக்கு உண்டாகிறது. ஆனால் அந்த நேரத்தில் என்ன செய்ய முடியும்? மனோதிடமுள்ள யாரோ ஒரு வைத்தியன் தோன்றி, கடைசி பட்சமான சிகிச்சை செய்தாலொழிய, மரம் உயிர்த்து எழுவதில்லை. இதைப்போல, ஒரு ஜாதியும், அரசியல் அடிமைத் தனம், பொருளாதார ஏற்றத் தாழ்வு, சமூகச் சச்சரவு, குறுகிய மனப்பான்மையை வளர்த்துக் கொண்டு போகிற மதக் கட்டுப் பாடுகள் முதலிய புரைப் புண்களால் அழுகிக் கொண்டு வருகிற போது, தீவிரமான ஒரு முறையைத் தான் கையாள வேண்டும். இந்தத் தீவிர முறையையே, அரசியல் பரிபாஷையில் 'புரட்சி' என்று சொல்வார்கள். வைத்திய பரிபாஷையில் 'இன்ஜக்ஷன்' என்பார்கள். ஆனால் எந்தத் தேகத்திலும் கொண்டு போய் திடீரென்று 'இஞ்ஜக்ஷன்' செய்ய முடியாது. 'இன்ஜக்ஷன்' செய்யப் படுவதற்குக் கூட தேகம் தகுதியுடையதாயிருக்க வேண்டும். அதைப் போலவே ஒரு ஜாதியினிடத்திலும் திடீரென்று புரட்சியை ஆரம்பித்து விட முடியாது. அப்படி ஆரம்பித்தால் அஃது ஏமாற்றத்தில்தான் கொண்டு போய் விடும். ஆனால் இந்தப் புரட்சி ஏற்படாத படியே ஒரு ஜாதியினுடைய ஜீவ களையை விருத்தி செய்யலாம். அதற்கு, அடிப்படையிலிருந்து சீர்திருத்தங்கள் செய்து கொண்டு போக வேண்டும். இந்த அம்சத்தை வற்புறுத்துவது தான் இந்தக் கட்டுரையில் நமது நோக்கம்.

இப்பொழுது நமது நாட்டில் எழுந்துள்ள சீர்திருத்த இயக்கங்களிற் பெரும்பாலன, பிறர் பார்த்து மெச்ச வேண்டுமென்னும் நோக்கமுடையன

வாயிருக்கின்றனவே தவிர, அந்தரங்க சுத்தத்தை நோக்கமாகக் கொண்டிருக்கவில்லையென்று நாம் கொஞ்சம் பட்டவர்த்தனமாகவே சொல்லி விட வேண்டியிருக்கிறது. நமது சமுதாயத்தின் தற்போதைய நிலைமை என்ன, அதன் ஜீவ நாடி எந்த வேகத்தில் துடித்துக் கொண்டிருக்கிறது, அதனை முன்னுக்குப் போக விடாமல் என்னென்ன தளைகள் அதனைப் பின்னிக் கொண்டிருக்கின்றன, அதனுடைய தேவைகள் என்ன என்பவைகளைச் சரிவரத் தெரிந்து கொள்ளாதவர்களும், போதிய ஆராய்ச்சியும், உலக அநுபவமும் இல்லாதவர்களும் சீர்திருத்த ஸ்தாபனங்களை ஆரம்பித்து ஜனங்களுக்கு நன்மை செய்யப் போவதாகக் கச்சை கட்டிக் கொண்டு முன் வருகிறார்கள். இவர்களால், இவர்களுக்கு நன்மை உண்டாகிறதோ என்னவோ நமக்குத் தெரியாது; நாட்டுக்கும் சமுதாயத்திற்கும் லவலேசமும் நன்மை உண்டாவதில்லையென்பது மட்டும் நமக்குத் தெரிகிறது.

அரசியல் சீர்திருத்தத்தை எடுத்துக் கொள்வோம். நமது அரசியல் அபிலாஷைகளைப் பிரதிபலித்துக் காட்டுங் கண்ணாடியாகத் தற்போது அமைந்திருப்பது காங்கிரஸ். இந்தக் காங்கிரஸிலே அங்கத்தினராகச் சேர்வதற்கு விசேஷமான நிபந்தனை யெதுவும் கிடையாது. வயது வந்த யாரும் நாலணா சந்தா செலுத்தினால் இதில் அங்கத்தினர்தான். அப்படிச் சேர்ந்த பிறகு இவர்களுக்கு விசேஷமான ஒரு கட்டுப்பாடோ, வேறு நியமங்களோ கிடையாது. அப்படி நியமங்கள் ஏதோ ஒன்றிரண்டு இருந்தாலும் அவை ஒழுங்காக அநுஷ்டிக்கப்படுகின்றனவாவென்று பரிசீலனை செய்ய எவ்வித ஏற்பாடுகளும் இல்லை. மற்றும் காங்கிரஸில் அங்கத்தினர்களாகச் சேர்ந்தவர்கள், இன்னின்ன வேலைகளைச் செய்யவேண்டுமென்பதைப் பற்றி எவ்வித நிபந்தனையும் கிடையாது. எத்தனையோ சங்கங்களில் அங்கத்தினராயிருப்பதுபோல் காங்கிரஸிலும் அங்கத்தினராயிருக்கலாம். காங்கிரஸ் அங்கத்தினராயிருப்பதற்கென்று விசேஷ பொறுப்பு ஒன்றும் இல்லை. இந்த வகைகளில் காங்கிரஸானது அதிகமாகச் சீர்திருத்தமடைய வேண்டும்.

தவிர, காங்கிரசில் அங்கத்தினராயிருப்பவர்களில் எத்தனை பேருக்கு நமது தேசத்தின் அரசியலைப்பற்றியோ, உலக அரசியல் அமைப்புகளைப் பற்றியோ தெரியும் என்று கேட்கிறோம். இந்தத் துறையில் காங்கிரஸானது எவ்வித வேலையும் செய்யவில்லை. காங்கிரஸானது ஜனங்களுக்கு ஓரளவு அரசியல் உணர்ச்சியை உண்டு பண்ணியிருக்கிறதே தவிர, அரசியல் அறிவை ஊட்டவேயில்லை. நாம் ஏற்கனவே கூறியுள்ளபடி, காங்கிரஸ் பிரசாரகர்களுக்கென்றுவது ஆங்காங்கு அரசியல் போதனைப் பள்ளிக்கூடங்கள் ஸ்தாபிக்கப்படவேண்டும். காங்கிரஸ் ஸ்தாபனங்கள் என்னென்ன வேலைகளைச் செய்யவேண்டுமென்பதைப்பற்றி ஏற்கனவே நாம் விரிவாகக் கூறியுள்ளோமாதலால், இதைப்பற்றி அதிகமாகப் பிரஸ்தாபிக்க விரும்பவில்லை.

ஆசார சீர்திருத்தத்தை எடுத்துக் கொள்வோம். நமது பழைமைகளை

யெல்லாம் பரிகசித்துப் பேசுவதுதான் ஆசார சீர்திருத்தமென்று பலர் நினைக்கிறார்கள். இது மிகத் தவறு. எந்த ஒரு சீர்திருத்தமுமே, நமது தேசிய தனித்துவத்தை, நமது கலை ஞான பரம்பரையைப் போக்கடித்து விடுவதாயிருக்கக் கூடாது. எனவே, நமது புராதனக் கிரந்தங்களையும், நமது பூர்விக ஆசார விவகாரங்களையும், அவைகளின் ஆழ்ந்தகருத்துக்களைத்தெரிந்து கொள்ளாமல் அவற்றை இகழக் கூடாது. இங்ஙனம் பழமையை அடியோடு உதறித் தள்ளுகிறவர்கள், புதுமையான முறைகள் என்னென்னவற்றைக் கையாண்டிருக்கிறார்கள் என்று பார்த்தால் அஃதொன்றுமில்லை. இவர்களுடைய நிலைமை திரிசங்கு சொர்க்கமாகவே இருக்கிறது. பழமையை, புதிய காலத்திற்குத் தகுந்தாற்போல் மாற்றியமைத்துக் கொள்வதுதான் புத்திசாலித்தனமே தவிர, நமது ஜாதீய கௌரவத்தை விட்டுக்கொடுக்கிறமாதிரியான முறைகளைச் சீர்திருத்தம் என்ற பெயரால் அநுஷ்டானத்திற்குக் கொண்டுவரப் பார்ப்பது நம்முடைய வீழ்ச்சியை நாமே தேடிக்கொள்வதாகும்.

பெண் சீர்திருத்தமென்று சொல்லிக்கொண்டு ஆண்கள் பேச முன்வருவதுதான் நமக்கு விநோதமாயிருக்கிறது. பெண்களை நாம் பரம்பரை அடிமைத்தனத்தில் ஆழ்த்திவைத்திருப்பதாகவும், அவர்களை அடுப்பங்கரைப் பொம்மைகளாக ஆக்கிவிட்டிருப்பதாகவும், இந்தக் கோரமான நரகத்திலிருந்து அவர்களை விடுதலை செய்ய வேண்டுமென்றும் இன்னும் பலவகையாக ஆண் சிங்கங்கள் கர்ஜித்து வருகின்றன. பாரத ஜாதியானது எப்பொழுதுமே பெண்மைக்கு மகத்தான கௌரவம் கொடுத்துப் போற்றி வந்திருக்கிறது. சமுதாயம், அரசியல், கலை ஞானம் முதலிய எல்லாத் துறைகளிலும் அவர்கள் ஆண்களுக்கு நிகரான அந்தஸ்து பெற்று, முன்னேற்ற மார்க்கங்களில் சென்றிருக்கின்றனர். இந்தப் பரம்பரை வாசனை, பாரத ஜாதியை இன்னும் விட்டகலவில்லை. இப்படிப்பட்ட நிலைமையில் பெண்களைக் கைதூக்கி விடுகிறோமென்று செய்யப்படுகிற முயற்சிகள் யாவையும், அவர்களைக் கீழே இறக்கிவிடுகிற முயற்சிகளாகவே நாம் கொள்கிறோம். உதாரணமாக பெண்களுக்குக் கல்வி ஞானத்தைப் புகட்ட வேண்டுமென்று ஆண்மக்கள் பரிந்து பேசுகிறார்கள். எத்தகைய கல்வி ஞானத்தை! எந்தக் கல்வி முறையானது ஆண்மக்களை ஆழமான அடிமைத்தனத்தில் இழுத்துக்கொண்டு போகிறதோ, எந்தக் கல்வி முறையானது சுயமாகச் சிந்தனை செய்கிற சக்தியைச் சூனியமாக்கிவிட்டதோ, எந்தக் கல்வி முறையானது, நமது தேசத்தைப் பற்றியும், ஜாதியைப்பற்றியும் தாழ்வாக எண்ணும்படிச் செய்துவிட்டிருக்கிறதோ அந்தக் கல்வி முறையையே பெண்களுக்கும் புகட்ட வேண்டுமென்று சொல்கிறார்கள். தற்போது பெண்கள், அவர்கள் அறிந்தோ அறியாமலோ, நமது தேச கலாசார வாழ்க்கையில் ஒரு மதிப்பும் சிரத்தையும் காட்டி வருகிறார்கள். பாரதக் கதையென்றாலும் ராமாயணக் கதையென்றாலும், அதற்கு ஒரு பெண்ணின் உள்ளம் உடனே இசைந்து கொடுக்கிறது. பெண் மக்கள், இப்பொழுதுள்ள அள

வுக்கேனும் தமது தேசிய கலாசாரத்தில் ஒருவித பக்தி செலுத்திவருவதனால்தான், பாரத ஜாதி வாழ்ந்து கொண்டிருக்கிறதென்று பெருமையோடு பேசிக்கொள்கிறோம். இவைகளையெல்லாம் போக்கடித்துக் கொள்ள வேண்டுமானால், தற்போதைய கல்வி முறையை அவர்களுக்குப் புகட்டலாம். ஆனால் உண்மையான இந்தியன் இதை விரும்புவானா? தற்காலக் கல்வி முறை ஆண் மக்களுக்கு உரித்தானதல்லவென்று நாம் பலமாகக் கண்டித்து வருகிறோம். அப்படியிருக்க இதே கல்வி முறையைப் பெண் மக்களுக்கும் புகட்ட வேண்டுமென்று சீர்திருத்தப் பாட்டு பாடுவதில் என்ன அர்த்தமிருக்கிறது? நமது நாட்டுச் சங்கீதம், சிற்பம், காவியம், இதிகாசம் முதலிய துறைகளில் நமது சகோதரிகளுக்குக் கல்விப் பயிற்சி அளிக்கவேண்டுமென்று சொன்னால் அதில் அர்த்தமிருக்கிறது. அப்படிப் போதிக்கப்படுகிற கல்வியும் தாய்ப்பாஷையின் மூலமாக இருக்கவேண்டும். இவைகளையெல்லாம் விடுத்து, எந்தக் கல்வி ஆண் மக்களுக்கு வேண்டாமென்று சொல்லிக்கொண்டு வருகிறோமோ, அதே கல்வியைப் பெண்களுக்குப் போதிக்க வேண்டுமென்று சொல்வது நுனிக் கிளையிலிருந்து அடிமரத்தை வெட்டுவதுபோலத்தான். தவிர, ஆண் மக்களே அரசியல் அடிமைத்தனத்தில் உழன்றுகொண்டிருக்கிறபோது, அவர்கள், பெண் மக்களை அடிமைத்தனத்திலிருந்து விடுதலை செய்வது எப்படி முடியும்?

மற்றும், அடுப்பூதும் தொழிலை மிகக் கேவலமாகக் கருதிச் சில ஆண் மக்கள் பேசுகின்றனர். இது பெரிதும் வருந்தத்தக்கது. மனிதன் இந்த உலகத்தில் படாத பாடுகளெல்லாம் படுவது இந்த ஒரு சாண் வயிற்றுக்கே. இந்த ஒரு சாண் வயிற்றை நிரப்புவதே மனித வாழ்க்கையின் முக்கிய லட்சியமில்லாவிட்டாலும், இதன் அவசியத்தை யாரும் மறுக்கமுடியாது. உலகத்திலே நடக்கிற பல புரட்சிகளும், எல்லா மக்களுக்கும் தேவையான உணவு போதுமான அளவு கிடைக்கவேண்டுமென்ற நோக்கத்தைக்கொண்டே நடைபெறுகின்றன. இப்படிப்பட்ட முக்கியமான தேவையைப் பூர்த்தி செய்யும் விஷயத்தில் பெண்மக்களுக்குத்தான் முக்கியமான பங்குண்டு. அப்படியிருக்க நமது தேவையைப் பூர்த்தி செய்கிற இந்த அம்சத்தை நாம் பரிகசித்தல் பொருந்துமா? இப்படி நாம் கூறுவதனால் பெண்மக்களை அடுப்பங்கரையிலேயே இறுத்தி வைத்துவிட வேண்டுமென்பது அர்த்தமல்ல. அதனை அலட்சியப்படுத்திவிடக்கூடாதென்பதுதான் நமது கோரிக்கை. ஏனென்றால், ஒரு சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள்; ஒழுங்கான குடும்ப வாழ்க்கையை நடத்தத் தெரியாவிட்டால், அந்தச் சமுதாய அமைப்பு நாளாவட்டத்தில் கட்டுத் தளர்ந்துவிடுகிறது; அதனுடைய ஜாதீய கௌரவமே போய்விடுகிறது. சீனாவில், குடும்பத்திற்கு எப்பொழுதுமே ஒரு தனி கௌரவமும் மதிப்பும் கொடுக்கப்பட்டு வந்திருக்கிறது. சீன நாகரிகத்தின் முக்கியமான அம்சம் இது. இந்தியாவிலும் இல்லற வாழ்க்கைக்கு நமது முன்னோர்கள் முக்கியத்துவம் கொடுத்துப் பேசி வந்திருக்கிறார்கள். வேதங்களிலும், உபநிஷ

தங்களிலும், ஒரு கிரகஸ்தனுடைய கடமைகள் மிக அழகாக வற்புறுத்தப் பட்டிருக்கின்றன. இப்படிப்பட்ட கிரகஸ்த தர்மம் இனிதாக நடைபெற பெண்ணின் துணை அவசியம். அந்தப் பெண்ணோ, சில சுபாவமுடையவளாயும், பாரம்பர்யப் பெருமையிலே பக்தி கொண்டவளாயும் இருக்க வேண்டும். தற்காலக் கல்விமுறை இவைகளையெல்லாம் பூரணமாக அளிக்கின்றனவாவென்று நாம் கேட்கிறோம். பொதுவாகவே, நம்முடைய அபிப்பிராய மென்னவென்றால், ஆண்களுக்குக் கொடுக்கப்படுகிற கல்வி மாதிரியே, பெண்களுக்கும் கொடுக்கப்படக்கூடாது. மற்றும், ஆண்களும் பெண்களும் ஒரே வகுப்பில் ஒரே மாதிரியாகப் படித்தல் என்ற "உடன் பயிற்சி முறை" யென்கிற நவீன முறையையும் நாம் பலமாக ஆட்சேபிக்கிறோம். ஆங்கிலம் பயின்ற அறிஞர்கள் சிலர், இவற்றையெல்லாம் சீர்திருத்தங்களென்று சொல்லிக் கைகொட்டி ஆரவாரித்து வரவேற்றபோதிலும், இவை நமது ஜாதியின் கட்டுக்கோப்பை வெகு விரைவில் குலைத்துவிடுமென்று அஞ்சுகிறோம்.

தவிர, நாம் அநுஷ்டிக்கிற எந்தச் சீர்திருத்த முறைகளும் அந்நிய ஆதிக்கத்தை வலுப்படுத்துவதாயிருக்கக் கூடாது. உதாரணமாக, உடைச் சீர்திருத்த மென்றும், உணவுச் சீர்திருத்தமென்றும் சொல்கிறோம். இந்தச்சீர்திருத்தங்கள், அந்நியப்பொருள்களின் இறக்குமதியை அதிகப்படுத்துமானால், இவற்றினால் தேசத்திற்குத் தீமையே தவிர நன்மை இல்லை. நமது நாட்டுப் பொருள்களைக் கொண்டு தயாரிக்கப் படுகிற உடைகளை நமது நாட்டுச் சம்பிரதாயப்படி அணிந்து கொள்வதுதான் சீர்திருத்தமே தவிர, மேனாட்டு மோஸ்தரில் உடையணிந்து சீர்திருத்தம் பேசுவது நம்மை நாம் ஏமாற்றிக் கொள்வதாகும். எளிய வாழ்க்கை யென்று சொல்லிக் கொண்டு, கதராடை அணிகிறோம். இந்த அளவுக்கு நல்லதுதான். ஆனால் இந்தக் கதராடை மீது, மேனாட்டு உயர்தர வாசனைத் திரவியங்களை உபயோகிக்கிறோம். இஃதென்ன எளிய வாழ்க்கை! இஃதென்ன சீர்திருத்தம்!

சீர்திருத்தமானது, அடிப்படையில் ஆரம்பிக்க வேண்டுமென்று மேலே கூறினோம். இது முக்கியமானவிஷயம். ஆனால் நமது சீர்திருத்த வாதிகள் இதை அலட்சியமே படுத்தியிருக்கிறார்கள். உதாரணமாக, நமது சீர்திருத்தவாதிகள், ஏழை ஜனங்களடங்கிய ஒரு கூட்டத்தில் "சகோதரர்களே! நீங்களெல்லோரும் சுத்தமாக இருக்க வேண்டும். 'கூழானாலும் குளித்துக் குடி; கந்தையானாலும் கசக்கி உடுத்து' என்பது பழமொழி. சுத்தமாயிருப்பதே தெய்விகத் தன்மை" என்று பலவிதமான உபதேசங்களைச் செய்து விட்டு வருகிறார்கள். வாஸ்தவம், குளித்து விட்டுக் கூழைக் குடிக்க வேண்டியதுதான். ஆனால் அந்தக் கூழ், அந்த ஏழைக்கு ஒழுங்காகக் கிடைக்கிறதா? ஒரு சாண் அகலமுள்ள கந்தைத் துணி, மானத்தை மூட அவனுக்குக் கிடைக்கிறதா? இவைகளை அவனுக்கு முதலில் கிடைக்கும்படிச் செய்து விட்டு, பிறகு அவனுக்குச் சீர்திருத்த உபதேசங்கள் செய்தால் அதில் பயனும் உண்டு;

அர்த்தமுமிருக்கிறது. சேரிகளுக்குச் சென்று, அங்குள்ளவர்களைப் பார்த்து "தினந்தோறும் நீங்கள் ஸ்நானஞ் செய்ய வேண்டும்" என்று நமது நண்பர்களிற் பலர் உபதேசித்திருப்பதை நாம் பல முறை கேட்டிருக்கிறோம். ஆனால் அந்தச் சேரியில், குடிக்கவோ, குளிக்கவோ என்ன வசதிகள் இருக்கின்றனவென்பதை இவர்கள் கவனிப்பதேயில்லை. அந்த வசதிகளைச் செய்துகொடுக்க இவர்கள் எவ்வித ஏற்பாடுகளும் செய்து கொடுப்பதில்லை. இதனால், இவர்களுடைய சீர்திருத்த முயற்சிகளெல்லாம் விழலுக்கிறைத்த நீராகிவிடுகின்றன.

ஆகவே, நம்முடைய எந்தச் சீர்திருத்த முயற்சியும், நமது ஜாதிய கௌரவத்தை உயர்த்திக் கொடுப்பதாயிருக்கவேண்டுமென்கிற ஓர் அபிசந்தைமட்டும் இதன் மூலம் சீர்திருத்த அன்பர்களுக்கு வற்புறுத்த விரும்புகிறோம்.

சென்னை நகரத்தின் ஜனத் தொகை 1941ம் வருஷ ஜன கணிதப்படி 7,77,000. 1931ம் வருஷ ஜன கணிதப்படி 6,47,000.

ஃ ஃ ஃ ஃ

1941ம் வருஷத்து ஜன கணிதத்தின்படி ரங்கூன் நகரத்தின் ஜனத் தொகை 4.98,369. 1931ம் வருஷத்தில் 3,98,967.



1941

ஏப்ரல்

1 அத்லாந்திக் மகா சமுத்திரத்தில் சென்று கொண்டிருந்த இத்தாலியக் கப்பல்களையும் ஜர்மானியக் கப்பல்களையும் அமெரிக்கா கைப்பற்றிக் கொண்டுவிட்டது. அப்படிப்பட்ட கப்பல்களை உடனே கொடுத்துவிட வேண்டுமென்று ஜெர்மனியும், இத்தலியும் அமெரிக்காவைக் கேட்டிருக்கின்றன.

யூகோஸ்லேவியாவில் வசித்துக் கொண்டிருந்த எல்லா ஜெர்மானியர்களும் ஜெர்மனிக்குத் திரும்பிவிட்டார்கள். இப்படியே பிரிட்டிஷாரும் இத்தாலியரும் கிளம்பி விட்டார்கள். இதனால் யூகோஸ்லேவியாவுக்கும் இத்தலிக்கும் பிணக்கு அதிகரித்துக்கொண்டு வருவதாகத் தெரிகிறது.

அபிசீனியாவிலுள்ள அஸ்மாரா என்ற நகரம் பிரிட்டிஷ் படைகளால் கைப்பற்றப்பட்டது.

ரோமாபுரியில் முஸோலினியும் மட்ஸுகோவும் சந்தித்துப் பேசினார்கள்.

ஹங்கேரியின் பிரதம மந்திரியான கவுண்ட் டெலிகி தற்கொலை செய்துகொண்டு இறந்துபோனார்.

லண்டனில் சீனத் தூதரான டாக்டர் குவோ-தை-சி என்பவர் சீன அரசாங்கத்தின் அந்நியநாட்டு மந்திரியாக நியமிக்கப் பட்டார்.

2 பஞ்சாப் மாகாண ரெவினியு மந்திரியாயிருந்த ஸர் சுந்தர்சிங் மஜீதியா 69வது வயதில் காலமாகி விட்டார்.

தான் கைப்பற்றிக்கொண்ட இத்தாலிய ஜெர்மானியக் கப்பல்களை விடுதலைசெய்ய முடியாதென்று அமெரிக்க அரசாங்கம் கூறிவிட்டது.

யூகோஸ்லேவியாவில் ஏற்பட்டுள்ள பிணக்கு சமாதான முறையில் தீராது என்று ஜெர்மனில் பிரசாரஞ் செய்யப்படுகிறது.

இன்று இத்தாலிய யுத்தக்கப்பல் ஒன்று மத்திய தரைக்கடலில் மூழ்கடிக்கப் பட்டது.

சென்ற வருஷம் ரங்கூனில் நடைபெற்ற ஹிந்து முஸ்லீம் கலவரம் சம்பந்தமாக பர்மா பாதுகாப்புச் சட்டப்படி 163 இந்தியர்கள் பர்மாவிலிருந்து வெளியேற்றப் பட்டிருக்கிறார்களென்று பர்மா சட்டசபையில் சொல்லப்பட்டது.

பர்மாவுக்கும் சீனாவுக்கும் ரெயில் தொடர்பு ஏற்படுகிறதன் சம்பந்தமாக எல்லா ஏற்பாடுகளும் முடிந்து விட்டனவென்றும், இதற்குப் பிரிட்டிஷ் அரசாங்கத்தார் பணஉதவி செய்வரென்றும் காமன்ஸ் சபையில் இந்தியா மந்திரி கூறினார்.

ஸர் வில்லியம் ஹாதார்ன் லூயிஸ் என்பவர் இன்று ஒரிஸா மாகாண கவர்னராக

ராஜவிசுவாசப் பிரமாணம் செய்து கொண்டார்.

அல்பேனியாவிலுள்ள இந்தியப் படைகளின் பெரும் பகுதியை கிரேக்கப்படைகள் முறியடித்துவிட்டனவென்று சொல்லப்படுகிறது.

3 இன்று மத்தியதரைக் கடலில் இரண்டு இத்தாலிய யுத்தக்கப்பல்கள் மூழ்கடிக்கப்பட்டன.

இந்தோ—பர்மா வியாபார ஒப்பந்தம் இன்று டெல்லியில் கையெழுத்திடப் பெற்றது.

தென்னிந்திய இளைஞர்களுக்கு ராணுவப் பயிற்சி கொடுக்க வேண்டுமென்று சென்னை மாகாண ஹிந்து மகா சபை போர்டார் ஒரு தீர்மானம் நிறைவேற்றியிருக்கின்றனர்.

இன்று மட்ஸுஓகோவும் ஹிட்லரும் பெர்லின் நகரத்தில் சந்தித்துப்பேசினார்கள்.

ஈராக் மந்திரிச் சபையில் குழப்பம் ஏற்பட்டிருக்கிறது.

யூகோஸ்லேவியா அரசாங்கம், யுத்த தளவாடங்களின் உதவி கோரி அமெரிக்காவுக்கு ஒரு விண்ணப்பம் செய்துகொண்டிருக்கிறது.

அல்பேனியாவில் இத்தாலியர் வசமிருக்கும் ஸ்தலங்களை பிரிட்டிஷ் ஆகாய விமானப் படைகள் தாக்கின.

யூகோஸ்லேவியாவில் பீட்டர் மன்னர் அரச பதவியை ஏற்றதை சோவியத் அரசாங்கம் அங்கீகரித்திருக்கிறது.

பிரிஸ்டல் நகரம் இன்று ஜெர்மன் ஆகாய விமானங்களால் பலமாகத் தாக்கப்பட்டது.

ஜெர்மனிக்கு வரும் எல்லாத் துருக்கியச் சாமான்களும் இனி யூகோஸ்லேவியா வழியாக வரக்கூடாதென்று ஜெர்மானிய அரசாங்கம் ஓர் உத்திரவு பிறப்பித்திருக்கிறது.

சமீப காலத்தில் காங்கிரஸானது, பொது ஜன சட்டமறுப்பியக்கத்தைத் தொடங்காதென்று டாக்டர் ராஜேந்திர பிரசாத் இன்று சென்னையில் கூறினார்.

5 அபிசீனியாவிலுள்ள அடோவா நகரம் பிரிட்டிஷ் துருப்புகளால் கைப்பற்றப்பட்டது.

சென்னை மாகாண யுத்த நிதிக்கு இது வரை, ஒரு கோடி ரூபாய் சேர்ந்திருக்கிறது.

ஜெர்மனிக்கும் யூகோஸ்லேவியாவுக்கும் இன்று யுத்தம் ஆரம்பித்துவிட்டது.

அமெரிக்கா அரசாங்கம், இந்த மார்ச் மாதத்தில் 1216 ஆகாயவிமானங்களைத் தயாரித்திருக்கிறது.

மட்ஸுஓகோ இன்று ஜெர்மனியிலிருந்து ஜப்பானுக்குப் புறப்பட்டார்.

தைலாந்தின் பிரதம மந்திரி இன்று ஜப்பானுக்கு ஆகாய விமான மூலம் சென்றிருக்கிறார்.

ஸ்ரீ சி. எப். ஆண்ட்ரூஸின் முதல் சிரார்த்த தினம் இன்று சாந்திநிகேதனத்தில் கொண்டாடப்பெற்றது.

6 பண்டித ஜவஹர்லால் நேரு எழுதியுள்ள "இந்தியாவின் ஒற்றுமை" என்ற புதிய புத்தகம் இன்று லண்டனில் வெளியாயிற்று.

இன்று யூகோஸ்லேவியாவின் தலைநகரான பெல்கிரேட் நகரத்தின்மீது ஜெர்மன் ஆகாய விமானங்கள் குண்டுகளைப் பொழிந்தன.

ருஷ்யாவும் யூகோஸ்லேவியாவும் இன்று ஒரு சிநேக ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டன.

ஜெர்மனியின் எதிர்ப்பை, கிரேக்க ஜனங்கள் தீவிரமாக எதிர்த்து நிற்க வேண்டுமென்று கிரீஸ் மன்னரான ஜார்ஜ் ஒரு வேண்டுகோள் விடுத்திருக்கிறார்.

அபிசீனியாவின் தலைநகரான அடிஸ் அபாபாவில் பிரிட்டிஷ் துருப்புகள் பிரவேசம் செய்துவிட்டன.

6 சீன—ஜப்பானிய யுத்தத்தில் கியாங்ஸி மாகாணத்தில் நடைபெற்ற யுத்தத்தில் இருபதினாயிரம் ஜப்பானியர்கள் இறந்துவிட்டார்களென்று ஒரு செய்தி கூறுகிறது.

பால்கன் பிரச்னையைப்பற்றி ஆலோசிக்க துருக்கிய மந்திரிச் சபை இன்று கூடியது.

ஜெர்மன் படையெடுப்பை கிரேக்கப் படைகள் தீவிரமாக எதிர்த்து நிற்கின்றன.

7 சென்னை நகரசபைக் கட்டிடத்தின்மீது இனி தேசியக் கொடி பறக்கக்கூடாதென்றும், காங்கிரஸ் சிப்பந்திகள் கதர் அணியக்கூடாதென்றும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன.

பிரிட்டிஷ் அரசாங்க வரவு செலவுத் திட்டத்தை இன்று காமன்ஸ் சபையில் பொக்கிஷ மந்திரி ஆஜர்படுத்தினார். இதன் விளைவாக பிரிட்டிஷ் ஜனங்கள் 25 கோடி பவுன் அதிக வரியாகச் செலுத்தவேண்டியிருக்கும்.

யூகோஸ்லேவிய அரசாங்கத்திற்குப் பிரிட்டிஷ் அரசாங்கத்தினர் ஒரு பாராட்டுச் செய்தியை அனுப்பியிருக்கின்றனர்.

பிரிட்டிஷ் அரசாங்கமும், ஹங்கேரிய அரசாங்கமும் சிநேகத்தை அறுத்துக் கொண்டன.

இந்தோ—பர்மா வியாபார ஒப்பந்தத்தின் ஷரத்துகள் இன்று அமுலுக்குக் கொண்டுவரப்பட்டிருக்கின்றன.

8 கவி ரவீந்திரநாத் தாகூரின் தேக நிலை சௌகரியமாயில்லையென்று சொல்லப்படுகிறது.

யூகோஸ்லேவியாவுக்கு எல்லாவிதமான உதவிகளையும் அளிப்பதாக, பிரசிடெண்ட் ரூஸ்வெல்ட் பீட்டர் மன்னருக்கு ஒரு செய்தி அனுப்பியிருக்கிறார்.

யூகோஸ்லேவியாவின் தலைநகரமான பெல்கிரேட் ஜெர்மன் ஆகாய விமானங்களால் பலமாகத் தாக்கப்படுகிறது.

ஜெர்மன் ஆகாயவிமானங்கள் இங்கிலாந்தின் பல பாகங்களைத் தாக்கின. மார்ச் மாதம் முடிய ஒரு மாதத்தில், இந்தத் தாக்குதல்களினால் 4259 பேர் மரணமடைந்திருக்கின்றனர். 5557 பேர் காயமடைந்திருக்கின்றனர்.

ரவீந்திரநாத் தாகூரின் விசுவபாரதி சர்வ கலாசாலைக்கு இந்தியா அரசாங்கத்தாரும் வங்காள அரசாங்கத்தாரும் முறையே இருபத்தையாயிரம் ரூபாய்வீதம் நன்கொடையளித்திருக்கின்றனர்.

9 இன்று பிரிட்டிஷ் காமன்ஸ் சபையில் மிஸ்டர் சர்ச்சில், யுத்த நிலைமையை விளக்கி நீண்டதொரு சொற்பொழிவு நிகழ்த்தினார்.

ஜெர்மனியிலுள்ள கீல் வாய்க்கால் ஓரமாயுள்ள நகரங்கள்மீது பிரிட்டிஷ் ஆகாய விமானங்கள் பலமாகத் தாக்கின.

அபிசீனியாவிலுள்ள மஸ்ஸோவா நகரம் இன்று பிரிட்டிஷார் வசப்பட்டது.

கிரீஸிலுள்ள சாலோனிகா நகரத்திற்குள் ஜெர்மன் துருப்புகள் பிரவேசித்தன.

ஆசியாவின் கிழக்குப் பாகத்தில் சமீபத்தில் ஒரு பெரிய நெருக்கடி உண்டாகலாமென்று ஜப்பானிய உள்நாட்டு மந்திரி கூறினார்.

பிரிட்டிஷ் அரசாங்கத்திற்காக, அமெரிக்க அரசாங்கம் இரண்டாயிரம் கப்பல்களைக் கட்டத் தீர்மானித்திருக்கிறது.

10 சென்ற மார்ச் மாதம் முடிய ஒரு மாதத்தில் இத்தாலியப் படைகளில் 21656 பேர் மரணமடைந்திருக்கின்றனர் என்று ஒரு செய்தி கூறுகிறது.

பெர்லின் நகரத்தை பிரிட்டிஷ் ஆகாய விமானங்கள் பலமாகத் தாக்கின.

லிபியாவில் ஜெர்மன் படைகள் முன்னேறிக்கொண்டு வருகின்றன. மூன்று பிரிட்டிஷ் சேனாதிபதிகள், ஜெர்மானியர்கள் வசம் சிறைப்பட்டனர்.

பம்பாய் நகரத்தின் ஜனத்தொகைக் கணக்கு இப்பொழுது வெளியாயிருக்கிறது. இதன்படி மொத்த ஜனத்தொகை சுமார் 15 லட்சம்.

வேலூர் சிறையில் வைக்கப்பட்டிருக்கும் அரசியல் கைதிகள் உண்ணாவிரதமிருப்பதாகத் தெரிகிறது.

11 கிரீஸில், பிரிட்டிஷ் படைகளும் ஜெர்மன் படைகளும் சந்தித்துப் பலத்த போராட்டம் நடைபெறுகிறது.

ஜப்பானுக்கும் ருஷ்யாவுக்கும் அனாக்கிரமிப்பு ஒப்பந்தம் ஏற்பட்டிருக்கிறது.

அடிஸ் அபாபாவில் ஹெயிலி செலாஸியின் கொடி பறக்கிறது.

வட ஆப்ரிக்காவில் டோப்ருக் என்ற பிரதேசத்தில் ஜெர்மானியத் துருப்புகளும் பிரிட்டிஷ் துருப்புகளும் சந்தித்துவிட்டன.

சீனாவுக்கு ருஷ்யா செய்துகொண்டு வருகிற உதவியில் எவ்வித மாற்றமும் ஏற்படாதென்று ருஷ்ய அரசாங்கம் உறுதி கூறியிருக்கிறது.

12 யூகோஸ்லேவியாவின் ஒரு பாகமாயிருந்த க்ரோஷியா பிரதேசம் ஒரு சுதந்திர நாடாக ஜெர்மனியால் அங்கீகரிக்கப்பட்டிருக்கிறது.

அகில இந்திய முஸ்லீம் லீக்கின் வருஷக் கூட்டம் இன்று சென்னையில் ஜனாப் ஜின்னாவின் தலைமையில் கூடியது. அவர் தமது தலைமையுரையில் பாகிஸ்தான் திட்டத்தை எல்லா அரசியல் கட்சியினரும் அங்கீகரிக்க வேண்டுமென்பதை வற்புறுத்தினார்.

கொச்சி மகாராஜா இன்று இறந்து போனார்.

13 சோவியத் ஜப்பானிய அனாக்கிரமிப்பு ஒப்பந்தம் இன்று கையெழுத்திடப்பெற்றது.

ஆப்ரிக்காவில் பார்டியா நகரத்தை ஜெர்மானியர்கள் ஆக்ரமித்துக்கொண்டுவிட்டார்கள்.

ஈராக்கில் ஏற்பட்டுள்ள புதிய மந்திரிச் சபையை அங்கீகரிக்க முடியாதென்று பிரிட்டிஷ் அரசாங்கம் தெரிவித்துவிட்டது.

யுத்தத்தில் கொலைக் கருவிகளை அதிகமாக உபயோகிக்க வேண்டாமென்று போப் பாசர் இன்று ஒரு செய்தி விடுத்திருக்கிறார்.

யூகோஸ்லேவியர்கள் இந்தப் போராட்டத்தில் தைரியத்தை இழக்கக்கூடாதென்று மிஸ்டர் சர்ச்சில் ஒரு செய்தி விடுத்திருக்கிறார்.

14 கவி ரவீந்திர நாத் தாகூரின் எண்பதாவது பிறந்த தினம் இன்று சாந்திநிகேதனத்தில்

கொண்டாடப்பட்டது. மகாத்மா காந்தி சியாங்-கை-ஷேக் முதலியவர்கள் ஆசிச் செய்திகள் அனுப்பியிருக்கிறார்கள்.

கிரீஸில் ஜெர்மானியர் நடத்திவரும் யுத்தத்தில் பிரிட்டிஷ் படைகள் ஒழுங்காகப் பின்வாங்கிக் கொண்டு வருகின்றன.

ருஷ்ய—ஜப்பானிய ஒப்பந்தத்தை சீன அரசாங்கம் கண்டிக்கிறது.

15 நார்வேயிலுள்ள ஒரு துறைமுகத்தை பிரிட்டிஷ் ஆகாய விமானங்கள் பலமாகத் தாக்கின.

அபிசீனியாவில் பிரிட்டிஷ் படைகள் அதிக தூரம் முன்னேறிக்கொண்டு வருவதாகச் சொல்லப் படுகிறது.

பர்மாவில் இந்தியர்கள் குடியேறுவதன் சம்பந்தமாக இந்தியா அரசாங்கத்தாரும் பர்மா அரசாங்கத்தாரும் செய்து கொண்ட ஒப்பந்தத்தை ரத்து செய்வதற்கு ஒரு வருஷ நோட்டீஸை பர்மா அரசாங்கம், இந்தியா அரசாங்கத்திற்குக் கொடுத்திருக்கிறது.

மத்திய அமெரிக்காவிலுள்ள மெக்ஸிகோவில் பெரிய பூகம்ப அதிர்ச்சி ஏற்பட்டு பதினையாயிரம் பேர் இறந்து விட்டனர்.

16 கிரீஸில் பிரிட்டிஷ் துருப்புகளும் ஜெர்மன் துருப்புகளும் கலந்து சண்டை செய்கின்றன.

கானடா தேசத்துப் பிரதம மந்திரியாகிய மெக்கன்ஸி கிங் என்பவர், பிரசிடெண்ட் ரூஸ்வெல்ட்டினுடைய அழைப்புக்கிணங்க வாஷிங்டன் நகரத்திற்குச் சென்றிருக்கிறார்.

அமெரிக்காவில் வசிக்கும் போலிஷ்காரர்கள், தனிப்படையினராகத் திரட்டப்பட்டு இங்கிலாந்துக்கு அனுப்பப்படுவார்களென்று அமெரிக்காவிலிருக்கும் போலந்தின் மாஜி பிரதம மந்திரியான தளபதி ஸிகோர்ஸ்கி கூறினார்.

ஜப்பானிலுள்ள டோக்கியோ நகரத்திற்கு 180 மைல் தூரத்திலுள்ள டோயாமா வென்ற ஊரில் ஒரு பெரிய நெருப்பு பற்றிக் கொண்டு ஐயாயிரம் வீடுகள் எரிந்து போயின.

அபிசீனியாவில் இத்தாலிய ராஜப் பிரதிநிதியாக இருக்கும் அவோஸ்டா பிரபு, பிரிட்டிஷ் சேனாதிபதியான தளபதி கன்னிங்ஹாமுக்கு ஒரு சமாதான தூது விடுத்திருக்கிறார்.

ருஷ்யாவுக்குச் சமீபமாயுள்ள ஜெர்மன் எல்லைப் புறத்தில் ஜெர்மானியர்கள் அதிக பந்தோபஸ்து செய்து வருகிறார்களென்று தெரிகிறது.

இன்று, ஜெர்மன் ஆகாய விமானங்கள், லண்டன்நகரத்தைப் பலமாகத்தாக்கின.

17 சமீபத்தில் எடுக்கப்பட்ட ஜன கணிதத்தின்படி ஜப்பானின் ஜனத் தொகை 105,000,000 என்று கணக்கிடப் பட்டிருக்கிறது.

சீனாவுக்குள் எவ்வித சாமானும் போக முடியாதபடி, தெற்கு சீனக் கடலோரப் பிரதேச முழுவதையும் ஜப்பானியர்கள் தடுத்திருக்கின்றனர்.

கிரேக்கப் போர் முகத்தின் பல பாகங்களிலும் ஜெர்மானியர் முன்னேறிக் கொண்டு வருவதாகச் சொல்லப்படுகிறது.

பிரிட்டிஷ் ஆகாய விமானங்கள், ஜெர்மனியின் பல பாகங்களிலும் சென்று தாக்கின.

அபிசீனியாவில், பிரிட்டிஷ் துருப்புகள் முன்னேறிக் கொண்டு வருவதாகச் சொல்லப்படுகிறது.

யூகோஸ்லேவியாவின் ஒரு பாகத்தில் க்ரோஷியர்கள் என்ற ஒரு ஜாதியார் வசிக்கின்றனர். யூகோஸ்லேவியா, ஜெர்

மானிய ஆதிக்கத்துக்குட்பட்ட பிறகு, இவர்களுக்குத் தனி அரசாங்கம் ஏற்படுத்தப் பெற்றிருக்கிறது.

சிந்து மாகாண அரசாங்கத்தில் ஆறுவது மந்திரி யொருவர் நியமிக்கப் பட்டிருக்கிறார்.

18 கிரேக்கப் பிரதம மந்திரியான அலெக்ஸாந்தர் கோரிட்ஜிஸ் என்பவர் இன்று திடீரென்று இறந்து போனார். இவர், சென்ற ஜனவரி மாதம் 9ந் தேதிதான் பிரதம மந்திரிப் பதவியை ஏற்றுக் கொண்டார்.

பிரெஞ்சுத் துருப்புகள் தைலாந்தின் எல்லையில் அத்து மீறிப் பிரவேசித்தன வென்பதற்காகக் கொச்சின் சைனாவுக்கும் தைலாந்திற்கும் மனஸ்தாபம் ஏற்பட்டிருக்கிறது.

பர்மாவின் புதிய கவர்னரான ஸர் டார்மன் ஸ்மித், மனைவி சகிதம் இன்று பம்பாய்த் துறைமுகத்தில் வந்திறங்கினார்.

இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்படும் படச் சுருள்களுக்கு இறக்குமதி வரி விதிக்கப் படுவதால், அதனைச் செலுத்தித் தாங்கள் படங்களை ஓட்ட முடியாதென்று சொல்லி, இரங்கூனிலுள்ள எல்லாச் சினிமாக் கொட்டகைச் சொந்தக்காரர்களும் கொட்டகைகளை மூடி விட்டனர்.

19 பஸ்ராவில் பிரிட்டிஷ் துருப்புகள் வந்திறங்கி யிருக்கின்றன.

மால்டா தீவின் மீது இன்று மீண்டும் ஜெர்மன் ஆகாய விமானங்கள் குண்டுகளைப் பொழிந்தன.

இன்று, லண்டன் நகரம் ஜெர்மன் ஆகாய விமானங்களால் பலமாகத் தாக்கப் பட்டது.

வட ஆப்ரிக்காவில் ஜெர்மானியப் படைகள் முன்னேறி வந்ததைப் பிரிட்டிஷ் படைகள் தடுத்து விட்டன.

கிரேக்கப் போர் முனையில், பிரிட்டிஷ் படைகள் இன்று ஒழுங்காகப் பின் வாங்கிக் கொண்டிருக்கின்றன.

20 ஹிட்லரின் 52வது பிறந்த நாள் இன்று ஜெர்மனி முழுவதும் கொண்டாடப் பட்டதாகத் தெரிகிறது.

கிரீஸில் புதிய மந்திரிச் சபை ஏற்பட்டு விட்டது. அரசரான ஜார்ஜ் மன்னரே, மந்திரிச் சபையின் தலைவராயிருப்பார்.

கிரேக்கப் போர் முகத்தில் போராடும் எல்லா ஏகாதிபத்தியப் படைகளும் இன்று ஒழுங்காகப் பின் வாங்கிக் கொண்டிருக்கின்றன.

21 யூகோஸ்லேவிய மன்னரான பீட்டரும், அவருடைய மந்திரிகளிற் சிலரும் இப்பொழுது ஜெருசலேம் நகரத்திற்கு வந்து சேர்ந்து விட்டனர்.

அபிசீனியாவின் இத்தாலிய ராஜப் பிரதிநிதியான அவோஸ்டா பிரபு, பிரிட்டிஷ் சேனாதிபதிக்குச் சரணடைய முடியாதென்று கூறி விட்டதாகச் சொல்லப் படுகிறது.

சீன ஜப்பானிய யுத்தத்தில் ஜப்பானியத் துருப்புகள் பூச்சௌ என்ற நகரத்தில் பிரவேசித்தன.

இங்கிலாந்திலுள்ள ப்ளிமௌத் நகரம் இன்று ஜெர்மன் ஆகாய விமானங்களால் பலமாகத் தாக்கப் பட்டது.

22 வட ஆப்ரிக்காவிலுள்ள டிரிபோலி துறைமுகம், பிரிட்டிஷ் ஆகாய விமானங்களால் பலமாகத் தாக்கப் பட்டது.

பால்கன் பிரதேசங்களுக்குச் சாமான்களெடுத்துச் சென்ற ஜெர்மானியக் கப்

பல்கன் சிலவற்றை பிரிட்டிஷ் ஆகாய விமானங்கள் தாக்கி மூழ்கடித்து விட்டன.

கிரேக்கப் போர் முகத்திற்கு ஆஸ்திரேலியத் துருப்புகள் அனுப்பப்பட்டதைப் பற்றி ஆஸ்திரேலியப் பார்லிமெண்டில் கேள்விகள் பிறந்தன.

ஹிட்லரும், இத்தாலிய அந்நிய நாட்டு மந்திரியாகிய கவுண்ட் சியானோவும் இன்று வியன்னாவில் சந்தித்துப் பேசினார்கள்.

பால்கன் பிரதேசத்தில் நடைபெறும் சண்டையைப் பற்றி மிஸ்டர் சர்ச்சில் நீண்டதொரு சொற்பொழிவு நிகழ்த்தினார்.

சமீபத்தில் பிரிட்டிஷ் அரசாங்கத்தினர், ஸ்பெயினுக்குக் கொடுத்த கடன் தொகையைப் பற்றி பார்லிமெண்டில் பல ஆட்சேபணைகள் எழுந்தன.

இந்தியாவில் இப்பொழுது பெரும்பாலான மாகாணங்கள், கவர்னர்களின் நேரான நிருவாகத்திற்குட் பட்டிருக்கின்றன வல்லவா? இந்த நிருவாக காலத்தை இன்னும் ஒரு வருஷம் நீடித்து வைக்க வேண்டுமென்று பிரிட்டிஷ் பார்லிமெண்டில் இந்தியா மந்திரி ஒரு தீர்மானம் கொண்டுவர அது ஏகமனதாக நிறைவேற்றப் பட்டது.

23 கிரேக்க மன்னரான ஜார்ஜ், தமது பரிவாரங்களுடன் க்ரேட் தீவுக்குப் போய் விட்டார்.

யூகோஸ்லேவியாவின் மன்னரும், அவருடைய மந்திரிகளும் ஜெருசலேம் நகரத்திலிருந்து கொண்டு, கிரேக்க மகா ஜனங்களுக்கு விடுத்துள்ள ஒரு செய்தியில், தாங்கள் எப்பொழுதும்போல் நாஜி ஆதிக்கத்துக்கு விரோதமாகப் போர் புரியப் போவதாகக் குறிப்பிட்டிருக்கின்றனர்.

லிபியாவில் டோப்ருக் பிரதேசத்தில் ஜெர்மானிய இத்தாலியப் படைகளுக்கும் பிரிட்டிஷ் படைகளுக்கும் பலத்த சண்டை நடைபெறுகிறது.

கிரீஸில், கிரேக்க ராணுவம் பணிந்து விட்டது.

கிரீஸைச் சுற்றியுள்ள லெம்னாஸ் முதலிய தீவுகளை ஜெர்மானியர்கள் கைப்பற்றிக் கொண்டு விட்டார்கள்.

24 பர்மா மந்திரிச் சபைக்கு, ஊடுன் அவுங்ஜா என்பவரையும் ஊபாஷுன் என்பவரையும் புதிய மந்திரிகளாக கவர்னர் நியமனம் செய்திருக்கிறார். ஆக பர்மா மந்திரிச் சபையில் இப்பொழுது பத்து மந்திரிகள் இருக்கிறார்கள்.

பிரெஞ்சு அரசாங்கத்தின் தலைவரான தளபதி பெடெய்னின் 86வது பிறந்த தினம் இன்று பிரான்ஸ் முழுவதும் கொண்டாடப்பட்டது.

இந்த யுத்தத்தில் எகிப்து தேசம் நடுநிலைமை வகித்துவருவதை ஊர்ஜிதம் செய்து இன்று எகிப்திய சேனாதிபதி ஓர் அறிக்கை விடுத்தார்.

ஈராக்கும் எகிப்தும் இந்த யுத்தத்தில் நடுநிலைமை வகிப்பதைக் கண்டித்து 'லண்டன் டைம்ஸ்' பத்திரிகை எழுதியிருக்கிறது.

25 இங்கிலாந்தின் சேனாதிபதியான லார்ட் கோர்ட் என்பவர் இப்பொழுது ஜிப்ரால்டரின் கவர்னர் ஜெனரலாகவும் சேனாதிபதியாகவும் நியமிக்கப்பட்டிருக்கிறார்.

பிரிட்டனுக்கு அனுப்பும் சாமான் கப்பல்களைத் தக்க பந்தோபஸ்துடன் அனுப்ப வேண்டுமென்று அமெரிக்கா தீர்மானித்திருப்பதாக தளபதி நாக்ஸ் என்பவர் தெரிவித்தார்.

கிரேக்கப் போர் முனையில் பிரிட்டிஷ் படைகள் மீண்டும் ஒழுங்காகப் பின் வாங்கின.

ஜெர்மனியிலுள்ள கீல், வில்லியம்ஷாவென் முதலிய பிரதேசங்களை பிரிட்டிஷ் ஆகாயவிமானங்கள் பலமாகத்தாக்கின.

பர்மா கவர்னரான ஸர் ஆர்ச்பால்ட் காக்ரேனுக்கு இன்று இரங்கூன்வாசிகள் ஒரு பிரிவுபசார விருந்து நடத்தினார்கள்.

பம்பாயில் ஹிந்து—முஸ்லீம் கலவரம் ஏற்பட்டு பல உயிர்ச்சேதங்கள் ஏற்பட்டன.

ஜெர்மானியர்களிடமிருந்து தப்பித்துவந்த யூகோஸ்லேவியத் துருப்புகள் ஏற்கனவே பஸ்ராவுக்கு வந்திருக்கிற பிரிட்டிஷ் துருப்புகளுடன் வந்து சேர்ந்துகொண்டு விட்டன.

இங்கிலாந்திலுள்ள மான்செஸ்டர் நகரம் ஜெர்மன் ஆகாயவிமானக் குண்டுகளால் பலமாகத் தாக்கப்பட்டது.

26 பொருளாதார நிபுணர்களடங்கிய ஒரு கோஷ்டி ஜெர்மனியிலிருந்து, ஜப்பானின் தலை நகரான டோக்கியோவுக்கு வந்திருக்கிறது.

ஸ்பெயினிலும், ஜெர்மனிக்கு விரோதமான நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளப் படுகின்றனவென்றும் இதைத் தடுக்க வேண்டுமென்றும் ஜெர்மன் பத்திரிகைகள் கூறுகின்றன. இதனால் மேற்படி இரண்டு நாடுகளிலும் தீவிரமான ராணுவ நடவடிக்கைகள் எதிர்பார்க்கப் படுகின்றன.

துருக்கியின் பிரதான பட்டினமாகிய இஸ்தாம்பூலிலிருந்து ஜனங்கள் காலி செய்வதாகத் தெரிகிறது.

ருஷ்ய ஜப்பானிய உடன்படிக்கையை ஜப்பானிய சக்ரவர்த்தி அங்கீகரித்து விட்டார்.

பிரிட்டனானது, இப்பொழுது நடைபெறும் யுத்தங்களில் தோல்வியுற்று வந்தாலும் கடைசியில் அது நிச்சயமாக வெற்றி படையும் என்று தளபதி ஸ்மட்ஸ் ரேடியோ மூலம் இன்று ஒரு பிரசங்கம் செய்தார்.

ஆப்ரிக்காவில் பிரிட்டிஷ் துருப்புகள் டெஸ்ஸி என்ற ஊரைக் கைப்பற்றிக் கொண்டு விட்டன.

27 கிரீஸ் தேசத்தின் தலைநகரான ஏதென்ஸ் நகரத்தில் ஜெர்மானியத் துருப்புகள் பிரவேசித்துவிட்டன.

மிஸ்டர் சர்ச்சில் இன்று ரேடியோமூலம் பேசுகையில் யுத்தத்தின் இறுதியான வெற்றியில் தமக்குப் பூரண நம்பிக்கை இருப்பதாகத் தெரிவித்தார்.

போர்ட்ஸ் மவுத் என்ற பிரிட்டிஷ் துறைமுகம் ஜெர்மன் ஆகாயவிமானங்களால் பலமாகத் தாக்கப்பட்டது.

28 கிரீஸில் நிறுத்தப்பட்டிருந்த ஏகாதிபத்தியப் படைகள் காலி செய்துகொண்டு போகின்றனவென்ற விஷயம் இன்று உத்தியோக முறையில் அறிவிக்கப் பட்டது.

இங்கிலாந்தின் தென்கோடியிலுள்ள ப்ளிமவுத் என்ற துறைமுகப் பட்டினம் இன்று ஜெர்மன் ஆகாயவிமானங்களால் பலமாகத் தாக்கப்பட்டது.

29 யூகோஸ்லேவியாவின் தலை நகரான பெல்கிரேட் நகரத்திலிருந்த பிரிட்டிஷ் ஸ்தானிகரும் அவருடைய காரியாலய சிப்பந்திகளும் திடீரென்று காணாமற் போய் விட்டனர்.

பிரான்சின் வடக்கு எல்லைப் பிரதேசத்திலிருந்து ஜெர்மன் நீண்ட தூர பீரங்கிகள் இங்கிலாந்தின் தெற்குக் கடலோரப் பிரதேசத்தைப் பலமாகத் தாக்கின.

ருஷ்யா வழியாக ஜப்பானுக்கு எவ்வித யுத்த தளவாட சாமான்களும் செல்லக்



அசலா

வங்க பாஷையில் எழுதியவர்: ஸ்ரீ சரத்சந்திர சட்டர்ஜி; தமிழில் மொழி பெயர்த்தவர்: ஸ்ரீ ஆர். ஷண்முகசுந்தரம்; வெளியிட்டோர்: சக்தி காரியாலயம், ஜார்ஜ் டவுன், சென்னை; டபிள் கிரவுன் 1 X 16 அளவு; பக்கம்: 483; விலை: ரூ. 1-8-0; தபாற் கூலி வேறு.

கிருஹதாஹ ் என்ற பெயரையுடைய இந்த வங்காளி நாவல் இப்பொழுது அசலாவென்ற பெயருடன் தமிழில் வெளிவந்திருக்கிறது. மொழி பெயர்ப்பாசிரியராகிய ஸ்ரீ. ஷண்முக சுந்தரம் மிக அழகாக எழுதியிருக்கிறார். தமிழ்நடை மிகலளிதமாக ஓடுகிறது. நூலைப் படிக்கிறபோது, இறுதிவரையில் படித்து முடிக்க வேண்டுமென்ற ஆவல் உண்டாகிறது. இந்தமாதிரி ருசிகரமான முறையில் எழுதிக்கொண்டு போவது மிகவும் கஷ்டம். இந்தக் கஷ்டமான காரியத்தை ஸ்ரீ ஷண்முகசுந்தரம் சாதித்திருப்பதற்காக அவரை நாம் பாராட்டுகிறோம். "சக்தி" காரியாலயத்தாருக்கும் நமது வாழ்த்து.

ரவீந்திரநாத் தாகூர்

ஆசிரியர்கள்: ஸ்ரீமான்கள் அரு. காந்தி அண்ணாமலை, பி. இராஜேந்திரலால்; வெளியிட்டோர்: சிதம்பரநாதன் கம்பெனி, 373 மாங்தாலே வீதி, இரங்கோன்; டபிள்கிரவுன் 1 X 16 அளவு; 126 பக்கங்கள்; விலை: அணா 12.

கூடாதென்று ருஷ்யா அரசாங்கம் ஓர் உத்திரவு பிறப்பித்திருக்கிறது.

மால்டா தீவு இன்று ஜெர்மன் ஆகாய விமானங்களால் பலமாகத் தாக்கப் பட்டது.

30 *கிரீஸில் நிறுத்தி வைக்கப் பட்டிருந்த அறுபதினாயிரம் பிரிட்டிஷ் துருப்புகளில் நாற்பத்தையாயிரம் துருப்புகள் காலி செய்து கொண்டு பின் வாங்கி விட்டதாக ஒரு செய்தி கூறுகிறது.*

கிரீஸில், ஜெர்மன் ஆதிக்கத்தின் கீழ், தளபதி தோவாகிக்ளூ என்பவருடைய தலைமையில் ஓர் அரசாங்கம் அமைக்கப் பட்டிருக்கிறது.

இந்தியாவின் பெருமையை மேனாட்டார் அறிவதற்குக் காரணமாயிருந்த மகா புருஷர்களில் கவிஞர் ரவீந்திரநாத் தாகூரும் ஒருவர். இவருடைய எண்பதாவது பிறந்த தினக் கொண்டாட்டம் சமீபத்தில் கொண்டாடப்பட்டதை நேயர்கள் அறிவார்கள். இந்தச் சமயத்தில் இவருடைய வாழ்க்கை வரலாற்றைப்பற்றித் தெரிந்துகொள்ளப் பலரும் ஆசைப்படுவது சகஜம். இந்த ஆவலைப் பூர்த்தி செய்கிறது இந்த நூல். ஸ்ரீ காந்தி அண்ணாமலை, ஏற்கனவே சில புஸ்தகங்களை எழுதியிருக்கிறாராதலின், இந்தப் புஸ்தகத்தில் அவருடைய நடை லளிதமாகச் செல்கிறது. இந்த மாதிரி இன்னும் பல நூல்களை சிதம்பரநாதன் கம்பெனியார் வெளியிடுவார்களென்று எதிர்பார்க்கிறோம்.

விஷு வருஷ பஞ்சாங்கம்

பஞ்சாங்கத்தை உபயோகிக்கிறவர்களுக்கு "ஆனந்தபோதினி" பஞ்சாங்கம் அதிக உபயோகமுடையதாயிருக்கிறதென்பதை நாம் சொல்லத் தேவையில்லை. பஞ்சாங்கத்தின் விலை இரண்டணா. தபாற் கூலி உள்நாட்டுக்கு 0-1-3. வேண்டுவோர், ஆனந்த போதினி ஆபீஸ், நெ. 6. லாயர் சின்னதம்பி முதலி தெரு, சென்னை என்ற விலாசத்திற்கு எழுதவும்.

சுயமாகச் சிந்தனை செய்யவேண்டுமென்ற ஆவல்மட்டும் நமக்கு இல்லை. சிந்திக்கிறபடி அநுஷ்டிக்கவும் வேண்டுமென்ற ஆசையும் நமக்கிருக்கிறது. நமது ஜனங்களைமட்டும் நாம் விடுதலை செய்தால் போதாது. நாம் முயற்சி யெடுத்துக்கொண்டு மற்ற ஜனங்களையும் நாம் விடுதலை செய்விக்க வேண்டும். ஜனங்களுக்கு நாம் அடைய வேண்டிய லட்சியமொன்று இருக்கிறதென்ற எண்ணத்தை நாம் முதலில் புகுத்தவேண்டும். அந்த லட்சியத்தையும் அவர்களுக்கு விளக்கிக் கூறவேண்டும். அப்பொழுதுதான், அவர்களுக்குத் தியாக உணர்ச்சி உண்டாகும்.

—மாஜினி

காரிபால்டி

மாஜினி, காரிபால்டி, காவர் என்ற மூன்று மகா புருஷர்களும் இல்லையென்றால், இன்றைய இத்தலி இல்லை யென்றுதான் சொல்ல வேண்டும். இத்தலியின் உயிர், ஆத்மா, இருதயம் என்று, இம் மூவரையும் சரித்திரக்காரர்கள் போற்றுகிறார்கள். கி. பி. பத்தொன்பதாவது நூற்றாண்டின் இடைக் காலத்தில் இத்தலி பல துண்டு நாடுகளாகப் பிரிந்திருந்தது. ஒரு நாட்டுக்கும் மற்றொரு நாட்டுக்கும் பரஸ்பர போட்டியும், பகைமையும் இருந்தன. ஆனால் இவை யாவும், ஆஸ்திரிய ஏகாதிபத்தியத்தின் செல்வாக்கு கீழுக்குட்பட்டிருந்தன. இந்தச் செல்வாக்கை ஒழித்து, சிறு நாடுகளை ஒன்றுகூட்டி இத்தலியை ஒரு பெரிய ராஜ்யமாக ஆக்கிவிட வேண்டுமென்று உழைத்தவர்கள் தான் மேற்படி மூவரும். இம் மூவரில் மாஜினியும், காரிபால்டியும் முன்னணியிலிருந்து உழைத்தவர்கள்; காவர் பின்னணியிலிருந்து உழைத்தவன்.

காரிபால்டி 1807ம் வருஷம் பிறந்தான். பாலியத்திலே மாலுமித் தொழிலில் பயிற்சிபெற்றான். இதனால் விடா முயற்சியும், சலியாமல் உழைக்கிற சக்தியும் ஏற்பட்டன. அப்பொழுது மாஜினியின் முயற்சியின் பேரில் இத்தலியெங்கணும் சுதந்திர சங்கநாதம் முழங்கிக்கொண்டிருந்தது. இத்தலியின் விடுதலைக்காக, மாஜினி, “இத்தாலிய இளைஞர் கட்சி” யென்றொரு கட்சியை ஸ்தாபித்திருந்தான். இதில் காரிபால்டியும் சேர்ந்துகொண்டான். இதனால் அரசாங்கத்தாருடைய கோபத்திற்காளாகி மரண தண்டனை விதிக்கப்பட்டான். ஆனால், காரிபால்டியோ, அரசாங்கத்தாரின் கைக்கு அகப்படாமல் மார்சேல்ஸ் நகரத்திற்குத் தப்பியோடிவிட்டான். அங்கிருந்து தென்னமெரிக்காவுக்குச் சென்றான். அங்கு ரையோ கிராண்டி என்ற ஒரு குடியரசு அரசாங்கத்தின் கீழ் ராணுவத் தலைவனாயமர்ந்தான். மேற்படி ரையோ கிராண்டி நாட்டுக்கும், ப்ரேஜில் நாட்டுக்கும் நீண்ட நாள் பகைமை காரணமாகச் சண்டை ஏற்பட்டது. இதில் ரையோ கிராண்டி படைகளின் தலைவனாக காரிபால்டி நியமிக்கப்பட்டு தீவிரமாகப் போர் புரிந்தான். இந்தக் காலத்தில்தான், இவனுடைய ராணுவ நிபுணத்துவம் நன்கு வெளியாயிற்று. 1848ம் வருஷம் இவன் மீண்டும் இத்தலிக்குத் திரும்பிவந்து ஒரு தொண்டர் படையைச் சேர்த்துக்கொண்டு, ஆஸ்திரியர்களுக்குப் பலவித இன்னல்களை உண்டுபண்ணினான். அடுத்த வருஷம் ரோமாபுரியில் குடியரசை ஸ்தாபிக்க வேண்டுமென்று மாஜினி செய்த முயற்சிகளில் ஈடுபட்டு, ஒரு பெரும் படைக்குத் தலைமை பூண்டு ரோமாபுரியை நோக்கிச் சென்றான். சுமார் முப்பது நாள் போராட்டம் நடைபெற்றது. அதற்குமேல் இவனால் சமாளிக்க முடியவில்லை. எனவே, சுமார் நாலாயிரம் போர் வீரருடன் ரோமாபுரியிலிருந்து தப்பியோடிவிட்டான். 1860ம் வருஷம் நேபிளஸ் ராஜ்யத்தின் ஆதிக்கத்திலிருந்த சிஸிலி தீவுவாசிகள் கலகத்திற்குக் கிளம்பினார்

கள். காரிபால்டி, ஒரு பெரிய சேனையைத் திரட்டிக்கொண்டு சிஸிலிக்குச் சென்று அங்குப் பெரிய வெற்றிகண்டான்; நேபிள்ஸையும் கைப்பற்றிக் கொண்டான். இதன் பயனாக, சிஸிலிக்கும் நேபிள்ஸுக்கும் சர்வாதிகாரியாக நியமிக்கப்பட்டான். பின்னர், இந்த இரண்டு பிரதேசங்களும் ஐக்கிய இத்தலியுடன் சேர்க்கப்பட வேண்டுமென்ற பிரேரணை எழுந்தபோது, அதற்கு காரிபால்டி உடனே சம்மதித்தான். இந்தக் காலத்தில் இவனுக்கு அநேக கௌரவங்கள் வழங்கப்பட்டன. ஆனால் அனைத்தையும் மறுத்துவிட்டு, காப்ரேரா என்ற சிறு ஊரில் ஒதுங்கி வாழ்ந்துவரத் தொடங்கினான். ஆனால் இவனுடைய சுபாவம் இவனைச் சும்மா இருக்கவிடவில்லை. அப்பொழுது பிரான்ஸில் புரட்சி ஏற்பட்டு, குடியரசு ஸ்தாபிதமாயிருந்தது. இந்தக் குடியரசு அரசாங்கத்திற்கும் ஜெர்மானியர்களுக்கும் பெருத்த போர் மூண்டது. காரிபால்டி, பிரெஞ்சு அரசாங்கத்திற்குத் துணையாகச் சென்றான். சுமார் இருபதினாயிரம் படைவீரர்களுடன் ஜெர்மானியர்களுக்கு விரோதமாகச் சென்று அநேக வீர தீரச்செயல்கள் புரிந்தான். இதற்குப் பிறகு, பொது வாழ்வில் அதிகமாக ஈடுபடவில்லை. மீண்டும், காப்ரேராஎன்ற தன் பழைய ஊருக்குத் திரும்பிச் சென்று தன் கடைசி காலத்தைக் கழித்தான். இவன் இறந்தது 1882ம் வருஷத்தில்.

காரிபால்டி

—சி. இ. எம். ஜோட்

இன்றைய தேவை என்ன?

இவர் ஆங்கிலேயர்களில் சிறந்த தத்துவ சாஸ்திர அறிஞராகக் கௌரவிக்கப்படுகிறார். லண்டன் பர்க்பெக் காலேஜில் ஓர் ஆசிரியர். சுதந்திரம், நீதி முதலிய சம்பந்தமாக அநேக அரிய நூல்கள் எழுதியிருக்கிறார்.

ஆஸ்வால்ட் ஸ்பெங்ளர் என்ற மேனாட்டு அறிஞர் "மேனாட்டின் சீரழிவு" என்ற ஒரு நூல் எழுதியிருக்கிறார். இஃது ஒரு முக்கியமான புஸ்தகம்; காலத்திற்கேற்ற புஸ்தகம். இதனை யெழுதிய ஸ்பெங்ளர், ஜெர்மனியில் பல அவதிகளுக்காளாயினர். ஆனால் நாஜிகளிற் பலர், அவருடைய நூலை, முக்கிய வேத புத்தகம் போல் கௌரவித்து வருகின்றனர். ஏனென்றால், ஸ்பெங்ளருடைய கருத்துக்கு நாஜிகள் செய்துவரும் வியாக்கியானப்படி, நாஜிகள்தான் உலக ஆதிக்கத்திற்கு லாயக்கானவர்கள். இப்படித்தான் நாஜிகளிற் பலர் நினைக்கின்றனர்.

ஸ்பெங்ளரின் கருத்துக்கள்தானென்ன வென்பதைக் கவனிப்போம். ஜனநாயகக் கொள்கையானது, உலகத்தில் தீவிரமாகப் பரவுகிற காலத்தில், கலையானது சோபையை இழந்து வருகிறது. மனத்திலிருந்து எழுந்திருக்கிற உள்ளுணர்ச்சியானது, அதாவது கவிதா சக்தியானது, புலமை என்கிற தேக்கத்திலே போய் அடைக்கலம் புகுந்து கொண்டுவிடுகிறது. மதமானது, செல்வாக் கிழந்து நிற்கிறது. ஏதோ ஒரு தெய்வ சக்தி இருந்துகொண்டு உலகத்தை ஒழுங்காக ஆண்டு வருகிற தென்ற நம்பிக்கை ஜனங்களுக்குப் போய் விடுகிறது. இந்த இகலோக வாழ்க்கை அர்த்த புஷ்டியுடையது அல்லது ஒரு லட்சியம் வாய்ந்தது என்ற எண்ணமோ, அல்லது இந்த உலகத்திற்கு அப்புறம் மறு உலகம் ஒன்று உண்டு என்ற நம்பிக்கையோ ஜனங்களுக்குக் குறைந்து விடுகிறது.

மதக் கோட்பாடுகளில் நம்பிக்கை போய் அதற்குப் பதிலாக, நமது முன்னோர்கள் ஏற்படுத்தி வைத்த ஆசார நியமங்களில் ஒரு வித அசிரத்தை உண்டாகிறது. "கண்டதே காட்சி; கொண்டதே கோலம்" என்ற எண்ணம் இளைஞர்களிடத்திலே பரவுகிறது. "நாளை இறந்து போயினும் போகலாம்; இன்று உண்டு களிப்போம்" என்ற மனோபாவந்தான் இளைஞர்களின் வாழ்க்கை நியதியாகி விடுகிறது. ரோம ஏகாதிபத்தியத்தின் பிந்தியகாலத்தில் இப்படித்தான் ஜனங்கள் நடந்து வந்தார்கள்; இப்பொழுதும் இப்படித்தான் நடந்து வருகிறார்கள். அரசாங்கமானது அதிதீவிர ஜனநாயகக் கொள்கையை அவலம்பிக்கத் தொடங்கி, ஜனங்களைப் பலவித காட்சிகளால் திருப்திப்படுத்தித் தன் அதிகாரத்தை ஊர்ஜிதம்

செய்துகொள்கிறது. ரோம ஏகாதிபத்தியமானது, ஜனங்களுக்குத் தேவையான ஆகார வகைகளையும், தேகப் பயிற்சிக் காட்சிகளையும் லஞ்சமாக அளித்துத் தன் அதிகாரத்தை நிலைநிறுத்திக்கொண்டிருந்தது. இங்கிலாந்திலோ இப்பொழுது ஏழை மக்களுக்கு அவ்வப்பொழுது பணம் கொடுத்து உதவுவதன் மூலமாகவும், உடைத பந்தாட்டங்களின் மூலமாகவும் ஜனங்களைத் திருப்தி செய்வித்துத் தன் அதிகாரத்தை ஊர்ஜிதம் செய்து கொண்டிருக்கிறது. இந்த யுகத்தின் முக்கிய சித்தாந்தமாயிருப்பது, பௌதிக சாஸ்திர ஞான அபிவிருத்தி. பணம், உலோகப் பொருள்கள், யந்திரங்கள் ஆகிய இவை மூன்றும் அடங்கிய யுகம் இது.

தீவிர ஜன நாயகத்திலிருந்து சர்வாதிகாரத்துவம் பிறக்கிறது. ரோம ராஜ்யத்தில் குடியரசு முறை ஏற்பட்டு அதனால் அதிகமான பிணக்குகளும் பிரிவுகளும் ஏற்பட்டன. இந்தக் குடியரசு முறை மறைந்து விட்ட பிறகு, சக்ரவர்த்திகளின கண்டிப்பான அரசாங்கம் அநுஷ்டானத்திற்கு வந்தது. சுயேச்சாதிகார முறையானது, தேசத்தை ஒருவித இரும்புப் பிடியிலே வைத்துக் கொண்டிருக்கிறது. இந்த இரும்புப் பிடியானது, மற்ற ஜாதியினரிடத்திலும் விரிகிறது. சர்வாதிகார ஆட்சி முறை ஐரோப்பா முழுவதும் பரவி விடுகிறது.

நாஜிகளை ரோமர்களாகவும், ஹிட்லரை சீஸராகவும் பொருத்தி வைத்துப் பார்ப்போமானால், முற்கால ரோம ஏகாதிபத்தியத்திற்கும், தற்போதைய ஐரோப்பாவுக்கும் பூரணப் பொருத்தம் இருப்பதைக் கண்டு நாம் பிரமித்துப் போய் விடுகிறோம். தீவிர ஜன நாயக முறையிலிருந்து எப்படி சர்வாதிகார முறை ஏற்படுகிறதென்று கேள்வி கேட்கப் பட்டால், அதற்கு ஒரே ஒரு வார்த்தைதான் பதில். அது தான் அதிகார சக்தி. யந்திரங்களின் உற்பத்தி சக்தி அதிகமாகி, இதனால் செல்வமானது, ஒரு சிலருடைய உரிமைப் பொருளாகி விடுகிறது. இதனால் எண்ணிக்கையின் முக்கியத்துவம் குறைந்து விடுகிறது. ஆயுதங்களை யார் அதிகமாக உபயோகிக்கிறார்களோ அவர்களிடத்தில் அதிகாரம் போய்ச் சேர்ந்து விடுகிறது. இவை தான் ஸ்பெங்க்ளரின் வாதம்.

ஸ்பெங்க்ளரின் வாதத்தை ஆதரிப்பதோ கண்டிப்பதோ இங்கே என்னுடைய நோக்கமல்ல. அவர் கூறியுள்ள ஒரு விஷயத்தை மட்டும் நான் எடுத்துக்கொண்டு ஆராய்ச்சி செய்ய விரும்புகிறேன். அதாவது அதிகார சக்தி. முந்திய தலை முறைகளைக் காட்டிலும், இந்தத் தலை முறையினரிடம் சக்தியானது அதிகரித்திருக்கிறது. யந்திரங்களின் உதவியினால், நமது தேக சக்தியானது விருத்தியடைந்திருக்கிறது. சாமான்களையும் ஆட்களையும் தூக்குவதற் கென்றேற்பட்ட யந்திரங்கள், நமது கைகளின் நீளத்தை அதிகப்படுத்தி யிருக்கின்றன. அதே மாதிரி, ரெயில்களும், மோட்டார் வண்டிகளும் நமது கால்களின் வேகத்தை அதிகப் படுத்தி யிருக்கின்றன. சாமான்களை உற்பத்தி செய்கிற யந்திரங்கள், நம்மில் ஒவ்வொருவருக்கும் அதிகமான கைகள் ஏற்பட்ட மாதிரி. புள்ளி போட்டுக் காட்டுகிற யந்திரங்கள், நமக்கு அதிகமான

மூளைகள் இருக்கிற மாதிரி. இதன் விளைவு என்ன வென்றால், இந்தத் தலை முறையினருக்கு, உற்பத்தி செய்கிற சக்தியும், அழிக்கிற சக்தியும், முந்திய தலை முறையினரைக் காட்டிலும் அதிகமாக ஏற்பட்டிருக்கிறது. ஆனால் இதில் என்ன தொந்திரவு என்றால், நமக்குள்ள இந்தச் சக்தியைச் சரியான முறையில் உபயோகிக்கத் தெரியாமலிருப்பது தான். நமக்கு, சக்தி அதிகமாயிருக்கிறது; ஆனால் அதே விகிதாசாரப்படி நமது அறிவு விருத்தியடைய வில்லை. இந்த இரண்டுக்கும் ஏற்பட்டிருக்கிற விபரீத வித்தியாசந்தான், நமது நாகரிகத்திற்குப் பெரிய ஆபத்து. நமது சக்திக்குத் தகுந்தபடி நமது அறிவை விருத்தி செய்து கொள்ள வேண்டுமென்பதுதான் தற்காலத்திய முக்கியமான பிரச்னை.

இயற்கையை அடக்கி யாள்கிற சக்தி இப்பொழுது நமக்கு ஏற்பட்டிருக்கிறது. அதாவது, வாழ்க்கையின் மீது நாம் ஆதிக்கங் கொண்டிருக்கிறோம். இது விஷயத்தில், நமது முந்திய தலை முறையினரை விட நாம் அதிக தூரம் முற்போக்கடைந்திருக்கிறோம். ஆனால், தனிப்பட்ட மனிதர்கள் என்ற முறையில் நாம் எப்படி வாழ வேண்டு மென்கிற விஷயத்திலும், சமுதாயத்தினராக எப்படி வாழ வேண்டு மென்கிற விஷயத்திலும், நாம் புராதன கிரேக்கர்களை விட இப்பொழுது அதிக தூரம் முற்போக்கடைய வில்லை. இப்பொழுது நம்முடைய முக்கிய தேவை யென்ன வென்றால் நம்முடைய சக்திக்குத் தகுந்தாற் போல் நமது ஆத்மாவும் அபிவிருத்தி யடைய வேண்டு மென்பதுதான். ஆனால் இந்த மாதிரியான அபிவிருத்தி இது வரையில் நமக்கு ஏற்பட வில்லை. அதற்கு மாறாக, பௌதிக சக்திகளின் மீது மனிதனுடைய ஆதிக்கம் அதிகப்பட அதிகப்பட, அவன், தன்னைத் தானே கட்டுப் படுத்திக் கொள்ளுஞ் சக்தியை இழந்து கொண்டு வருகிறான். மத பரம்பரையிலே ஜனங்களுக்கு நம்பிக்கை குன்றி வருகிற படியால், இளைஞர்கள், தங்களுடைய வாழ்க்கைக்கு வழி காட்டியாக எவ்வித கோட்பாடுகளையும் ஏற்றுக்கொள்ளாமல் தங்களுடைய இஷ்டப்படி நடக்க, ஆரம்பித்திருக்கிறார்கள். இதனால், கண்டதே காட்சி; கொண்டதே கோலம்' என்பது இவர்களுடைய கொள்கையாகப் போய் விடுகிறது.

பாஸ்கல் என்ற ஓர் அறிஞன் சொன்ன மாதிரி, மனிதனுடைய சுபாவம் எப்படிப்பட்ட தென்றால், உயர்ந்த விஷயங்களில் நம்பிக்கை கொள்ளும் தன்மையது. ஆனால் அப்படிப்பட்ட உயர்ந்த விஷயங்கள் ஒன்றும் இல்லாத சமயத்தில், பிரயோஜனமற்ற விஷயங்களைக் கெட்டியாகப் பிடித்துக் கொள்ளுந் தன்மையது. ஆத்ம உலகத்தில் காலி ஏற்படுவதைப் பார்த்துக் கொண்டிருக்க மானிட சுபாவம் சகிப்பதில்லை.

இளைஞர்களுக்கு எவ்வித நீதி நியமங்களும் ஏற்படுத்திக் கொடாமலிருப்பது சகிக்க முடியாததாயிருக்கிறது. நமது தற்கால நாகரிகத்தின் முக்கிய முறை யென்ன வென்றால், இளைஞர்களின் சக்திக்கும், உழைப்புக்கும், உணர்ச்சிக்கும் எவ்வித போக்கும் இல்லாமலிருப்பதுவே என்று எச். ஜி. வெல்ஸ் என்ற அறிஞர் கூறுகிறார்.

இதுவே தற்போதைய நாகரிகத்தின் முக்கியமான ஆபத்து.

எனவே, இப்பொழுது மதப் புனருத்தாரணம் ஏற்பட வேண்டிய காலம் உண்டாயிருக்கிறது. இப்படி உண்டாவதற்கு அவசியம் என்னவென்றால், நமது விஞ்ஞான சாஸ்திர அபிவிருத்திக்கும் நமது ஞான அபிவிருத்திக்கும் இடையே யேற்பட்டுள்ள வித்தியாசம். இந்த வித்தியாசத்தை நாம் சரிப்படுத்திக் கொள்ளா விட்டால், நமது சக்திக்கேற்ற லட்சியங்களை நாம் கைக்கொள்ளா விட்டால், நம்முடைய விஞ்ஞான அபிவிருத்தியானது நம்மையே அழித்து விடும். இரண்டாவது, இளைஞர்களுடைய நம்பிக்கைக்கேற்ற ஒரு மதக் கோட்பாடு அல்லது சித்தாந்தம் இல்லை. இதனால் இளைஞருலகத்திலே ஒருவித அமைதியின்மை ஏற்பட்டிருக்கிறது. இந்த அமைதியின்மையை நாம் தணிக்கா விட்டால், ஜனங்கள் யுத்தத்திலேயோ அல்லது புரட்சியிலேயோ ஈடுபடுவர். ஏனென்றால், எந்த வாழ்க்கை அவர்களைப் பொறுத்த மட்டில் அர்த்தமற்றதாகி விட்டதோ அந்த வாழ்க்கையை அவர்களால் எவ்வளவு காலந்தான் சகித்துக் கொண்டிருக்க முடியும்?

கொரால்ட் ஹெர்ட் என்ற அறிஞர், நமது தற்கால நாகரிகத்தின் வியாதி இன்னதென்பதை மிக அழகாக நிதானித்துக் கூறுகிறார் அதாவது நமது தற்போதைய நாகரிகமானது, லட்சியங்களை மறந்து விட்டு, சாதனங்களின் மீது மட்டும் ஆதிக்கங் கொண்டு விட்டதென்று கூறுகிறார். எனவே, நமது நாகரிகத்தின் முக்கிய கடமை யென்ன வென்றால், புதிய விதமான லட்சியங்களை நாம் ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். ஆனால் அந்தப் புதிய லட்சியங்களை ஏற்றுக்கொள்ள, புதிய மனோ பாவம் வேண்டும். முற்காலத்தில் மனிதன், பேராசை, கர்வம், அகங்காரம் முதலியவைகளினால் தூண்டப் பட்டு அதிகாரம், செல்வம், சுகம் முதலியவற்றை அடைவதை லட்சியமாகக் கொண்டான். இப்பொழுது மேற்கண்ட பேராசை முதலியவைகளினால் மனிதன் தூண்டப்படாமலிருக்க வேண்டுமானால் அவனுடைய சுபாவமே மாற வேண்டும். அதாவது, நமது நாகரிகம் நீடித்திருக்க வேண்டுமானால், நாமே மாற வேண்டும். இதையே ஸ்ரீ கொரால்ட் ஹெர்ட் வற்புறுத்திக் கூறுகிறார்.

மனித வளர்ச்சியில் இப்பொழுது நாம் இரண்டாவதுபடியிலிருக்கிறோம். அதாவது, மனிதன், தனது அவயங்களை உபயோகிப்பதை விடுத்து, அந்த அவயவங்களுக்குப் புறம்பான யந்திரங்கள், ஆயுதங்கள் முதலியவற்றின் துணை கொண்டு வாழ ஆரம்பித்து, இதன் அந்தியதசையையும் அடைந்து விட்டான். இதிலிருந்து இனியும் நாம் ஒரு மாற்றத்தை அடையா விட்டால், மானிட சமுதாயமே பிற்போக்கடைய வேண்டியதுதான். மனித வளர்ச்சியின் இந்த இரண்டாவது படியானது, அதாவது யந்திரத்தொழில் உற்பத்தியானது ஏகபோக உரிமைகளாகப் பரிணமித்து விட்ட படியால், இந்த இரண்டாவது படியும் இப்பொழுது ஆடிக் கொடுக்க ஆரம்பித்திருக்கிறது. ஆகவே, வளர்ச்சியின் மூன்றாவது படியை நாம் கண்டு பிடிக்க வேண்டி

—"தேவ கவி"

என்னை ஏன் காதலிக்கிறாய்?

நாதா! நினது வடிவிலே எனது கண்ணிரண்டும்
ஈடுபட்டுவிட்டன.
எனவே நான் குருடி!

நாதா! நினது மதுர வசனத்திலே
எனது செவியிரண்டும் சேர்ந்துவிட்டன.
எனவே நான் செவிடி!

நாதா! உன்னிலே என்
இதயத்தை ஒப்புக்கொடுத்தேன்.
எனவே நான் இருதய சூனியை!

நாதா! இருந்தாலும்
என்னை ஏன் நீ காதலிக்கிறாய்?

யது மிகவும் அவசியமாகும். மனித னிடத்திலே இப்பொழுது சக்திகள் அதிகரித்துக் கொண்டிருக்கின்றன. ஆனால் அவற்றை எப்படி உபயோகிப்பதென்பது அவனுக்குத் தெரியவில்லை. காலத்தைச் சேமிக்க வேண்டுமென்ற வியாஜத்தை வைத்துக் கொண்டு தற்கால இளைஞன், மோட்டார் வண்டியில் வேகமாகப் போகிறான். ஆனால் அப்படிச் சேமித்து வைத்துக் கொண்ட காலத்தை எப்படிச் செலவழிப்பதென்பது அவனுக்குத் தெரியவில்லை.

மனித வளர்ச்சியின் இந்த மூன்றாவது படி எப்படி இருக்க வேண்டுமென்பது தான், இப்பொழுது முக்கியமான பிரச்னை. சகல ஜீவராசிகளிடத்திலும் ஒரே விதமான ஆத்மாதான் குடி கொண்டிருக்கிறதென்றும், இந்த உலக மனைத்தும் ஒரே குடும்ப மென்றும் மனிதர்கள் உணரத் தலைப்பட வேண்டும். இப்படி உணரும்படிச் செய்வது எந்த விதத்திலும் சுலபமான காரிய மல்ல. இதற்காக, அதாவது மனித வளர்ச்சியின் மூன்றாவது படியை ஏற்படுத்திக் கொடுப்பதற்காக, புராதன நாகரிகத்தை அப்படியே அநுஷ்டானத்திற்குக்கொண்டு வந்து காட்டுகிற ஒரு சிலர் சேர்ந்து தங்களை ஒரு தனிச் சமூகத்தினராக அமைத்துக் கொண்டு ஒழுங்கான வாழ்க்கையை நடத்த வேண்டும். இவர்கள், அநுஷ்டான பூர்வகமான தங்கள் வாழ்க்கையினால் வருங்கால நாகரிகத்தை நிர்ணயித்துக் கொடுக்கிறவர்களாயிருப்பார்கள். இப்படிப் பட்ட மனிதர்கள் தோன்றுவதே இன்றைய முக்கிய தேவையாயிருக்கிறது.

——மா. சர்மா, B. A. (Hons)

சிலப்பதிகாரம்—மதுரையின் மாண்பு

மன்னனும் மதுரையும்

பகையரசர்கள் பயப்பட்டு நடுங்கும்படியான வாளேந்திய வீரன் பாண்டிய மன்னன். அவன் தலைநகரம் மதுரை. திசைகள் எங்கும் பரந்து விளங்கும் அவன் புகழ்போல அகன்ற இடத்தையுடையது அந்நகரம். எல்லோரும் உயர்த்திக் கூறும் அவன் ஆண்மையோடு போட்டி போடுவதுபோல், உயர்ந்த மாட மாளிகைகளைக் கொண்டது. தான தருமங்கள் செய்யும் தன்மையால் அவன் அடைந்த பெருமையைப் போல் குறையாத வளப்பம் உடைய குணத்தினால் தானும் பெருமை பொருந்தியது. இச் சிறப்புக்களோடு வேறு எந்த நகரத்திற்கும் இல்லாத ஒரு தனிப்பட்ட மேன்மையும் மதுரைக்கு உண்டு. முதற் கடவுளர் என்று எல்லோராலும் போற்றப்படும் மும்மூர்த்திகளுள் ஒருவரான சிவபெருமான் அந்நகரத்தில்தான் தம் அற்புதமான திருவிளையாடல்களை நிகழ்த்தினார். அவர் மணஞ் செய்து கொண்டதும் அப்பதியில்தான். அக்காரணத்தால் அதற்கு 'மண மதுரை' என்று சிறப்புப்பெயரும் ஏற்பட்டது.

காலை:

அந்நகரத்தின் மதிலுக்குவெளியே உள்ள பொழில்கள் பூக்கள் மலிந்து பொலிந்திருந்தன. பண்ணைகள் நீர் நிரம்பிய வளப்பம் உடையனவாய் விளங்கின. கழனிகளெல்லாம் முற்றி விளைந்த கதிர்களை உடையனவாய்க் காட்சி தந்தன. அவைகளில் வசிக்கும் பக்ஷி ஜாதிகள் விடியற்காலத்திலேயே எழுந்து ஆரவாரம் செய்ய ஆரம்பித்தன. சிவந்த கிரணங்களைக்கொண்ட சூரியன் பொய்கைகளில் இருக்கும் தாமரை மொட்டுக்களை மலர்வித்தான். ' பின் உறங்கும் ஊரையும் எழுப்பினான்.

அச்சமயத்தில், நெற்றிக் கண்ணை யுடைய சிவன் கோயிலிலும், கருடக் கொடி படைத்த விஷ்ணுவின் ஆலயத்திலும், கலப்பையைப் படையாகக் கொண்ட பலதேவன் கோயிலிலும், கோழிக் கொடியோனாகிய குமரவேள் கோட்டத்திலு , அறவோர்ப் பள்ளிகளிலும், மன்னன் மாளிகையிலும், முழங்கிய கொப்பு, சங்கு முதலியவைகளின் ஓசை காலையின் வரவை மக்களுக்கு உணர்த்தியது.

அடிகளை அடிபணிந்து:

கோவலன் நிஷ்டையில் அமர்ந்திருந்த கவுந்தியடிகளைச் சென்று வணங்கினான். "அம்மையே! ஒழுக்க நெறியினின்றும் தவறியவர் தன்மையை அடைந்தேன். மலர்போன்ற மெல்லியலாளாகிய ' கண்ணகியைக் காட்டு வழிகளில் கூட்டிவந்து கஷ்டப்படுத்தினேன். இக் காரணத்தால் அறிவில்லாத மூடர் தன்மை

யையும் அடைந்தேன். இனி இவ் வூரில் இருக்கும் என்போன்ற வணிகர்களுக்கு என் நிலையை உணர்த்தி வருவேன். அதுவரையில் தங்கள் பாதுகாப்பில் இருப்பவளுக்குக் குறையும் உண்டோ?" என்றனன்.

கோவலன், வாழ்க்கை என்னும் சறுக்குப் பாதையில் வழுக்கி விழுந்தவன். தான் தொலைத்த செல்வத்தைத் திரட்டுவதற்காக மனைவியுடன் மதுரைக்கு வந்து சேர்ந்தான். வந்த பின்பும், அவன் பழைய குறைகளை மறக்காதவனாய் இருந்தால் பின்னும் கஷ்டப்பட நேரிடும் எனக் கவுந்தியடிகள் கருதினார். ஆகவே அவனுக்கு ஆறுதல் அளிக்க அறவுரைகள் சிலவற்றை அறிவுறுத்தினார்.

அவர் அறவுரை:

அற வழியிலே வாழ்க்கையை அமைத்துக்கொண்டு, ஒழுக்கத்தினின்றும் வழுவாத வாழ்க்கையை உடைய அறிஞர்கள், "எப்பொழுதும், எவரும், எவ்வுயிர்க்கும் தீங்கு செய்தல் தகாது. செய்தால் அது பின் ஊழ்வினை என்ற உருவத்தில் செய்தவர்களையே சென்று வருத்தும்" என்று போதிக்கின்றார்களாம். அவர்கள் போதனையைப் பறைசாற்றுதலுக்கு ஒப்பிடுகிறாள் கவுந்தி. நாக்கு கொம்பு. வாய்தான் பறை. அவர்கள் போதிக்கும் அறமார்க்கங்களே பறையின்மூலம் அறிவிக்கும் செய்திகள்.

அரசன் ஊராருக்கு ஒருசெய்தியை அறிவிக்க வேண்டுமானால் அதைப் பறைசாற்றிப் பரப்புகிறான். பின் அவன் இட்ட ஆணையைத் தட்டி நடக்கும் மக்களைத் தண்டிக்கிறான். அதுபோலவே கடவுள் ஆணையைக் கைக்கொண்டு சன்மார்க்க போதனைகளை அறிஞர்கள் பறைசாற்றி அறிவிக்கிறார்கள். புண்ணிய பாவங்களில் பற்றில்லாத மூடர்கள் அவ்வாசகங்களின்படி நடப்பதில்லை. எப்படி அரசன் ஆணையைக் கடந்தவர் அவதி அடைகிறார்களோ, அது போலவே, இவர்களும் அறக் கடவுளின் தூதனாகிய தலைவிதியால் தண்டிக்கப்படுகிறார்கள்.

தலைவிதி தண்டிக்கும் காலத்தில் மக்களுக்கு மெய்யுணர்வு ஏற்படுகிறது. "ஐயோ! முன்பே தரும வழியில் வாழ்க்கையை நடத்தாமல் பாபத்திற்குப் பாத்திரர் ஆனோமே!" என்று ஏங்குகிறார்கள். இதுமட்டும் இல்லை. வினைப் பயனின் பிடிப்பினின்றும் விடுபடும் உபாயமும் தெரியாமல் திண்டாடுவார்கள். ஆனால் அறிஞர்கள் போதனையை அவமதிக்காமல் அதன்படி நடந்து வந்தவர்களோ, துயரம் ஏற்பட்ட காலத்தில் கலக்கம் அடையமாட்டார்கள். இது நாம் செய்த தீவினைகளுக்குத் தண்டனை" என்று எண்ணி மனச் சாந்தி அடைவார்கள். மேலும் கஷ்டம் வாராதபடி நற்காரியங்களைச் செய்வதிலேயே நாட்டங்கொள்வார்கள்.

மறத்துறை நீங்குமின்
வல்வினை ஊட்டுமென்(று)
அறத்துறை மாக்கள்
திறத்தில் சாற்றி
நாக்கடிப் பாக
வாய்ப்பறை அறையினும்

யாப்பறை மாக்கள்
இயல்பிற் கொள்ளார்
தீதுடை வெவ்வினை
உருத்த காலைப்
பேதைமை கந்தாப்
பொருப்பே(து) உறுவர்
ஓய்யா வினைப்பயன்
உண்ணுங் காலைக்
கையாறு கொள்ளார்
கற்றறி மாக்கள்.

பெண்டிரும், உண்டியும், இன்பம் தருவன என்று மக்கள் மதிக்கின்றனர். ஆனால் அவை தரும் துன்பம் அளவிட்டுக் கூற முடியாது. பெண்டிரைச் சேருவதற்கு முயற்சிக்கும் போதும் துன்பம். கூடின பின்பும் பிரிவால் துன்பம் ஏற்படுவது நிச்சயம். அதுபோலவே உண்டிக்கு முதற் காரணமாகிய பொருளைச் சேர்க்கும் போதும், அதை இழக்கும் போதும் துன்பமே ஏற்படுகின்றது. ஆகவே பெண்டிரிடத்தும், பொருளிடத்தும் பற்றை நீக்கி, பரம்பொருளிடத்துப் பற்றுக்கொண்ட பெரியார் மட்டுமே துன்பமே இல்லாத இன்பத்தைத் துய்ப்பவர்.

பிரிதல் துன்பமும்
புணர்தல் துன்பமும்
உருவில் ஆளன்
ஒறுக்கும் துன்பமும்
புரிகுழல் மாதர்ப்
புணர்ந்தோர்க்(கு) அல்ல(து)
ஒருதனி வாழ்க்கை
உரவோர்க்(கு) இல்லை.

துறவியாகையால் கவுந்தியடிகள் இதுவரை மக்களுக்குத் துன்பம் ஏற்படுவதற்கு இக் காரணத்தையும், அத் துன்பத்தைத் தவிர்த்து இன்பத்தை எய்தும் மார்க்கத்தையும் கூறினார். ஆனால் அவர் காட்டிய வழியைப் பின்பற்றும் நிலையில் கோவலன் இல்லை. "பெண்டிரையும் பொருளையும்" இன்பம் தருவன என்று நினைத்தவன் அவன். மதுரைக்கு மனைவியுடன் பொருள் தேட வந்தது. இதுவரை கவுந்தியடிகள் கூறியவை எல்லாம் அவனுக்கு மேலும் துன்பத்தைத் தருமே ஒழிய வேறு அல்ல இருக்காதே! இதை உணர்ந்துதான் [illegible]ண்டு திருஷ்டாந்தங்களை அடிகள் அவனுக்கு எடுத்துக் காட்டுகிறார்.

தந்தையின் கட்டளைப்படிக் காதலியுடன் காட்டுக்குச் சென்று கஷ்டப்பட்ட இராமன் கடவுளின் அவதாரம் அல்லவோ? சூதாட்டத்தில் நாட்டை இழந்து நடுக்காட்டில் மனைவியை விட்டுவிட்டுத் தனியே சென்று துயரடைந்த நளன் மக்களுள் சிறந்தவன். அவன் கஷ்டப்பட்டதற்குக் காரணம் ஊழ்வினையே அல்லவா! ஆகவே இவைகளின் மூலம் ஊழ்வினையைக் கடத்தல் மக்களுக்கு மட்டுமன்றி, கடவுள் அம்சம் உடையவருக்கும் அரிது எனத் தெரியவில்லையா!

தாதை யேவலின்
மாதுடன் போகிக்
காதலி நீங்கக்
கடுந்துயர் உழந்தோன்
வேத முதல்வன்
பயந்தோன் என்பது
நீயறிந்(து) இலையோ
நெடுமொழி யன்றோ
வல்லா டாயத்து
மண்ணர(சு) இழந்து

மெல்லியல் தன்னுடன்
வெங்கான் அடைந்தோன்
காதலிற் பிரிந்தோன்
அல்லன் காதலி
தீதொடு படூஉம்
சிறுமையள் அல்லள்
அடவிக் கானகத்(து)
ஆயிழை தன்னை
இடையிருள் யாமத்(து)
இட்டு நீக்கியது
வல்வினை யன்றோ.

இவ்விரண்டு திருஷ்டாந்தங்களும் கோவலனுக்கு ஆறுதல் அளிக்கக் கூடியவைதான் இவைகளைச் சொன்னதோடு நிற்காமல் அடிகள் இராமனையும் நளனையும் விட நல்ல நிலைமையில் கோவலன் இருப்பதையும் சுட்டிக்காட்டினாள். அவர்கள் இருவரும் செல்வத்தையும் அரச போகத்தையும் இழந்ததோடு மனைவிகளையும் பிரிந்து வாழ நேர்ந்தது. ஆனால் கோவலன் அவ்விஷயத்தில் பாக்கியவான் அல்லவா? இவ் வேற்றுமையை எடுத்துக் காட்டி, அவன் உண்மையில் சந்தோஷப்பட வேண்டுமேயன்றி வருத்தப்படவேண்டிய காரணமில்லை என நிரூபித்தாள் கவுந்தியடிகள். பின் நகரத்துக்குள் சென்றுவர விடை தந்தாள்.

மதில்

கட்டு வேலி சூழ்ந்த காவற்காடு. அதைக் கடந்து மதிலைச் சுற்றி ஓடும் ஆழமான அகழிக்குச் செல்ல, யானைக் கூட்டங்கள் தாராளமாய்ப் போகக்கூடிய சுருங்கை வழி ஒன்று உண்டு. அகழிக்கு அப்பால் மதில் அமைந்திருக்கிறது. நகரத்தை முற்றுகையிட எண்ணும் பகையரசர்களுக்குக் காவற்காட்டையும் அகழியையும் கடந்து செல்வதே பெரிய காரியம். அதைக் கடந்துவிட்டாலும் மதிலில் அமைந்த பலவகை இயந்திரப் பொறிகளின் தொல்லைக்குட் பட்டாகவேண்டும்.

எந்திரவில் தானே வளைந்து அம்புகளை எய்யும். குரங்குபோல் அமைந்த ஒரு பொறி நெருங்கியவரைக் கடிக்கும். கற்களை வாரி வாரி வீசும் எந்திரக் கவண்கள் பல. அக் கவண்களுக்குத் தளராமல் கல்லிட்டுவைக்கும் கூடைகளும் இருந்தன. பகைவர் மேல் சொரிவதற்காக நெய்யையும் செம்பையும் உருக்கும் உலைக்களங்கள். மதிலின்கீழ் வருபவரைப் பிடித்து இழுக்கும் எந்திரத் தூண்டில்கள். பகைவர் கழுத்தில் மாட்டி முறுக்கும் சங்கிலிகள். பறந்து சென்று மக்கள் தலைகளைக் கொத்தி மூளையைக் கடிக்கும் பொறிகள். கிடங்கில் ஏறுபவர்களைப் பிடித்துக் கீழே தள்ளும் இருப்புக்கவைகள். மதிலின் உச்சியை ஏறுபவர் கைகளைக் குத்தும் ஊசிகள். அவர்கள் உடல்களைத் தம் கொம்பால் குத்திக் கிழிக்கும் எந்திரப் பன்றிகள். வேகமாகச் சென்று மாற்றார் கண்களைக் கொத்தும் கிச்சிலிப் பொறிகள். ஒரேசமயத்தில் நூறு பேரைக் கொல்லும் சதக்கினி. இன்னும் களிற்றுப் பொறி, விழுங்கும் பாம்பு, கழுகுப் பொறி, புலிப் பொறி, சகடப் பொறி முதலிய பல படைக்கலங்களும் அம் மதிலில் அமைந்திருந்தன. இவ் வியந்திரப் பொறிகளை இயக்கும் மக்கள் மறைந்திருக்க ஏவறைகள் பல மதிலின் உட்புறத்தில் இருந்தன. மதிலால் சூழப்பட்ட அந்நகரம்

தேவேந்திரனுடைய பணிப் பெட்டியினுள் இருக்கும் பெறுதற்கரிய மணிக் கலங்களைப்போல் பிரகாசமும் அழகும் உடையதாய் இருந்தது. அதற்குச் செல்லும் வாயிலை, காக்கும் தொழிலில் பெயர்பெற்ற யவனர்கள், உருவிய வாளுடன் இரவு பகலாய்க் காவல் புரிகின்றனர். அக் காவலாளிகள், இவன் புதியவன் என்று சந்தேகிக்க முடியாதபடி, பல முறை சென்று வந்து பழக்கப்பட்டவன் போல, வாயிலைக் கடந்து நகரத்தினுள் சென்றான் கோவலன்.

மிளைசூழ் மிளையொடு
வளைவுடன் கிடந்த
இலங்குநீர்ப் பரப்பின்
வலம்புணர் அகழியில்
பெருங்கை யானை
இனநிரை பெயரும்
சுருங்கை வீதி
மருங்கில் போகிக்
கடிமதில் வாயில்
காவலில் சிறந்த
அடல்வாள் யவனர்க்(கு)
அயிராது புக்காங்(கு)
ஆயிரம் கண்ணோன்
அருங்கலச் செப்பு
வாய் திறந்(து) அன்ன
மதிலக வரைப்பில்

வேசையர் வீதிகள்:

வேத்தியல் பொதுவியல் என்ற இருவகை விதூடக் கூத்துக்களின் இயல்புகளையும், கண்கூடுவரி காண்வரி முதலிய எட்டுவகை வரிக் கூத்துக்களின் வகைகளையும், கொட்டு, அசை, தூக்கு, அளவு என்ற நால்வகைப் பாணிகளின் பண்புகளையும், இப் பாணிகளின் வழிவரும், செந்தூக்கு, மதலைத்தூக்கு முதலிய எழுவகைத் தூக்குக்களின் இயல்புகளையும், ஆடல் பாடல் முதலியவற்றோடு கூடி யிசைக்கும் மத்தளம், தண்ணுமை, இடக்கை, சல்லிகை என்ற நால்வகைத் தோற்கருவிகளின் கூறுபாடுகளையும் நன்குணர்ந்து, பண்களையும் அவற்றின் திறங்களையும் பழிக்கும் இனிய சொல்லையும், அறுபத்தி நான்கென்று தொகுத்த கலைகளில் வல்லமையும் உடைய வேசையர்கள் தலைக்கோல் அரிவை, தோரிய மடந்தை, தலைப்பாட்டுக் கூத்தி, இடைப்பாட்டுக் கூத்தி என நால்வகைப்படுவர். காம இன்பத்திற்குப் புதியோராய் முன்பு நுகர்ந்தறியாத மேதையோராயினும், மலர்ந்த மலர்தோறும் சென்று அவற்றின் தேனைப் பருகி, பின்பாராமல், செல்லும் வண்டுகளைப்போல நாள்தோறும் புதிய மகளிரைப் புணர்ந்து செல்லும் காமுகராயினும், புலனடக்கத்தில் திறமைபெற்ற தவத்தோரேயாயினும் கண்டவளவில் அவர் அறிவு முதலியவற்றைக் கெடுத்துத் தம் வலையில் வீழ்த்தக்கூடிய ஆற்றலும் அழகும் படைத்தவர்கள் அக் கணிகையர். தம் வருவாய்க்கேற்ப சிறுதனம், பெருந்தனம் எனப் பகுக்கப்பட்ட இருவகை வீதிகளில் வசிப்பவர்கள். அவ் வீதிகளைக் கடந்து கோவலன் அங்காடி வீதிக்குள் நுழைந்தான்.

அங்காடி வீதி:

அங்காடி வீதியின் ஒரு பக்கத்தில் கொல்லாப்பண்டி, தேர்வட்டை, தேர் மொட்டு முதலியவைகளை உடைய மரக்கடைகள் இருந்தன. கவசம்,

அங்குசம், தோலால் செய்யப்பட்ட கைத்தளம், அரைப்பட்டிகை முதலிய காவற் கருவிகளையுடைய கடைகள் ஒருபுறம் இருந்தன. பன்றியின் முகம்போல் புனையப்பட்ட கேடயமும், தோலால் செய்யப்பட்ட கேடயமும், காட்டில் வாழும் பலவித மிருகங்களின் முகங்கள் அமைந்த இருப்புக் கேடயங்களும் கொண்ட கடைகளும், குத்துக் கோல்கள் முதலிய ஆயுதங்கள் கொண்ட கடைகளும் நிரம்பியிருந்தன. சந்தனம் புஷ்பம் முதலிய வாசனைத் திரவியங்கள் விற்கும் கடைகள் வரிசையாய் விளங்கின. இப்படிப் பலவகைப் பட்ட பண்டங்களை விற்கும் கடைகளின் வரிசையின் அழகும், அவற்றின் வளப்பமும் அரசரும் கண்டு மகிழ்தற்குரிய சிறப்பினை யுடையன.

இரத்தினக் கடை வீதி:

இந்திர சாபம் போலும் ஒளியுடைய வயிரச் சாதிகளும், பசுமையான கதிரொளிபோல் பிரகாசிக்கும் மரகதச் சாதியும், பதுமம், நீலம், விந்தம், படிதம் என்று கூறப்படும் நால்வகைச் சாதி மாணிக்க வருக்கங்களும், பூசத்தைப்போல் உருவையுடைய புஷ்பராக வருக்கங்களும், சூரியன் ஒளி போன்றது, தேன் துளி போன்றது என்று ஊகிக்கப் படும் வயிடூரிய வருக்கங்களும், இருளைத் தெளியவைத்ததுபோன்று விளங்கும் நீலமணிகளும், பஞ்சளும் சிவப்பும் கலந்த நிறத்தையுடைய கோமேதகங்களும், வெள்ளி அங்காரகன்போல வெண்மையாயும், சிகப்பாயும் இருக்கும் முத்துக்களும், செம்மை மிக்கு செழிப்பாய் வளர்ந்த கொடிப் பவளங்களும் குவிந்திருந்தன அத் தெருவில் இருந்த கடைகளில்.

பொற்கடை வீதி:

சாதரூபம், கிளிச்சிறை, ஆடகம், சாம்பூநதம் என்ற நால்வகைப் பட்டது பொன். அவற்றில் ஒவ்வொரு வகைகளும் வெவ்வேறு கடைகளில் இருக்கும். ஒருவகையை வேண்டிய பொன் வாணிகர், அது கிடைக்காத கடைகளில் சென்று தேடிவருந்தாத வண்ணம், நால்வகைப் பொன்னுக் கேற்ப நால்வகைக் கொடிகள், அவ்வக் கடைகள்முன் எடுக்கப்பட்டிருக்கும்.

சாதரூபம்
கிளிச்சிறை ஆடகம்
சம்பூநதமென
ஓங்கிய கொள்கையிற்
பொலந்தெரி மாக்கள்
கலங்களுர் ஒழித்தாங்(கு)
இலங்குகொடி எடுக்கும்
நடுங்கிலர் வீதியும்

அறுவை வீதி:

பட்டாலும் பருத்தியாலும், மயிராலும் நெய்யப்பட்ட புடவைகளும் கம்பளிகளும் ஒவ்வொரு வகைகளிலும் நூறு நூறாய் கட்டப்பட்ட பல தொகுதிகளையுடைய புடவைக் கடைகளெல்லாம் ஒரு வீதியில் இருந்தன.

நூலினும் மயிரினும்
நுழைநூற் பட்டினும்
பால்வகை தெரியாப்
பன்னூ(று) அடுக்கத்து

—"தமிழ் மகன்"

சூரிய மண்டலம்

அழுக்கப்பெற்ற வெப்ப வாயுக்களின் கூட்டமே சூரிய மண்டலமாகும். இவ் வாயுக்கள் நமது பூமியிலுள்ள ஜலத்தைப்பார்க்கிலும் கனமுடையனவாயினும், வாயுவின் சுபாவமுடையனவாகும். இவ் வாயுவின்றே நமது வாழ்வுக்கு அத்தியாவசியமான வெப்பமும் வெளிச்சமும் வெளிவருகின்றன நமக்குக் கிடைக்கும் வெளிச்சமும், உஷ்ணமும் சூரியனின் மேற்பரப்பினின்றே வந்து கொண்டிருக்கின்றன. ஆனால் இவ்வாறு வெளிப் பரப்பினின்றுமட்டும் பல யுகங்களுக்கு நமக்கு வெப்பம் வந்துகொண்டிருப்பின் அப்பரப்பு வரவரச் சக்தி குறையப்பெற்றுக் குளிர்ச்சியடைந்து கறுப்பு நிறத்தையடையும். ஆனால் உண்மையில் அவ்வாறு அவ் வெளிப்பரப்பின் சக்தி குறையாமல் அது எப்போதும் வெண்மை நிறத்துடனேயே இருப்பதால் சூரியனின் உட்புறத்திலிருந்து வெளிப்புறத்துக்கு வாயு நதிகளின் மூலமாகச் சக்தி வந்துகொண்டிருக்கிறதென்று தெளியப்படுகிறது. சூரியனின் உள் பாகம் எத்தன்மையுடையது என்பதை அதன் வெளி பாகத்தில் நடக்கும் சம்பவங்களை வைத்தே அநுமானிக்க வேண்டியிருக்கிறது. இத்தகைய ஆராய்ச்சியால், சூரியனின் உட்புறம் வெப்பம் நிறைந்த பிரதேசம் என்றும் காலநடையில் ஆறுவதினால் வெப்பம் குறைந்து போகாவண்ணம் மேலும் மேலும் அதற்கு வெப்பம் வந்து கொண்டிருக்கிறதென்றும் கண்டு பிடிக்கப் பட்டிருக்கின்றன.

சூடு ஆறுவதற்கு இடமில்லாமல் மேன்மேலும் சூடு எங்கிருந்து சூரியனுக்குக் கிடைக்கிறது? சூரியனின் வெப்பம் குறையாவண்ணம் அதற்கு வெப்பமளித்து வரும் ஆதாரங்கள் மூன்று உண்டு. சூரிய மண்டலத்தின் அபாரமான நிறை காரணமாக அதற்கேற்பட்டுள்ள ஆகர்ஷண சக்தியே அதற்குக் குறையாத உஷ்ணம் தரும் முதல் ஆதாரமாகும். இஃதெவ்வாறெனச் சிறிது விளக்குவோம். நாம் ஒரு சிறு கல்லை ஒரு வீட்டு மாடியினின்றும் நழுவ விட்டால் அது பூமியின் ஆகர்ஷண சக்தியால் இழுக்கப்பட்டு அதிக வேகத்துடன் கீழ் விழுகிறது. இவ் வேகத்தினால் கல்லுக்கு அதிகமான சக்தி ஏற்படுகிறது. இச்சக்தியுடன் வரும் கல் தரையிலே விழுங்கால், அதன் வேகம் திடீரென நிறுத்தப் படுகிறது, இத் தடை காரணமாக, இதுகாறும் அக்கல் பெற்றிருந்த சக்தி உஷ்ணமாக மாறிவிடுகிறது. இப்படியாக பூமியின் ஆகர்ஷண சக்தி அக் கல்லின் உஷ்ணம் அதிகமாவதற்குக் காரணமாகிறது.

இனி சூரியனுடைய மொத்த நிறை பூமியினுடைய மொத்த நிறையை விடப் பல மடங்கு அதிகமாதலால் சூரியன் பூமியைவிடப் பன்மடங்கு

அதிக ஆகர்ஷண சக்தியைப் பெற்றிருக்கிறது. இதன் பலனாக சூரியன் மேற்பரப்பு அதன் மையத்தை நோக்கி இழுக்கப்படுகிறது. அப்படி இழுக்கப்படுங்கால் அம் மேற்பரப்பிலுள்ள வாயுப் பொருள்கள் சடேரென்று விழுந்து, விழும் வேகத்தினால் சக்தி வெப்பமாக மாறி தீக்குழம்பாகி அபாரமான உஷ்ணமேற்படுவதற்கு ஆதாரமாகின்றன. சூரியன் இவ்வாறு தன்னைத்தானே ஒடுக்கிக்கொள்வதால்தான் உஷ்ணம் பெறுகிறது. எனின், சீக்கிரத்தில் அதன் வடிவம் சிறுத்துவிடுமோவென்று சிலர் அஞ்சக்கூடும். ஆனால் இப்போது சூரியனிலிருந்து வந்துகொண்டிருக்கும் அளவில் 10.000 ஆண்டுகள் உஷ்ணம் தருவதற்குச் சூரியன் 20 மைல் சுருங்கினாலே போதும். சூரியனோ சுமார் எட்டு லட்சம் மைல் குறுக்களவுள்ளது. ஆகலால் நாம் பயப்படும் அளவுக்குச் சூரியன் சுருங்குவதற்கு முன் அநேக யுகங்கள் கழிந்துபோகும்.

சூரியனின் அபரிமிதமான கனத்தினால் அதற்கு ஆகர்ஷண சக்தி மிகவும் அதிகமெனச் சொன்னோம். பூமி சூரியனைச் சுற்றிக்கொண்டிருப்பது போல சிறு சிறு பாறைகளும், சிறு சிறு பூமிகளும் வாயுக் கூட்டங்களும் சூரியனை சுற்றிக்கொண்டிருக்கின்றன. சூரியனின் ஆகர்ஷண சக்தியால் இவை அவ்வப்போது இழுக்கப்பட்டு சூரியன் மேல் வெகு வேகத்துடன் விழுகின்றன. விழும்போது சூரியனுடன் மோதி அபரிமிதமான சூடு உண்டாகிறது. இதுவே சூரியனின் உஷ்ணத்திற்கு இரண்டாவதான ஆதாரமாகிறது. ஒவ்வொரு விநாடியிலும் 400 கோடி டன் நிறையுள்ள இத்தகைய பாறைகளும் ஆவிக்கூட்டங்களும் சூரியனுடனே மோதி அதற்கு உஷ்ணமளிக்கின்றன. இன்னும் தாமாகவே சூடு உற்பத்தி செய்யும் தன்மையுடைய சில பொருள்கள் சூரியமண்டலத்தில் இருக்கின்றன. ரேடியம் என்னும் தாதுப் பொருள் தானே சிறிது சிறிதாகக் கரைந்துகொண்டே வந்து தன் சக்தியை உஷ்ணமாக வெளிப்படுத்தும் இயல்புடையது. இந்த ரேடியம் சூரியனில் இருப்பதாகத் தெரிவதால் இதுவும் சூரியனின் வெம்மைக்கு ஆதாரமாகின்றது. ஆக இம் மூன்று காரணங்களாலும் சூரியன் எந்நாளும் குன்றாத வெம்மை பெற்று ஒளித்திரளாய் உலகத்திற்கு அளவிலா உதவி புரிகின்றது.

சூரியனை ஒரு தூரதிருஷ்டிக் கண்ணாடியின் மூலமாய்ப் பார்க்குங்கால், அதன் மேற்பரப்பு, அரிசி போன்ற நுண்ணிய சிறு சிறு மேகத் திரள்களால் மூடப்பட்டதாகக் காணப்படுகிறது. சூரியன் என்பது வெவ்வேறு தன்மைவாய்ந்த மூன்று அடுக்குகளமைந்த ஒரு பிண்டம். அதாவது நமது பூமியைச் சூழ்ந்து வாயு மண்டலம் அமைந்திருப்பதுபோலச் சூரியனின் மத்திய பாகத்தைச் சுற்றி இரண்டு மண்டலங்கள் அமைந்திருக்கின்றன.

சூரியனின் மத்தியப்பிரதேசமான ஜோதி மண்டலம் ஒரே ஒளித்திரளாய் கண்ணைப் பறிக்கும் வெள்ளை நிறத்ததாயுள்ள தீப் பிழம்பாகும். இதைச் சூழ்ந்து வெம்மை வாயுக்களாலான மண்டலம் அமைந்திருக்கிறது. இவையிரண்டுக்கும் வெளிப்

புறத்தே கருஞ் சிவப்பு நிறமுள்ள சிற்சில வெய்மை வாயுக்கள் சூழ்ந்திருக்கின்றன. இச் சிவப்பு நிறம் மத்திய ஜோதி மண்டலத்தின் அபரிமிதமான ஒளியினால் நமது கண்களுக்குப் புலனாவதில்லை. இம் மூன்றாவது மண்டலத்தினின்றும் சிற்சில வேளைகளில் தீ மலைகள்போல் ஜுவாலைகள் பதினாயிரம் லக்ஷம் மைல் வரையில் உயரக் கிளம்பித் திரும்ப அம் மண்டலத்தின்மேல் அணைவதுபோல் விழும். ஒரு விநாடிக்கு 20, 30 மைல் வேகத்துடன் அந்த ஜுவாலைகள் அதிக உயரம் எழும்பிப் பின்பு பின்னடைவதைத் தூரதரிசனக் கண்ணாடியின் வழியாய்ப் பார்க்கிறவர் வேறு அழகான கண்காட்சியை விரும்புவதில்லையாம். முன்காலத்தில் இத் தீ மலைகளை கிரகண காலங்களில் மாத்திரந்தான் அதாவது ஜோதிர் மயமான மத்திய மண்டலத்தைச் சந்திரன் மறைக்கும்போது, தூரதிருஷ்டிக் கண்ணாடிகள் வழியாகப் பார்க்க முடிந்தது. ஆனால் சென்ற நூறு வருஷங்களாக எல்லாச் சமயங்களிலும் சூரியனிலிருந்து தீ மலைகள் எழும்புவதைப் பார்க்க ஒருவித கருவி உபயோகப்பட்டு வருகிறது.

ஜோதி மண்டலத்தைத் தூரதரிசினிக் கண்ணாடியால் உற்றுநோக்குங்கால், அதன் பரப்பில், சிறிதும் பெரிதுமான கறுத்த வட்டமான துவாரங்கள்போல் சில களங்கங்கள் காணப்படுகின்றன. இவை வெள்ளை நிறமுள்ள இம் மண்டலத்தில் பொட்டுக்கள்போல் விளங்கி எப்பொழுதும் இம் மண்டலத்தைச் சுற்றிக்கொண்டேயிருக்கின்றன. சில வேளைகளில் இக் களங்கங்கள் மிகப் பெரிதாகக் காணப்படுகின்றன. அவ் வேளைகளில் நாம் தூரதிருஷ்டிக் கண்ணாடியின் உதவியில்லாமலே, புகையேற்றின சிறு கண்ணாடியின் மூலமாகவோ அல்லது மாலை காலை நேரங்களானால் வெறுங் கண்களினாலோ பார்க்கலாம். இவை சூரியன் சூடு இழந்த பாகங்கள் எனக் கருதப்படுகின்றன. இவை மண்டலத்தைச் சுற்றும் மாதிரியினின்றும் சூரியன் தன்னைத்தானே சுற்றிக்கொள்கிறது என்று தெரிகிறது.

ஆனால் நமது பூமி தன்னைத்தானே சுற்றிக்கொள்வதற்கும் சூரியன் அப்படிச் சுற்றுவதற்கும் வித்தியாசம் உண்டு. பூமியில் எல்லாப் பாகமும் சேர்ந்து சுற்றுகிறது. ஆனால் சூரியனின் சில பாகங்கள் வேகமாகச் சுற்றுகின்றன, மற்றும் சில சுற்றாமலும் இருக்கின்றன.

இக் களங்கங்கள் இம்மண்டலத்தில் அதிகமாகுங்கால் நமது பூமியிலும் சில அற்புதங்கள் நடைபெறுகின்றன. அச் சமயங்களில் காந்தங்களெல்லாம் புயல்காற்றில் அலைந்தாடும் மரங்களைப்போல் அசைவடைகின்றன. தந்திக் கம்பிகளில் கோளாறுகள் ஏற்பட்டுத் தந்தியின் மார்க்கத்திற்கு இடையூறு நேரிடுகின்றது. இவையிலிருந்து சூரியனில் பரவும் களங்கங்களுக்கும் நமது பூமியில் நடக்கும் சம்பவங்களுக்கும் பொதுக் காரணம் ஒன்றிருக்க வேண்டும் என அனுமானிக்கப்படுகின்றது: இக் காரணம் என்னவென்பது இன்னும் சந்தேகத்திலேயே இருக்கிறது.

நம் பூமியைச் சுற்றிக் காற்று இருப்பதுபோல சூரியனைச் சுற்றியும்

அநேக வெம்மை வாயுக்கள் இருப்பதாகச் சொன்னோம். சூரியன் என்பதை அநேகர் ஜ்வாலை விட்டெரியும் கோளமெனத் தப்பிதமாய்க் கருதுகின்றனர். நம் வீட்டில் விறகு எரிவதுபோல் சூரியனில் ஒன்றும் எரியவில்லை. ஓர் இரும்புத் துண்டைப் பழுக்கப் பழுக்கக் காய்ச்சினால் முதலில் சிவப்பு நிறமாகவும் பின்பு வெண்மை நிறமாகவும் ஆகும். உலையிலிருந்து உடன் எடுத்தால் அது பக்கத்திலிருக்குமிடங்களுக்கு வெளிச்சமும் உஷ்ணமும் கொடுக்கும். ஆனால் கொஞ்சம் கருப்பு நிறம் பெற்றுவிடும். இதுபோலவே சூரியனும் வெண்மை நிறமுள்ள ஒரு தீக் குழம்பேயாகும். அது மேலும் மேலும் வெப்பம் அளிக்கப்பெற்று வருவதால்மாத்திரம் தன்னுடைய வெண்மையையும், வெம்மையையும் மங்காமலும் குறையாமலும் வைத்துக்கொண்டேயிருக்கிறது. சூரியனைச் சுற்றியிருக்கும் இரண்டாவது மண்டலத்தில் நமது பூமியிலிருக்கும் அநேக பொருள்களிருக்கின்றன. இவைகளில் சில நமது பூமியில் இல்லாதவையெனக் கருதப்பட்டு வந்து, அங்கு இருந்தால் இங்குமிருக்க வேண்டுமெனும் ஊகத்தினால் தூண்டப்பட்ட ஆராய்ச்சிகளின் பலனாகப் புதிதாக இப் பூமியிலும் கண்டுபிடிக்கப்பட்டன. இவைகளில் ஹீலியம் என்னும் தாதுப்பொருளும் ஒன்று. இன்னும் சில என்ன பொருள்கள் என்றே கண்டுபிடிக்கப்படாமலுமிருக்கின்றன.

பூரண கிரகண காலத்தில் சூரியனைத் தூரதிருஷ்டிக் கண்ணாடியின் மூலமாக நோக்கினால் விளங்கும் அற்புதக் காட்சியை இங்குச் சிறிது விவரித்து இக் கட்டுரையை முடிக்கிறேன். நீல வானத்தில் சந்திரனால் மறைக்கப்பட்ட சூரியனின் பக்கங்களினின்றும் வெண்மைச் சிறகுகள் உருவங் கொண்ட ஒரு புகை தோன்றி வால் நக்ஷத்திரங்கள்போல் லக்ஷக்கணக்கான மைல் தூரம் இருபுறமும் பரவி விளங்கும். இப் புகைத் தோற்றம் ஞாயிறு மண்டலத்தினின்றும் வீசும் ஒளியின் வேகத்தால் உண்டானது. இதில் பூமியில் இதுவரை கண்டுபிடிக்கப்படாத ஒரு தாதுப் பொருள் இருந்து வருகிறது. இக் காட்சியைப் பூரண கிரகண வேளைகளில் சில விநாடிகள் மட்டும்தான் பார்க்க முடியும்.

சூரிய மண்டலத்திலுள்ள அவ்வளவு உஷ்ணம் இதுகாறும் பூமியில் செயற்கை வழிகளால் உண்டாக்க முடியவில்லை. ஆகலின் அபரிமிதமான வெப்பத்தில் அகப்பட்ட பொருள்களின் இயல்பு எவ்வாறு மாறுகிறதென்பதை அறிவதற்குச் சூரியனையே ஓர் ஆராய்ச்சிசாலையாகக் கொண்டு அறிஞர்கள் அறிவு முயற்சி செய்து வருகிறார்கள். இவ்வாராய்ச்சியினால் இதுவரையில் அறியப்படாத இயற்கையின் இரகசியங்கள் இன்னும் பல புலனாகுமென்று எதிர் பார்க்கப்படுகிறது.

—"தேவிதாசன்"

தமயனின் கடிதம்-16

வெல்க சக்தி!

சக்தி வெல்க! சக்தி வெல்க! சக்தி வெல்கவே! 1
சக்தி வெல்க! சக்தி வெல்க! சக்தி வெல்கவே!
சித்திசித்தி சித்திசித்தி செய்முயற்சி யாவிலும்
சிரம்நிமிர்ந்து பணிபுரிந்து செகத்துயர்வு கொள்ளுவோம்!

அச்சம்போக்கும் ஆண்மைஊக்கும் அன்னை சக்தி மந்திரம் 2
அகத்துறையும் தனில்மிடிமை யகற்றிநல்ல பதந்தரும்
இச்சகத்தும் விண்ணகத்தும் இன்பமின்ப மின்பமே!
இன்பமின்றித் தொல்லையினி இல்லையெந்த நாளுமே!

பார்க்க வைத்து உண்ணல்பாவம் என்னும்நீதி தன்னையே 3
பாலர்பாடம் தன்னில்பயின்றும் பயன்விளைத்தோமில்லையே
நீர்த்திவலை நெற்றிநின்று நிலத்தில் வீழ உழைப்பதே
நெறியாய்க்கொண்டோர் துறைகள் தினமும் நீண்டுநீண்டு
போகுதே!

தேவை மிஞ்சச் சேரும் பொருளைத் தேசநலத்துக் கீயுவீர் 4
தீமை நீக்க நோக்கமின்றிப் பெட்டியிட்டுக் காத்திடீர்
பாவமான முறைகளென்ப யாவுமாய்ந்து சமத்துவம்
பரிதிபோல் ஒளிவிடுகப் பாரிலினி நித்தியம்

முகமலரிற் களிமதுவும் முழுமதிர்போல் நிறைகவே 5
முயற்சியெனும் வண்டினங்கள் மொய்த்துப்பண் ணறைகவே
அகம் விரிந்து உலகெலாம் அநந்தமிழைப் போற்றவே
அன்னைசக்தி வெல்கவெல்க என்று யாரும் சாற்றவே.

ஏறுஏறு மேலேஏறு அன்னை நாமம் என்றும்ம 6
இயம்பினாளும் என்வரினும் இம்மிச்சோர்வு மின்றியே
வீறுகொண்ட பெரியர்வாழ் விநோதங்களை ஓர்ந்துமே
வெல்கசக்தி! வெல்கசக்தி! எனும் பக்தி ஆர்ந்துமே!

——"ஆசிரமவாசி"

விழுமிய செல்வம்

(டாக்டர் சண்டர் லண்டைத் தழுவி எழுதியது)

சர்வதயாபரனாகிய ஆண்டவன் தனது அருமைப் புதல்வருக்குத் தரும சாதனமாக இட்டு வைத்த கடல், தரை, மலை, காடு, புனல் முதலியன தருஞ் செல்வம் எக்காலத்தும் அழியாப் பெருநிதியாயிருக்கின்றது. அப்படியிருந்தும் நாட்டிலே 'வறுமை குடிகொள்வதற்குக் காரணமென்னவென்று பொருளாதார நிபுணரைக் கேட்டால், பொருள் சிலரிடத்தில் சுரத்தலே அதற்குக் காரணமென்பர். அத்தகைய பெரும் பணம்படைத்தோர் தாமும் தங்கள் செல்வத்தில் திருப்தியடைந்தார்களில்லை. கோடி ஸ்ரீமானாயிருப்பவன் தன் பணத்தைப் பன்மடங்கு பெருக்க முயல்கின்றான். அதேபோன்று சொற்ப சம்பாத்தியமுள்ள ஏழையானவன் தன் வருவாயை எவ்விதத்திலும் பெருக்கும் நோக்கமாய் நெற்றி வியர்வை நிலத்தில் சிந்தும்படி உழைக்கின்றான். இவ்விருதிறத்தாரும் தத்தம் வருவாயில் திருப்தியடையாதவரேயாவர். ஒருவன் பொருள் இருந்தும், மற்றொருவன் பொருளில்லாமலும் தரித்திரராகின்றனர். ஏனெனில் இரு திறத்தாருக்கும் பொருள்மீதுள்ள அவா நீங்கும்வரையும் திருப்தி ஏற்படாது.

மக்களுக்குரிய செவ்வம் அகச் செல்வம், புறச் செல்வம என இரு வகைப்படும். இவற்றுள் அகச் செல்வமே சிறந்தது. புறச் செல்வம் பொருள் சம்பந்தமானது; அகச் செல்வம் ஆத்மீக சம்பந்தமானது. தெய்வப் புலமை வாய்ந்தவர்களே அகச் செல்வத்தின் அருஞ் சுவை மாந்தித் தேக்கித் திளைத்தவர். பொருட் செல்வம் சீவியத்திற்கு வேண்டற்பாலது. அதைத் தேடுதலும் மிகவுங் கஷ்டமான காரியம். ஆனால் நமது சீவியத்தை வெறும் சோற்றுத் துருத்திக்குமட்டும் அர்ப்பணஞ் செய்வது பெரும் பேதமையாகும். அதனால் வாழ்க்கையின் நோக்கம் பூர்த்தி பெறாது. புலவர் போற்றும் இந்திரியங்கள், மனம், ஆத்மா முதலியவற்றிற்கும் தகுந்த போசனமளித்தல் வேண்டும். இவைகளைப் போஷித்தலும் எளிது. அங்ஙனம் போஷித்தால் அழியாச் செல்வத்தை அடையலாம்.

கவிவாணர் மெச்சும் விழுமியசெல்வம் என்னவென்பதைச் சற்று ஆராய்வோம். சமய குரவர்களே இதற்குத் தக்க சான்று அளிக்கின்றனர். கிறிஸ்து நாதர் "உலகப் பொருள் அனைத்தையும் அடைந்து! தன்னை (ஆத்மனை) இழந்தவன் என்னபிரயோசனத்தை அடைவன்" என்றும், முகம்மது நபியானவர் "மனிதனின் உண்மைச் செல்வம் அவனுடைய நற்செயல்களாம்" என்றும் கூறியிருக்கின்றனர். இந்த ஆப்த வாக்கியங்களை உற்று நோக்குமிடத்து, எது மனித

வாழ்க்கையை விருத்தியாக்குவதோ, சிறப்பிப்பதோ, செழிப்பிப்பதோ, அல்லது மேன்மைப்படுத்துவதோ, அதே உண்மைச் செல்வம் என்பது தெளிவாகின்றது. இந்தக் கொள்கையின்படி, சங்கீதத்தில் சுருதி கூட்டுஞ் செவி, விழிப்பான மனம், தேகாரோக்கியம், வீரியம், உறுதி, கீர்த்தி, நேர்மை, மாசற்ற ஒழுக்கம், தூய சித்தம், அன்பு, என்பன அனைத்தும் தலையாய செல்வமாம். அவை இல்லாதோர் ஏனைய செல்வமிருந்தும் வறியோராவர்.

இனிய சங்கீதத்தின் இன் சுவை மாந்தி அதைப் பாராட்டும் மனிதன் எவ்வளவு ஐஸ்வரிய முடையவன்? பண்டு தொட்டு இன்று வரை யுள்ள புலவர்களின் நூல்களைத் தினமும் ஆராய்ந்து அதனால் அடையுங் கூட்டுற வால் எய்தும் இன்பமும் நுகர்வான் ஆக்கம் எம்மாத்திரம்! ஒரு கலைவாணனின் அறிவு மாண்புறு செல்வம். புனல், மலை, வான், விண்மீன், பூகம்பம், மழை முதலியவற்றில் மகிழ்ச்சி காண்பானின் செல்வம் எவ்வளவு பாராட்டத் தக்கது! கற்புடை மனைவியைப் பெற்ற இல்வாழ்வான் சீரிய செல்வத்தை யுடையவன். நன் மக்கட் பேற்றை யுடைய நற்றாய் விழுமிய செல்வத்தை யுடையவள். பணமிலனாயினும், ஆரோக்கியம், கல்வி, ஆர்வம், உயர் நோக்கம் முதலியன பொருந்திய இளைஞன் செல்வம் எம்மாத்திரம்! எவ்வித இன்னல் உறினும் தன் நேர்மையை உயிரினும் ஓம்பிக் காக்கும் வர்த்தகன் செல்வம் எத்தகை ஏமாப் புடைத்து? தனது சீரிய ஒழுக்கத்தினின்றும் வழுவாத பரோபகாரியின் மனுஷத்வம் எவ்வளவு மதிப்பிலாச் செல்வம்! தெய்வ பக்தியில் ஈடுபட்டு அதற்குச் சரணாகதி யாகும் தொண்டனின் செல்வம் சொல்லுதற் பாற்றோ? அழியாச் செல்வத்தை யளிப்பதே சமயத்தின் முக்கிய நோக்கமாகும்.

இத்தகைப் பெருமை வாய்ந்த செல்வத்தைப் பெறுவதற்குரிய சாதனங்கள் பல. மனதைப் பண்படுத்தி அறிவைச் சேமித்துக் கொள்ளல்; நமது முதாதைகள் விடா முயற்சியால் சம்பாதித்து நமக்கு நன்கொடையா யளித்துள்ள அநுபவங்களையும் எண்ணங்களையும் நமது சொந்தமாக்குதல்; மனப் பூர்வமாக ஜன சமூகத்தோடு கலந்து மக்களோடு சகோதரத்துவத்தை ஸ்தாபித்தல்; அவர்களின் நன்மைகளை நமது நன்மைகளாகக் கருதல்; பிறர்மீது அன்பு பாராட்டி நமது மனதுக்குப் பிரியமான பொது நல சேவைகளில் தலையிடுதல்; எல்லாவற்றிற்கும் மேலாக நமது இருதயங்களை ஆண்டவனுக்குத் தகுந்த உறைவிடமாக்கி அதனால் உறும் திடசித்தம், ஆனந்தம் முதலியவற்றை அநுபவித்தல; இவை போன்ற நன் முயற்சிகள் இம்மையில் அழியாச் செல்வத்தை ஈந்து மறுமையில் பேரானந்தப் பெரு வாழ்வையும் நல்கும்.

ஆண்டவன் அருளிய அரும் பெருஞ் செல்வத்தின் அரைப் பகுதியேனும் நம் வசமாக்கினால் நமது சீவியம் அளப்பருஞ் செல்வத்தை யடையும். அதை வசமாக்குவதற்குப் பரந்த நோக்கு, கனிவுள்ள மனம், நன்றியறிதலுள்ள இருதயம் முதலியன வேண்டற்பாலது. இவைகளின்றி நமக்கு இவ்வுலக இன்பமில்லை. கனிச

—ஜி. கே. சுந்தர சாஸ்திரி, B.A.B.T.

தேவதூதன்

நான் தினந்தோறும் நிலக் கண்ணாடி முன் நின்று என் அவயவங்களைப் பார்த்து ஆனந்தப் படுவதுண்டு. "நான் சுந்தர புருஷன். என் அழகுக்கு நிகராக யாருமே கிடையாது" என்று நான் பலவாறாக நினைத்து குதூகுலப் படுவேன்.

இவ்வாறாக ஒரு நாள் குதூகுலப் படும்பொழுது யென் சிரசில் உள்ள மயிர்களுக் கிடையில் நரை மயிர் ஒன்று தெரிந்தது. அதைக் கண்டு நான் திடுக்கிட்டேன். பிறகு அதை என் விரல்களால் பிடித்துப் பறிக்கப் பார்த்தேன். அப்பொழுது அந்நரை மயிர் ஒரு குதூகுலமான சிரிப்பு சிரித்து விட்டு பின்வருமாறு உணர்ச்சியுடன் கூறிற்று:—"தம்பி, யென்னை நீ மறந்தாய் போலும். உன் கூடவே தானே நானும் பிறந்தேன். உன் இரத்தம் உன் நரம்பு உன் சகல அவயவங்களிலும் உன் கூடவே வாழ்கிறேனே; இது உனக்கு தெரியாதா!"

நான்: நீ சொல்வது எனக்கு நன்றாகத் தெரியவில்லையே; நீ யார்?

தூதன்: என்னை நரை யென்றும் வயோதிகனென்றும் விருத்தனென்றும் சொல்லுவார்கள். நான் சகல ஜீவராசிகளிலும் ஸ்தாவர சங்கமங்களிலும் இருக்கிறேன். இது சிலருக்குத் தான் தெரியும். ஆகையால் நீ என்னுடைய உத்தம சினேகிதனாயிருப்பதால் உனக்குச் சில வார்த்தைகள் கூறலாமென்று இங்கு வந்தேன்.

நான்: ஆகா! அப்படியானால் நீ சொல்லும் வார்த்தைகளை அதிக சிரத்தையுடன் கேட்பேன். நீ தைரியமாகவும் மிகத் தெளிவாகவும் சொல்லுவாயாக.

யில்லாத மனமானது சூரியனின் பிரகாசத்தை மறந்து அதனிடத்துள்ள மறுக்களைப் பற்றி முறையிடுகின்றது. மாளிகையில் வசிக்கும் அரசனோ வாழ்க்கையில் அதிருப்தி யடைகின்றான். குடிசையில் வாழும் துறவியோ வாழ்வின் நலங்கண்டு வாயுற வாழ்த்துகின்றான். இதிலிருந்து ஒரு பெரிய உண்மை புலப்படுகின்றது. செல்வமும் வறுமையும் ஒருவன் மனதைப் பொறுத்ததே யன்றி வேறல்ல. மனமே உலகத்தை ஒருவனுக்கு மோக்ஷமாகவும் மற்றொருவனுக்கு நரகமாகவுந் தோற்றுவிக்கின்றது. ஆகையால் தன்னைத் தானே உணர்பவன் உலகத்தைத் தனக்குச் சொந்தமாக்கிக் கொள்ளுகிறான். அவன் குடிசையிலிருந்தாலுஞ் சரி, மாளிகையிலிருந்தாலுஞ் சரி அரச போகமே எய்துவான் என்பது தெள்ளிதில் புலப்படுகின்றது.

ஞாதன்: ஆனால் மிகவும் சந்தோஷம்; இன்றுடன் உன் முப்பத்தைந்தாம் வயது பூர்த்தியாகி விட்டதே. இருபது வருஷம் அல்லது பத்து வருஷங்களுக்குமுன்னால் நீ இப்படியே இருந்தாயா?

நான்: இல்லை, அது யெப்படி இருக்க முடியும்?

ஞாதன்: இருபது அல்லது பத்து வருஷத்திற் கப்பாலோ நீ இப்படியே இருப்பது அரிது அல்லவா. ஆனதால் ஏதோ ஒரு சக்தி இவ்வளவு நாளாக உன்னை இந்த நிலைமையில் கொண்டு வந்தது. அந்தச் சக்தி தான் பிர்மம். அதை நீ அறிந்திருக்கிறாயா?

நான்: இல்லை; இவ்விஷயங்களைத் தெளிவாக என் பேரில் தயவு செய்து கூறுவாயாக.

ஞாதன்: ஆகா, அப்படியே கூறுகிறேன். கவனமாகக் கேள். நான் முன் சொல்லிய படியே சகல ஜீவராசிகளிலும் தாவர சங்கமங்களிலும் ஒரு சக்தி இருந்து வருகிறது. அதைப் பல அறிஞர்கள் பலவாறாக ஒவ்வொரு மதக் கொள்கைப் படி கூறுகிறார்கள். ஆனால் வஸ்து ஒன்றுதான். பெயர் மாத்திரம் பலவிதம். அந்தச் சக்தியை அறிவதோ மிகச் சுலபம். யாதொருத்தன் தன் நித்திய கருமானுஷ்டானங்களைப் பகவானுக்காக (சக்திக்காக) அர்ப்பணம் செய்கிறானோ அவனே பரம பக்தன். அவனே பரம யோகி. அவனே முக்தன். அவனே சிரஞ்சீவி. ஆகையால் நீ உன் கர்மங்களைப் பகவானுக்கு அர்ப்பணம் செய்து விட்டு சிரஞ்சீவியாக இருப்பாயாக.

அன்பில்லாத அதிகாரம் பயங்கரமான பரிணாம முடையது. அப்படிப்பட்ட அதிகாரத்திற்கு யாராவது பக்தி செலுத்துவார்களானால், அது, காட்டு ஜனங்கள், பேய் பிசாசுகளுக்குப் பயத்தினால் பக்தி செலுத்துகிறார்களே அதைப் போலத்தான்.

—ஹாலிபாக்ஸ்

சிறு கதை

உஜ்வலினி

"கண்ணாமூச்சியாரே காட்டு மூச்சியாரே ஒனக்கோர் பழம் எனக்கோர் பழம் கொண்டோடி வா" என்று சொல்லி லக்ஷ்மி உஜ்வலினியைத் தன் பிடியினின்றும் விடுவித்தாள்.

உஜ்வலினி தெரு மத்தியில் போய் நின்றுகொண்டு நாலாபக்கமும் சுற்றிப் பார்த்தாள். சிறுமிகளும், சிறுவர்களும அநேகர் லக்ஷ்மியைப் போய்த் தொட்டார்கள் அவர்களை எல்லாம் அவள் கவனிக்கவேயில்லை. "ஓடு மீன் ஓட உறு மீன் வரும் வரைக்கும் வாடியிருக்குமாங் கொக்கு" என்பதைப் போல் அவள் வேறு யாரையோ எதிர் பார்த்துக்கொண்டிருந்தாள். பால் நிலவில் அச்சமயம் ஒரு சிறுவனுடைய உருவம் தெருக்கோடியில் தோன்றியது. உடனே ஒரே பாய்ச்சலாய் அவனை நோக்கி ஓடினாள் அவனும் அவளிடத்தில் அகப்படாமலிருப்பதற்கு ஏதேதோ பிரயத்தனங்கள் செய்து பார்த்தான். ஆனால் பிரயோஜனமில்லை. சிறுமி அவனைப் பிடித்துவிட்டாள். அவளுக்குச் சந்தோஷம் பொறுக்க முடியவில்லை. "என்னிடமிருந்து தப்பிக்க உன்னால் முடியுமோ!" என்று சொல்லிச் சிரித்தாள். இதரச் சிறுவர்களுக்கும், சிறுமிகளுக்குங்கூட இதைக் கண்டு சந்தோஷந்தான். ஜெயராஜைப் பிடிக்கும் வல்லமை வாய்ந்தவள் தங்களுடைய கூட்டத்தில் உஜ்வலினி ஒருத்திதான் என்பது அவர்களுடைய அபிப்ராயம். சிறையினின்றும் தப்பித்து ஓடிய கைதியை மீண்டும் பிடித்துவரும் போலீஸ் அதிகாரிபோல், முகத்தில் கர்வக்குறிகள் தோன்ற, ஜெயராஜைப் பிடித்து இழுத்துக்கொண்டு வந்தாள் உஜ்வலினி. திண்ணைமீது நின்று, ஒருவர் இதைப் பார்த்துக்கொண்டிருந்தார். அவருடைய முகத்தில் உவகைக் கிரணங்கள் மெதுவாய் ஒளிவீசின.

இம்மாதிரி உஜ்வலினியும், ஜெயராஜனும் ஒருவரையொருவர் பிடித்துக்கொண்டு வெகுநேரம்வரை விளையாடிக்கொண்டிருப்பார்கள். இதனால் மற்றச் சிறுவர்களுக்கு விளையாட்டிலுள்ள சுவாரஸ்யங் குறைகிறது என்று தெரிந்தால், வேறு யாரையாவது பிடித்துக் கொடுத்துவிட்டு, அவர்களிருவரும் ஏகாவது ஓரிடத்தில் போய் ஒளிந்துகொள்வார்கள். அநேக ஆட்டங்கள்வரை வெளிவராமல் ஏதேதோ பேசிக்கொண்டிருப்பார்கள். சில சமயங்களில் ஆட்டம் முடியும்வரை அவர்கள் வெளியேறுவதே இல்லை.

உஜ்வலினி, கலெக்டர் ஆபீஸ் ஹெட் கிளார்க், சீதாராமய்யரின் புதல்வி. அவள் பெயருக்கேற்ற வெண்மை நிறம் வாய்ந்தவள். ஜெயராஜனும் உஜ்வலினியும் சேர்ந்தே

பள்ளிக்கூடம் போவார்கள். படித்தால் இருவரும் ஒன்றாய்ப் படிப்பார்கள்; விளையாடினால் இருவரும் ஒன்றாய் விளையாடுவார்கள். உஜ்வலினி தனக்குக் கிடைக்குந் தின்பண்டங்களை, ஜெயராஜுக்கும் பங்கிட்டுக்கொடுத்துத்தான் சாப்பிடுவாள். இருவரும் உண்பதும் ஒரே சமயம்; உறங்குவதும் ஒரே சமயம்; எழுந்திருப்பதுங்கூட ஒரேசமயம்!

2

"ஐயோ! அம்மா!" என்று தலையை ஒரு கையினால் அழுத்திப் பிடித்துக்கொண்டே ஓடிவந்தான் ஜெயராஜ். அவனுடைய சிரசினின்றும் உதிரம் ஒழுகி வடிந்துகொண்டிருந்தது. அவனுடைய அழுகைக் குரலைக் கேட்டதும், உஜ்வலினி திடுக்கிட்டு ஓடிவந்து, கைத்தாங்கலாக அவனைத் தன் தாயாரிடம் அழைத்துக்கொண்டு சென்றாள். ஜெயராஜின் தலையினின்றும் இரத்தம் வடிவதைக் கண்ட பங்கஜம்மாளுக்கு ஆத்திரம் பொறுக்க முடியவில்லை. "அடி! பாதகி! பிள்ளையை இப்படித்தானா அடிப்பது? ஆணைப் பெண்ணைப் பெற்றிருந்தால் தெரியும் பிள்ளையருமை. மலடிக் கழுதை உனக்கென்ன தெரியும்?" என்று சொல்லிப் பங்கஜம்மாள் ஜெயராஜின் சிற்றன்னையை ஆத்திரந் தீரத் திட்டினாள். உஜ்வலினியின் சின்ன உள்ளங் கொதித்தது. ஜெயராஜை அடித்த அதே தடியினால், அவளை ஒரு போடு போடலாமா என்று துடித்துக்கொண்டிருந்தாள். பின்பு பங்கஜம்மாள் ஜெயராஜின் காயத்தைக் கழுவி மருந்துபோட்டாள்.

ஜெயராஜின் தாயார் அவன் இரண்டு வயதாயிருக்கும்பொழுதே இறந்துவிட்டாள். அவனுடைய சிறிய தாயார், அன்று அவனை விளக்கேற்றும்படி கட்டளையிட்டாள். சிம்னியை துடைத்துக்கொண்டிருக்கும் போது அது தவறிக் கீழேவிழுந்து உடைந்துவிட்டது. உடனே அவனுடைய சிற்றன்னை பத்திரகாளி அவதாரம் எடுத்துவிட்டாள். "நாலு நாளைக்கு முன்னால் வாங்கின சிம்னியை அதற்குள் உடைத்துவிட்டாயா? அவருக்கு நான் என்ன பதில் சொல்லுவேன்!" என்று பக்கத்தில் கிடந்த ஒரு தடியை எடுத்து, அவன் தலையில் பலமாக ஓடி அடித்தாள்.

அன்றிரவு ஜெயராஜ் தன் வீட்டிற்குப் போகவில்லை. உஜ்வலினியின் வீட்டிலேயே சாப்பிட்டுவிட்டுப் படுத்துக்கொண்டான். சீதாராமய்யர் பிராமணராயிருந்தபோதிலும், வைதீக நியமங்களை அனுஷ்டிப்பவரல்ல. இயற்கையிலேயே மிக்க தயாளகுணமுள்ளவர். அவருடைய மனைவியும் அங்ஙனமே. அவர்களுக்குச் சங்கரன் என்ற மகனும், உஜ்வலினி என்ற மகளுமிருந்தனர்.

ஜெயராஜும், உஜ்வலினியும், ஒரே பாயில் படுத்துக்கொண்டு தங்கள் சுகதுக்கங்களைப் பற்றிப் பேசிக்கொண்டிருந்தார்கள். தன் சிற்றன்னை தனக்குச் செய்யுங் கொடுமைகளைப்பற்றி ஜெயராஜ் சொல்லிக் கொண்டிருந்தான். "ஒருநாள் நான் விளையாடிவிட்டு வீட்டிற்குப் போக வெகுநேரமாய் விட்டது. போய்க் கதவைத் தட்டினேன். "நீ வைத்த வேலைக்காரியா இருக்கிறாள், நினைத்த நேரமெல்லாந்

கதவைத் திறப்பதற்கு?" என்று சொல்லி என்னைத் துரத்திவிட்டாள். அன்று மேகங் குமுறிக்கொண்டிருந்தது. எங்கு பார்த்தாலுங் கும்மிருள். கோடையிடி 'சடசடா'ரெனத் தகர்த்துக்கொண்டிருந்தது. எங்கும் சுற்றிப் பார்த்தேன், படுப்பதற்கு இடங் கிடைக்கவில்லை. கடைசியில் ஓர் ஆலமரத்தினடியில் ஒதுங்கினேன். பேய் மழை பெருவாரியாகக் கொட்டியது.

"எங்க வீட்டிற்கு வந்திருக்கக் கூடாதா, ஜெயராஜ்?" என்றாள் உஜ்வலினி.

கடைசியில் காலையில் எழுந்த போது, நன்றாய் ஜலதோஷம் பிடித்துக்கொண்டது. உடம்பு நெருப்பாய்க் காய்ந்தது. பேசாமல் போய்ப் படுத்துக்கொண்டேன். 'நீ நாசமாய்ப் போக. எங்கிருந்து காய்ச்சலைக் கொண்டுவந்தாய்? உனக்கு யாரினி வைத்தியஞ் செய்வது?' என்றாள் அம்மா.

உஜ்வலினி வடித்த கண்ணீர் என்னவோ, ஜெயராஜுக்கு இருளில் தெரியவில்லை. ஆனால் அவள் விட்ட பெருமூச்சு அவனுக்குக் கேட்கத்தான் செய்தது.

3

வருஷங்கள் பல கழிந்தன. காலக் குயவன் சிறுவர்களையும், சிறுமிகளையும் தன் சக்கரத்தில் வைத்துச் சுழற்றி, அவர்களுடைய உருவையும், உடலையும், குரலையுங்கூட மாற்றிவிடுகிறான். சிறுவர்கள் யுவர்களாகவும், சிறுமியர் யுவதிகளாகவும் உருக் கொள்ளுகிறார்கள். யுவதிகளில் பெண்மைக்குரிய தேஜசும், மென்மையும், வாலிபர்களில் ஆண்மைக்குரிய உரமும், முரட்டுச் சுபாவமும் ஜனிக்கின்றன. உஜ்வலினி ஓர் அழகிய இளமங்கையாகிவிட்டாள்.

சங்கரனும் உஜ்வலினியுந் தூங்கின பிறகு, பங்கஜம்மாள் தன் கணவனுடன் பேசிக்கொண்டிருந்தாள்.

"உஜ்வலினிக்குப் பதினாறு வயதாகிவிட்டது. இன்னும் அவளுடைய கலியாணத்தைப்பற்றி ஒரு ஏற்பாடும் பண்ணாமலிருக்கிறீர்களே?"

"நாம் ஏற்பாடு பண்ணவேண்டியது என்னவிருக்கிறது? எல்லாந் தானே ஏற்பாடாகிவிட்டதே."

"நீங்கள் சொல்வதன் அர்த்தம் எனக்குப் புரியவில்லை.

"என் புரியவில்லை? உஜ்வலினிக்கும், ஜெயராஜுக்கும் ஏற்பட்டிருக்கும் சம்பந்தத்தை நோக்கினால், அவனுக்கே அவளைக் கலியாணம் செய்து கொடுத்துவிடுவது உசிதமென்று நான் நினைக்கிறேன்."

"உஜ்வலினியைத் தாங்கள் இன்னும் நன்றாய் அறியவில்லை. அவள் ஜெயராஜைக் கலியாணம் பண்ணிக்கொள்ளச் சம்மதிப்பாள் என்று நினைக்கிறீர்களா?"

"அதில் உனக்கென்ன சந்தேகம்?"

"ஒருநாள் ஜெயராஜின் சிறிய தாயார் அவர்கள் வீட்டில் செய்த மைசூர்ப்

பாலைக் கொண்டுவந்து கொடுத்தாள். நான் வாங்க மறுத்தேன். அதற்கு அவள், நீங்கள்தான் சாப்பிடாவிட்டால் குழந்தைகளுக்காவது கொடுக்கக்கூடாதா? என்று சொன்னாள். அதன்மேல் நான், நம் சங்கரனுக்குக் கொடுக்காவிட்டாலும், உஜ்வலினிக்காவது கொடுக்கலாம் என்று நினைத்து, அதை வாங்கி வைத்தேன். ஆனால் உஜ்வலினியோ அதைத் தொடவும் மறுத்துவிட்டாள்.”

சீதாராமய்யர் சிந்தனையிலாழ்ந்தார். அவருக்கு ஒரு வழியுந் தென்படவில்லை. இவ்வளவுதூரம் விஷயம் முற்றிவிடுமென்று அவர் நினைக்கவில்லை. ஜில்லாக் கலெக்டர் மாக்டொனால்டு துரைக்குத் தன் ஆருயிர் மனைவி இறந்த துக்கத்தினால் பைத்தியம் பிடித்துவிட்டது. அவன் எங்குச் சென்றான் என்று எவருக்குமே தெரியவில்லை. அப்பொழுது உஜ்வலினி ஒரு வாரக் குழந்தை. அதிகாரிகள் எல்லாம் கலெக்டரைத் தேடுவதில் முனைந்து நின்றார்களேயொழிய குழந்தையை ஒருவருங் கவனிக்கவில்லை. அது ஆதரவற்றுக் கிடந்தது. அதன் பரிதாபகரமான அழுகைக் குரல், சீதாராமய்யரின் உள்ளத்தை உருக்கியது. உடனே குழந்தையைத் தூக்கிக்கொண்டு வந்து தன் மனைவியிடங் கொடுத்தார். இவ் விஷயம் எவருக்குமே தெரியாது. அதிகாரிகளெல்லாம் குழந்தையுந் தாயுடன் இறந்துவிட்டதென்று நினைத்துக் கொண்டார்கள். உஜ்வலினியின் வெள்ளை நிறத்தைக் கண்ட சிலர், பிற்காலத்தில் சிறிது ஆச்சரியமுற்றபோதிலும், எல்லோரும் அவள் சீதாராமய்யரின் புதல்வி என்றே எண்ணினார்கள்.

வெகுநேரம்வரை யோசித்துவிட்டு, “பின் என்ன செய்யலாம்?” என்றார் சீதாராமய்யர்.

“இத்தனை நாளும் நமது பெண்ணாக வளர்த்துவிட்டோம். கடைசிவரைக்கும் அவள் நம்முடைய பெண்ணாகவே இருக்கட்டுமே. யாராவது ஒரு நல்ல பிராமணப் பையனைப் பார்த்து அவளைக் கலியாணம் செய்து கொடுங்கள்.”

•

சீதாராமய்யர் பின்னும் யோசனையிலாழ்ந்தார். கடைசியில், “எதற்கும் நீ அவளை ஒரு வார்த்தை கேட்டுப் பாரேன்!” என்றார்.

“அதற்கென்ன நான் மாட்டேன் என்றா சொல்லுகிறேன்!”

மறுநாட் காலை பங்கஜம்மாள் உஜ்வலினியிடம் சொன்னாள்: “உஜ்வி! உனக்கு வயது பதினாலாகிவிட்டது. இனியும் உன்னை ஒருவன் கையில் பிடித்துக் கொடுக்காமலிருந்தால், ஊரார் சிரிப்பார்கள். எதிர்த்தாத்து ஜெயராஜ் நல்ல பையன். நல்ல படிப்பு; சிறந்த குணம். தங்கமான பையன். நீயும் அவனை.......” என்று சொல்லி முடிப்பதற்குள், உஜ்வலினி படபடப்புடன் சொல்லலுற்றாள்: “அம்மா, நான் ஏதோ சிறு வயதில் அவனோடு விளையாடிக்கொண்டிருந்தேனென்று நீங்கள்.......’ அதற்குமேல் அவள் தொண்டையடைத்துக் கொண்டது. ஒன்றும் பேச முடியவில்லை. அவள் கண்களில் கண்ணீர்

ததும்பியது. சற்று நேரத்திற்குப் பின், விம்மல்களுக்கும், பெருமூச்சுக்களுக்குமிடையே, "அம்மா! பிராமணப் பெண் எங்காவது கிறிஸ்தவனைக் கலியாணம் பண்ணிக்கொள்வதுண்டா?" என்றாள்.

4

கலியாணமான ஒரு மாதத்திற்குள் உஜ்வலினி விதவையாகி விட்டாள்! அவளுடைய பரிதாப நிலைமை நோக்கிக் கண்ணீர் விடாதார் அவ்வூரில் எவருமே இல்லை. மாப்பிள்ளையின் தாய் தந்தையருக்குத் தங்கள் பிள்ளை யிறந்த துக்கங் கூடப் பெரிதாய்த் தோன்றவில்லை. ஆனால் உஜ்வலினியின் குற்றமற்ற குழந்தை முகத்தைப் பார்க்கும்போதெல்லாம், அவளுடைய கொடிய விதியை நினைத்து, நினைத்து, அவர்கள் அழுத அழுகைக்கு அளவே கிடையாது. மாப்பிள்ளையின் தந்தை சீதாராமய்யரிடம் வந்து, அவளை மறு விவாகம் செய்து கொடுத்து விடும்படி வேண்டினார். சீதாராமய்யர் அவளைப் பாலிய விதவைப் புனர் விவாக சங்கத்தில் சேர்த்து, அவளுக்கு இஷ்டமான கணவனுக்குக் கலியாணம் செய்து கொடுத்து விடலாமென்று நினைத்துக் கொண்டிருந்தார். ஆனால் உஜ்வலினி அதற் கிணங்கவில்லை. ஆரிய சமாஜிகளும், பிரம்ம சமாஜிகளும், விதவா விவாகம் சாஸ்திரோக்த மென்று நிரூபித்திருப்பதாகக் கூறி, சாஸ்திரங்களிலிருந்து அதற்கு அநேக ஆதாரவுகளையும் அவளுக்கு எடுத்துக் காட்டினார்கள். அதற்கு அவள், "நேற்று வந்த ஆரிய சமாஜிகளும், பிரம்ம சமாஜிகளும் சொல்லுகிறார்களென்று, வாழையடி வாழையாக வம்ச பரம்பரையாக வரும் ஒரு புராதன வழக்கத்தை விட்டு விடுவதா?" என்று சொல்லி விட்டாள். பங்கஜம்மாளும் அவளிடம் அடிக்கடி சொல்லிப் பார்த்தாள். ஒரு நாள் உஜ்வலினிக்குக் கோபம் பொறுக்க முடியவில்லை. "நாளைக்கு அப்பா கண்ணை மூடி விட்டால், நீ மறுவிவாகம் செய்து கொள்வாயா, அம்மா? இதென்ன வெட்கங் கெட்ட பேச்சுப் பேசுகிறாய்?" என்று கடிந்து கூறிவிட்டாள். அதன் பின் பங்கஜம்மாள் அவ்விஷயத்தைப் பற்றி வாய் திறப்பதே இல்லை.

ஃ ஃ ஃ

உஜ்வலினி சாதம் பரிமாறிக் கொண்டிருந்தாள். சங்கரன் சர்க்கார் உத்தியோகக் கொடுமைகளைப் பற்றிப் பிரலாபித்துக் கொண்டிருந்தான்.

"நான் இன்று ஆபீஸிற்கு இரண்டு நிமிஷங்கள் தாமதமாய்ச் சென்றேன். ஷெரஸ்ததார் காரணம் விசாரித்தான். இதற்கென்ன காரணம் சொல்வது? 'ஏதோ தாமதமாகி விட்டது' என்று சொன்னேன். அதற்கு என்னுடைய 'ரஜா நாட்களில் ஒரு நாள் குறைக்கப் படும்' என்று உத்தரவு போட்டு விட்டான்."

"நான்தான் உனக்கு அன்றே சொன்னேனே அண்ணா. இந்த அடிமை உத்தியோகத்தில், ஒருவன் மானங் கெட்டு, மரியாதை கெட்டுப் போகும்; இது நமக்கு வேண்டாம் என்று. எத்தனையோ சொல்லியும் நீ கேட்கவில்லை."

"பட்டா மாற்றுதலில் நான் அன்று ஒரு சிறிய தப்பிதம் செய்து விட்டேன். அதற்குத் தாசில்தார், 'முட்டாள்! பி. ஏ. படித்திருக்கிறேன் என்கிறாய். இது தெரியவில்லையே!' என்று திட்டினான். பி. ஏ. வகுப்பில் பட்டா மாற்றுதலும், பி. மெமோவுந் தான் சொல்லிக் கொடுக்கிறார்கள் என்று நினைத்துக் கொண்டிருக்கிறான் அந்த மூடன்!"

"ஏன் அண்ணா, இந்த முப்பது பிச்சைக்காசு வாங்குவதற்காக அவனிடத்தில் முட்டாள் என்றும் மூடன் என்றும் பட்டம் வாங்க வேண்டும்? இந்த எச்சிற்கலை உத்தியோகம் யாருக்கு வேண்டும்? ஒரு கால் காகிதத்தில் இரண்டு வரியை எழுதிக் கொடுத்துவிட்டு, ஒரேயடியாய் அதற்குத் தலை முழுகிவிடேன்!" என்றாள் உஜ்வலினி.

அப்பொழுதுதான் சமையலறைக்குள் நுழைந்த சீதாராமய்யர், "இன்றைக்கு முப்பது ரூபாய் உத்தியோகமாயிருப்பதுதானம்மா, நாளைக்கு முன்னூறு ரூபாயாவது! ஐந்து ரூபாய்ச் சேவகனானாலும், அரண்மனைச் சேவகத்திற்குத் தனி மதிப்பு இருக்கத்தான் செய்கிறது. நாலு வருஷத்திற்குப் பேசாமல் பல்லைக் கடித்துக்கொண்டிருந்தால், அப்புறம் இருக்கிறவனை எல்லாம் நாம் அதிகாரம் பண்ணலாம். பொறுத்தார் பூமி ஆள்வார்" என்றார்.

"இந்த வேதாந்தந்தான் எனக்குக் கொஞ்சமேனும் விளங்கவில்லை. கழுதை பொறுமையாய்த்தானிருக்கிறது. அதென்ன பூமியையா ஆள்கிறது? பொதிதான் சுமக்கிறது" என்றாள் உஜ்வலினி.

சங்கரன் மீண்டும்சொல்லலுற்றான்: "இது இன்றைக்குத்தான் நடந்தது. கலெக்டருடைய சொந்தக் கடிதம் ஒன்று டைப் அடிப்பதில், புது ரிபன் போட்டிருந்ததால் மை கெட்டியாக விழுந்துவிட்டது. உடனே மேஜையின் மீதிருந்த மைப்புட்டியை என் மீது வீசி யெறிந்து, "இப்பொழுது உன் சட்டை எவ்வளவு அழகாயிருக்கிறதென்று பார்" எனச் சிரிக்கிறான், கலெக்டர்."

"அந்த மடையன் மைப்புட்டியை உன்மீது வீசி எறிந்தான்; நீ பேசாமலிருந்தாய்! ஏன்! அந்த மேஜையின் மீது ஒரு ரூல்தடி இல்லாமலாபோய் விட்டது? அவன் மண்டையில் நாலு போடு போடுவதற்கு? வா அண்ணா, அந்தப் பயலை என்னிடத்தில் காட்டு. நான் அவனுக்குத் தகுந்த மரியாதை செய்கிறேன்" என்றாள் உஜ்வலினி.

(தொடரும்)

வாழ்க்கையில் நாம் முக்கியமான தேவை எதுவென்று கருதுகிறோம்! நம்மால் செய்ய முடிந்த வேலைகளை, பிறர் நமக்காகச் செய்ய வேண்டுமென்று எதிர்ப் பார்ப்பதைத்தான். —எமர்ஸன்.

—"ஒரு காங்கிரஸ்வாதி"

சுபாஷ்சந்திரபோஸ்

ஐம்பதாவது
காங்கிரஸ் தலைவர்.

ஸ்ரீ சுபாஷ் சந்திரபோஸ், மத்திய வங்காளத்திலிருக்கும் கொடாலி என்னும் கிராமத்தில் 1897ம் வருஷத்தில் ஜானகிநாதபோஸ் என்ற சட்ட நிபுணருக்குப் புதல்வராகப் பிறந்தார். ஜானகிநாதருக்கு மொத்தம் எட்டுப் பிள்ளைகள். இவர்களில் ஸ்ரீசரத்சந்திர போஸ், ஸ்ரீ சுனீல் சந்திரபோஸ் முதலியோர் பிரசித்திபெற்றவர்கள். பாலியத்திலிருந்தே சுபாஷ் கூர்மையான புத்தியும், சுறுசுறுப்புமுடையவர். படிப்பில் எந்த வகுப்பிலும் முதலில் தேறி வந்தார். ஸ்ரீ போஸ் கட்டாக் உயர்தரப் பள்ளிக்கூடத்தில் 1913ல், தன்னுடைய 16வது வயதில், மெட்ரிகுலேஷன் பரீட்சையில் தேறினார். பிறகு கல்கத்தாவில் மாகாணக் கல்லூரியில் சேர்ந்து, மாகாணத்தில் இரண்டாவது மாணாக்கனாக இண்டர்மீடியெட் பரீட்சையில் தேறினார். இவருடைய புத்தி அபிவிருத்திக்குக் காரணம் இவருடைய மாதாதான். போஸ் அந்தக் காலத்திலேயே ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்ஸரின் நூல்களைப் படித்துத் தம்முடைய பிற்கால வாழ்க்கையை நிர்ணயித்துக்கொண்டு விட்டார். ஏழை மக்களுக்குத் தொண்டு செய்தல், நோயாளிகளுக்குச் சிகிச்சை செய்தல் முதலிய பரோபகாரச் செயல்களில் மனதைச் செலுத்தலானார். பரமஹம்ஸரின் நூல்களைப் படித்தவுடன் இவர் மனம் துறவு பூண வேண்டுமென்ற ஆசை கொண்டது. இதனால் படிப்பை நிறுத்திவிட்டு திவ்ய ஸ்தலங்கள் யாத்திரை செய்துவரப் புறப்பட்டு

விட்டார். இடை இடையே பல சாதுக்களைக் கண்டு பேசினார். ஆனால் அவர்கள் சாதுக்கள் என்ற பெயரை வைத்துக்கொண்டு தங்கள் வாழ்க்கையை நடத்திவந்த செயல்கள் இவரைத் திரும்பிச் செல்ல செய்துவிட்டன.

மறுபடியும் வந்து மாகாணக் கல்லூரியில் பி. ஏ. வகுப்பில், தத்துவ சாஸ்திரத்தைத் தமது முக்கிய பாடமாகக்கொண்டு படிக்கவாரம்பித்தார். ஒருசமயம் அக் கல்லூரியில் ஓர் ஆங்கிலேயர் ஸி. எப். ஓடன் என்ற ஆசிரியர், மாணுக்கர்கள் மனம் புண்படப் பேசியதன் காரணமாக மாணுக்கர்களிடையே பெரியதொரு பரபரப்பு உண்டாகிவிட்டது. அது சமயம் ஸ்ரீ சுபாஷின் தலைமையில் மாணவர்கள் கட்டுப்பாடாக வெளியேறிவிட்டார்கள். இதற்குக் காரணம் சுபாஷ் தானென்று குற்றம் சாட்டப்பட்டு கல்லூரியிலிருந்து விலக்கப்பட்டார். இரண்டு வருஷம் படிப்பில்லாமல் போய்விட்டது. மறுபடியும் எந்த விதத்திலும் படிக்க வேண்டுமென்று ஆசைப்பட்டார். ஆனால் எப்படி மறுபடியும் அதே கல்லூரியில் சேர்ந்து படிப்பது? ஒருவேளை மன்னிப்புக் கேட்டால் நடக்கலாம். யார் மன்னிப்புக் கேட்டுக்கொள்வது? இதன்படி அதே கல்லூரியில் போவது சரியல்ல வென்பதே முடிவாயிற்று. 1917ம் வருஷம் கல்கத்தா சர்வகலாசாலையின் உப அத்தியக்ஷகராயிருந்த ஸர். அஷுதோஷ் முகர்ஜியின் உதவியால், "ஸ்காட்டிஷ் சர்ச் கல்லூரி"யில் சேர்த்துக்கொள்ளப்பட்டு பி. ஏ. வகுப்பில் முதலில் தேறினார். 1919ல் ஐ. ஸி. எஸ். பரீட்சைக்குப் படிக்க இங்கிலாந்து சென்றார். இத்துடன் கேம்பிரிட்ஜ் சர்வ கலாசாலையிலும் பி. ஏ. வகுப்பில் தேறினார். ஐ. ஸி. எஸ். பரீட்சையில் நாலாவதாகத் தேறினார். பிறகு இந்தியாவிற்குத் திரும்பி வந்து சப்டிவிஷனல் மாஜிஸ்டிரேட்டாக உத்தியோகம் ஏற்றுக் கொண்டார். ஆனால் பாரதமாதாவின் அழைப்பு இவருக்கு வந்துவிட்டது. பஞ்சாப் படுகொலை காரணமாக தேசம் அப்பொழுது ஒரே கொந்தளிப்பில் இருந்தது. கவிச் சக்ரவர்த்தி தாகூர் தன் ஸர் பட்டத்தை நிராகரித்தார். ராஜப் பிரதிநிதி சபையின் அங்கத்தினராயிருந்த ஸர். சங்கரன் நாயர் தமது அங்கத்தினர் பதவியை ராஜிநாமாச் செய்தார்.

இந்த கொந்தளிப்பைக் கண்ட ஸ்ரீ போஸ் தமது ஐ. ஸி. எஸ். உத்தியோகத்தை உதறித் தள்ளிவிட்டு, ஒத்துழையா இயக்கத்தில் சேர்ந்தார். 1921ல் தேசபந்து தாஸரால் ஸ்தாபிக்கப்பட்ட வங்காள தேசிய கல்லூரிக்குத் தலைவராக போஸ் நியமிக்கப்பட்டார். இந்தச் சமயத்தில் ஸ்ரீ போஸ் ராஜத் துரோகக் குற்றஞ் சாட்டப்பட்டு 6 மாத தண்டனை அடைந்தார். வெளிவந்தவுடனேயே, வங்காளத்தில் ஒரு பெரிய வெள்ளப் பெருக்கு உண்டாயிற்று; இதற்கு கஷ்டநிவாரணக் கமிட்டியின் காரியதரிசியாய் தேர்ந்தெடுக்கப்பட்டார். அப்பொழுது இவர் பல அரிய தொண்டுகள் செய்தார்.

1922ம் வருஷம் கயாவில் தேசபந்து தாஸரின் தலைமையில், 37வது காங்கிரஸ் நடைபெற்றது. சுயராஜ்ய கட்சி அங்கு ஸ்தாபிதமாயிற்று. அக் கட்சியின் முன்னேற்றத்

திற்காகப் பாடுபடும் நோக்கத்துடன் பிரசார பத்திரிகை ஒன்று "பார்வர்ட்" (Forward) என்ற பெயருடன் ஆரம்பிக்கப்பட்டது. அதற்குத் தலைமை ஆசிரியராய் ஸ்ரீ போஸ் வேலைசெய்யத் தொடங்கினர். 1924ல் கல்கத்தா நகரசபையை காங்கிரஸ் கட்சியினர் கைப்பற்றினர்கள். அதுசமயம் தேசபந்து மேயராகவும், போஸ் பிரதம நிருவாக உத்தியோகஸ்தருமாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். இது சமயம் இவர் நகரசபையில் செய்த சீர்திருத்தங்கள் பல.

பிறகு 1924ம் வருஷம் அக்டோபரில் வங்காள அரசாங்கத்தார் தீவிரமான அடக்குமுறையைக் கையாண்டார்கள். அப்பொழுது சுயராஜ்யக் கட்சியைச் சேர்ந்த பலர் கைது செய்யப்பட்டார்கள். ஸ்ரீ போஸும் கைது செய்யப்பட்டு சுமார் மூன்றரை வருஷம் சிறைவாசமநுபவிக்கலானர். அலிபூர் சிறையிலிருந்து பர்மாவின் பூர்வீகத் தலைநகரான மாந்தலே சிறைக்கு மாற்றப்பட்டார். மாந்தலேயின் உஷ்ணம் போஸின் தேக நிலையை உருக்கிவிட்டது. 40 பவுண்ட் எடையிலும் குறைந்துவிட்டார். இதனால் அரசாங்கம் கவலைகொண்டது. எனவே அரசாங்க வைத்தியர்களைக் கொண்டு பரிசோதனை செய்வித்து இவரை விடுதலை செய்துவிட்டது.

பிறகு கல்கத்தாவில் 1928ல் டிசம்பரில் நடந்த 43வது காங்கிரசின் போது இவர், தொண்டர்படைத் தலைவராயிருந்தார். இக் காங்கிரசில் குடியேற்ற நாட்டு அந்தஸ்தை அடிப்படையாகக் கொண்ட நேரு திட்டம் அங்கீகரிக்கப்பட்டது. "1929ஆ டிசம்பர் மீ 31ந் தேதிக்குள் அரசாங்கம் இத் திட்டத்தை ஏற்றுக்கொள்ளாவிடில், உடனே ஒத்துழையா இயக்கம் ஆரம்பிக்கப்படும்" என்ற தீர்மானம் கொண்டுவரப்பட்டது. அப்போது ஸ்ரீ சுபாஷ் "கலப்பற்ற பரிபூரண சுயராஜ்யமே வேண்டும்" என்ற திருத்தம் கொண்டுவந்து, ஜவஹர்லால் நேருவால் ஆதரிக்கப்பட்டு, சாதகமாக 973 ஓட்டுக்களும், பாதகமாக 1350 ஓட்டுக்களும் கிடைக்கத் தோல்வியுற்றது.

1929ம் வருஷம் ஜூன் மாதத்தில் அஸ்ஸாமில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது. இதனால் இரண்டு லக்ஷம் ஜனங்கள் கஷ்டங்களுக்குள்ளாயினர். இது சம்பந்தமாக ஸ்ரீ போஸ் இரவு பகலாயுழைத்தார். 1929ம் வருஷம் டிசம்பர் மாதம் லாகூரில் 44வது காங்கிரஸ் ஜவஹர்லால் நேருவின் தலைமையில் கூடிற்று. அப்பொழுது பரிபூரண சுயேச்சைத் தீர்மானம் காந்தியடிகளால் பிரேரிக்கப்பட்டு நிறைவேறியது. அது சமயம் ஸ்ரீ போஸ் ஒரு சொற்பொழிவு நடத்தினர்.

பின்னர் சத்தியாக்கிரக இயக்கத்தில் ஈடுபட்டுச் சிறை சென்றார். 1932ல் தேக சௌக்கியமில்லாததின் காரணமாக வியன்னாவிற்குச் சென்றார். இந்தியாவில் பிரவேசிக்கக் கூடாதென்றதொரு தடையுத்திரவு இவர் மீது பிறப்பிக்கப்பட்டது. பார்லிமெண்டிலும், இந்தியாவிலும் இந்தத் தடையுத்திரவை மறுத்துக் கிளர்ச்சிகள் பல நிகழ்ந்தன. இவர் ஐரோப்பாவில் பல பிரமுகர்களைச் சந்தித்துப் பேசினர். 1936ல் தாய்நாடு திரும்பி

ஞர். இவர் மேனாட்டில் வசிக்கிற போது, இந்தியாவின் சுதந்திர இயக்கத்தின் வளர்ச்சியைப்பற்றியதொரு நூலெழுதினார். ஆனால் இந்த இந்தியாவுக்குள் வரக்கூடாதென்று தடையுத்திரவு பிறப்பிக்கப்பட்டது. 1937ல் மீண்டும் வியன்னாவுக்கருகிலுள்ள பாட்கேஸ்டின் என்ற ஊரில் தங்கி தேக சுகத்தைக் கவனித்து வந்தார். இதுசமயம் இவர் இந்திய தேசிய காங்கிரசின் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டார். 1938ல் பிப்ரவரி மாதத்தில் இந்தியா வந்து ஹரிபுராவில் நடந்த 51வது காங்கிரசின் தலைவராயமர்ந்தார். 52வது காங்கிரசிற்கும் தலைவராக இரண்டாம் முறைத் தேர்ந்தெடுக்கப்பட்டார். துரதிருஷ்டவசமாக மனக் கசப்பு ஏற்பட்டபடியால் பிறகு இந்தப்பதவியிலிருந்து விலகவேண்டி வந்தது.

சமீபகாலமாக இவர் பொதுஜனங்களுடைய கவனத்திலிருந்து விலகியிருக்கிறார். இவர் எங்கு மாயமாகச் சென்றார் என்பது ஒருவருக்கும் தெரியவில்லை. ஆனாலும் இவர் எங்கிருந்தபோதிலும், இவருடைய தூய்மையான உள்ளம் பாரதமாதாவின் திருவடியிலேயே அமர்ந்திருக்கும் என்பது நிச்சயம்.

நாம் இந்திய ஜனங்களை கொள்ளைக்காரர்களிடமிருந்து காப்பாற்றினோம். ஆனால், வயிற்றுப் பசியால் அவர்கள் துடித்துத் துடித்துக் கொண்டு சாகிறார்களே அதிலிருந்து அவர்களை நாம் காப்பாற்றவில்லை.

—டப்ளியூ. எஸ். ப்ளண்ட்.

சூயஸ் கால்வாய்

மத்திய தரைக் கடலையும் செங்கடலையும் ஒன்று சேர்ப்பிப்பது சூயஸ் கால்வாய். மேனாட்டுக்கும் கீழ்நாட்டுக்கும் நடைபெறுகிற கப்பல் போக்குவரத்துக்களெல்லாம் இந்தக் கால்வாய் மூலமாகவே நடைபெறுகின்றன. இந்தக் கால்வாயை அடைத்துவிட்டால், ஐரோப்பியத் துறைமுகங்களிலிருந்து கீழ்நாட்டுக்கு வரும் எல்லாக் கப்பல்களும், தென்னாப்பிரிக்காவின் தென்கோடியிலுள்ள நன்னம்பிக்கை முனை வழியாகத்தான் செல்லவேண்டும். இந்த வாய்க்கால் பிற்காலத்தில் பெரிதும் உபயோகமாயிருக்கும் என்பதைக் கண்டுபிடித்து, இதற்கு வேண்டிய திட்டங்கள் தயாரித்தவன் பெர்டினாந்து டிலெஸ்ஸெப்ஸ் என்ற ஒரு பிரஞ்சு இஞ்சினீர். இவன் போட்ட திட்டப்படியே 1856ல் இந்தக் கால்வாயின் வேலைத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. 1869ம் வருஷம் நவம்பர் மாதம் முதன் முதலாக இந்தக் கால்வாயின்மூலம் கப்பல்போக்குவரத்து ஆரம்பித்தது. இந்தக் கால்வாயின் மொத்த நீளம் 103 மைல்; அகலம் சுமார் 800 அடி. இந்தக் கால்வாய் வெட்டப்படுவதற்குக் காரண புருஷனாயிருந்த லெஸ்ஸெப்ஸின் உருவச் சிலையொன்று இப்பொழுதும் கால்வாய் ஓரத்தில் கம்பீரமாக நிற்கிறது. இந்தக் கால்வாய் வேலை தொடங்குவதற்கு முதலில் நான்கு லட்சம் பங்குகளையுடைய ஒரு பிரெஞ்சு கம்பெனி தொடங்கப்பட்டது. இதில் எகிப்திய மன்னருக்கும் பங்கு இருந்தது. இந்த வாய்க்காலைக் கட்டுவதற்கென்று முதலில் ஏற்பட்ட மொத்தச் செலவு சுமார் 16,23,02,933 ரூபாய்.

பிரிட்டன், ஏன் இந்த சூயஸ் கால்வாய் விஷயத்தில் அதிகமான சிரத்தை காட்டுகிறது? இதைக் கவனிப்போம். சூயஸ் கால்வாய் கம்பெனியில் எகிப்து மன்னரான கேடிவ் அரசருக்குப் பதினேழாயிரம் பங்குகள் இருந்தன. 1857ம் வருஷம் எகிப்தை ஆண்டுகொண்டிருந்த கேடிவ் மன்னருக்குப் பணமுடை அதிகமாயிருந்தது. இதனால் அவர் தமது பதினேழாயிரம் பங்குகளையும் ஒரு பிரெஞ்சு கம்பெனிக்கு விற்றுவிட உத்தேசித்திருந்தார். இதுவிஷயம், அப்பொழுது எகிப்திலிருந்த ஒரு பிரிட்டிஷ் பத்திரிகை நிருபருக்குத் தெரிந்தது. அப்பொழுது இங்கிலாந்தில் பிரதம மந்திரியாயிருந்தவர் பெஞ்சமின் டிஸ்ரேலி என்பவர். இவரிடம் மேற்படி பத்திரிகை நிருபர், சூயஸ் கால்வாய் சம்பந்தமான தகவலைத் தெரிவித்தார். மேற்படி பதினேழாயிரம் பங்குகளையும் விலைகொடுத்து வாங்குவதாயிருந்தால் 40.லட்சம் பவுன் தேவையாயிருந்தது. பார்லிமெண்டைக் கூட்டி அதன் சம்மதத்தைப் பெற்றுக்கொண்டு அரசாங்க பொக்கிஷத்திலிருந்து பணத்தைக் கொடுக்கப்

போதுமான அவகாசம் டிஸ்ரேலிக்கு இல்லை. எனவே, தம் நண்பரும் அப்பொழுது பிரிட்டனிலேயே பெரிய பணக்காரராயிருந்தவருமான ராத்சில்ட் பிரபுவுக்கு ஒரு சீட்டெழுதி யனுப்பி 40 லட்சம் பவுனைப் பெற்று, மேற்படி பதினேழாயிரம் பங்குகளை யும் பிரிட்டிஷ் அரசாங்கத்தாருக்காக வாங்கிவிட்டார். இதன்பிறகே, இந்தக் கால்வாயில் பிரிட்டிஷ் அரசாங்கத்தா ருக்கு ஒரு சிரத்தையும் முக்கியத்துவ மும் ஏற்பட்டன. 40 லட்சம் பவுன் பெறுமான மேற்படி பங்குகளால் இதுவரை பிரிட்டிஷ் அரசாங்கத்தா ருக்கு டிவிடெண்டாகமட்டும் ஆறு கோடி பவுன் வருமானம் வந்திருக் கிறது. இந்தக் கால்வாய், போக்கு வரத்துச் சாதனமாக உபயோகிக்கப் பட்டபிறகு பிரிட்டனுடைய வியா பாரம் ஒன்றுக்குப் பத்து மடங்கு அதிகமாயிருக்கிறது.

இந்தக் கால்வாய் வழியாக ஒரு சாமான் கப்பல் செல்ல வேண்டுமா னால் சாதாரணமாக சுமார் 1500 பவுன் கட்டணமாகச் செலுத்த வேண்டியிருக்கிறது. சுமார் 4000 பிர யாணிகளை ஏற்றிச் செல்லுகிற ஒரு பிரயாணிகளின் கப்பல், ஏறக்குறைய 9000 பவுன் கட்டணமாகச் செலுத்த வேண்டியிருக்கிறது. இந்தக் கால்வாய் வழியாகக் கப்பல் செல்கிறபோது, மணிக்குச் சுமார் ஐந்து மைலுக்குக் குறைவாகவே செல்ல வேண்டும். இரண்டு கப்பல்கள் ஒரே சமயத்தில் செல்லக்கூடாது. ஒரு கப்பல் சென்ற பிறகுதான், மற்றொரு கப்பல் செல்ல வேண்டும். தபால்களை ஏற்றிச் செல்லும் கப்பல்களுக்கு எப்பொழு துமே சலுகையுண்டு. வருஷத்தில் சுமார் 6000 கப்பல்கள் இந்தக் கால்வாய் வழியாகச் செல்கின்றன. இந்த மகாயுத்தத்திற்குப் பிறகு, கப்பல் போக்குவரத்து குறைந்திருக் கிறது. இத்தலி—அபிசீனியா யுத்தத் தின்போது, கப்பல் போக்குவரத்து மிக அதிகம். இத்தலிமட்டும், தன் துருப்புகளையும் யுத்த தளவாடங்களை யும் ஏற்றிக்கொண்டுபோன தன் கப் பல்களுக்குச் சுமார் 10 லட்சம் பவுன் கட்டணமாகச் செலுத்தியிருக்கிறது.

எகிப்திய அரசாங்கத்தாரிட மிருந்து, இந்தக் கால்வாயின் உபயோ கத்தை, மேற்படி சூயஸ் கால்வாய் கம்பெனியார் குத்தகையாகப் பெற்றிருக்கின்றனர். இதற்காக, எகிப்திய அரசாங்கத்திற்கு இந்தக் கம்பெனி வருஷந்தோறும் ஒரு தொகை கொடுக்கிறது. இந்தக் குத் தகை காலம் 1968ம் வருஷத்தோடு முடிவடைகிறது. எகிப்தில், பிரிட்டிஷ் அரசாங்கத்தார் அரசியல் ஆதிக் கத்தை ஸ்தாபிதம் செய்துகொள்ள வேண்டுமென்பதற்கு, இந்தக் குத் தகை விஷயமும் ஒரு முக்கிய காரண மென்று சொல்லப்படுகிறது.

பர நலத்தையே தன்னலமாகப் பாவிப்பவன் எவனோ அவனே மனிதர்களில் சிரேஷ்டமானவன். —பர்த்ருஹரி.

யுத்தம் வேண்டாம்

அறியாமை யென்பது இருளானபடியால், நமக்குத் தேவையானது ஞான வெளிச்சம். எனவே முன்னேற்றத்திற்கு அடிப்படையாயுள்ள போதனைகளை நாம் கடைப்பிடிக்க வேண்டும். இந்தப் பூலோகமானது இயற்கையினின்றெழுந்தது; மனிதன்தான் மனிதனுக்குத் தெய்வமாயிருக்கவேண்டும்; நாம் நமது அறிவை விருத்திசெய்து கொள்வோமானால், நம் முன்னே தோன்றும் சில ஆபத்துக்களை, சில தீமைகளை, சில தடைகளை விலக்கிக் கொள்ளலாம். அது மட்டுமல்ல; இயற்கையின் உண்மைகளையும், அதன் சக்திகளையும் நாம் நமக்குச் சாதகமாக உபயோகித்துக் கொள்ளலாம். புதிய கருவிகளைக் கண்டுபிடிப்பதன் மூலமாகவும் தொழில் மூலமாகவும் ஸ்தூல தேகத்தின் தேவைகளைப் பூர்த்தி செய்துகொள்ளலாம். சிந்தனை செய்வதனாலும், ஆராய்ச்சி செய்வதினாலும், முயற்சிசெய்வதனாலும், நமது அறிவுப் பசியைத் தீர்த்துக் கொள்ளலாம்.

எவ்விதமான அமானுஷ்ய சக்தியிடமிருந்தும் மனிதன் எவ்விதமான உதவியையும் எதிர்பாராதிருக்கக் கடவன். பிரார்த்தனையினால், செல்வம் அபிவிருத்தியாவதில்லை. செல்வமானது, பிரார்த்தனையின் குழந்தையில்லை. அமானுஷ்ய சக்திகளென்று நாம் எவை எவைகளை நம்புகிறோமோ, அவை, ஒடுக்கப்பட்டவர்களை உத்தாரணஞ் செய்யவில்லை நிர்வாணநிலைமையிலுள்ளவர்களுக்கு ஆடை உதவியதில்லை பசியுள்ளவர்களுக்கு ஆகாரம் அளிக்கவில்லை. விவரம் தெரியாதவர்களுக்கு ஞானத்தைக் கொடுத்ததில்லை. பஞ்சக் கொடுமையை குறைக்கவில்லை. அடிமையை விடுதலை செய்யவில்லை.

அமானுஷ்யமான சக்தி ஒன்றும் இல்லையென்பதில் மனிதன் பூரண நம்பிக்கை கொண்டவனாய், பின்னர், இந்த இகலோக விவகாரங்களில் அவன் கவனத்தைச் செலுத்தவேண்டும்; இயற்கையின் உண்மைகளில் மனம் வைக்கவேண்டும்.

முதலாவது மனிதன் செலவைக் குறைத்துக் கொள்ள வேண்டும். அதாவது உழைப்பின் செலவை, பணத்தின் செலவைக் குறைத்துக் கொள்ள வேண்டும். ஆண் மகனாயினும், பெண் மகளாயினும், யுத்தம் நடைபெறக்கூடாதென்ற முயற்சியில் ஈடுபடவேண்டும். மிருக பலத்தின் துணையை மனிதர்களாயிருக்கப்பட்டவர்கள் நாடவேண்டாமென்கிற விஷயத்தை எல்லோருக்கும் விண்ணப்பித்துக்கொள்ள வேண்டும். மனிதன் மிருக நிலையிலிருக்கிறபோதுதான், தன் தேக பலத்தில் நம்பிக்கைகொண்டவனாய், எது சரி, எது தவறு என்பதைத் தானே நிர்ணயித்துக்கொள்கிறான். நாகரிகமுள்ள மனிதர்கள், தங்களுடைய சச்சரவுகளை ஆயுத பலத்தின் துணைகொண்டு தீர்த்துக் கொள்ள மாட்டார்கள். தங்களுடைய

வழக்குகளை கோர்ட்டுகளின் முன்னரோ பஞ்சாயத்துகளுக்கு முன்னரோ சமர்ப்பிப்பார்கள். காட்டுமிராண்டிகளுக்கும் நாகரிக ஜனங்களுக்குமுள்ள பெரிய வித்தியாசம் இது. ஆனால் இப்பொழுது ஒரு தேசம் மற்றொரு தேசத்துடன் வைத்துக்கொண்டிருக்கும் சம்பந்தமானது காட்டுமிராண்டி சம்பந்தமாக இருக்கிறது. இவற்றின் தகராறுகளைத் தீர்த்துக்கொள்ள வேறு முறைகளில்லையா? ஒவ்வொரு தேசமும், தனக்குத் தானே ஏதோ ஒரு பிரச்னையைப்பற்றித் தீர்மானித்துக்கொள்கிறது. உடனே அந்தத் தீர்மானத்தின்படி நடக்க ஆரம்பிக்கிறது. இதனால் விளைவது யுத்தம். இந்தச் சமயத்தில், உலகத்தின் பல பாகங்களிலும், ஆயிரக் கணக்கான பேர் கொலைக் கருவிகளைக் கண்டுபிடிப்பதிலும் அவற்றைத் தயார்செய்வதிலும் முனைந்திருக்கிறார்கள். ஏன்? தங்கள் சகோதர மனிதர்களைக் கொல்ல. சென்ற ஆயிரத்து எண்ணூறு வருஷங்களாக உலகத்தில் சமாதானப் பேச்சு பேசப்பட்டு வந்திருக்கிறது. ஆயினும் உலகத்தில் சமாதானம் ஏற்படவில்லை. நாகரிகமுள்ள நாடுகள் என்று சொல்லிக்கொண்டிருப்பவைதான் இப்பொழுது சண்டைக்கு முனைந்து நிற்கின்றன. இன்று, ஐரோப்பாவிலே சுமார் ஒன்றரை கோடி பேர் யுத்த சன்னத்தராக இருக்கிறார்கள். நாகரிகமுள்ள நாடு என்று சொல்லிக்கொள்ளப்படுகிற ஒவ்வொரு நாடும் தன் தன் எல்லைப்புறத்தைக் கோட்டைகளாலும் முள்வேலிகளாலும் பந்தோபஸ்து செய்துகொண்டிருக்கின்றது. சமுத்திரத்தைப் பாருங்கள். எஃகினால் மூடப்பட்ட கப்பல்களால் அது நிரம்பியிருக்கின்றது. அந்தக் கப்பல்களிலோ கொலைத் தூதர்கள்போல் பல கருவிகள் நிறைந்திருக்கின்றன. கிறிஸ்தவர்கள் வாழ்கிற நாடுகளிலே இப்பொழுது யுத்தக் கருவிகளைத் தயாரிப்பதற்கென்று சுமார் மூன்றுகோடி டாலர்கள் செலவழிக்கப்படுகின்றன. இந்தப் பெருந்தொகைக்கு வட்டிவேறே கொடுக்கவேண்டும். ஏழைத் தொழிலாளர்களுடைய உழைப்பைக்கொண்டுதான் இந்த வட்டியைச் செலுத்தவேண்டும். இங்ஙனம் உழைக்கிற தொழிலாளர்களுக்கோ வாழ்க்கையின் அன்றாடத் தேவைகள்கூடக் கிடைப்பதில்லை. இந்த வட்டிக் கடனோ, வருஷத்திற்கு வருஷம் விருத்தியாகிக்கொண்டு வருகிறது. இது விஷயத்தில் ஏதேனும் மாறுதல் ஏற்படவேண்டும். இல்லாவிட்டால் கிறிஸ்தவ நாடுகள் பணசூனியமான நாடுகளாகப் போய்விடும்.

மேலே சொன்ன செலவுக் கடன் தொகைக்கு வட்டி என்னவாகிறதென்று பார்ப்போமானால் வருஷத்தில் ஒன்பது கோடி டாலராகிறது. இது தவிர, தரைப் படைச் செலவு, கடற்படைச் செலவு, யுத்ததளவாடச் செலவு முதலிய செலவு வகைகளெல்லாம் சேர்ந்து தினம் ஆறு கோடி டாலராகிறது. அதாவது ஒரு மணிக்கு ஏறக்குறைய ஆறு லட்சம் டாலர், அதாவது ஒரு நிமிஷத்திற்கு பதினாயிரம் டாலர் வீதம் யுத்தத்திற்கென்று செலவழிக்கிறோம்.

இந்தப் பெருந்தொகையை நினைத்துப் பாருங்கள். இந்தப் பெருந்தொகை எதற்கு? நமது சகோதரர்

களைக் கொல்லவும் கொல்விக்கவும். இந்தப் பெருந் தொகையைக்கொண்டு எவ்வளவு நல்ல காரியங்களைச் செய்யலாமென்பதையும் நினைத்துப் பாருங்கள். எவ்வளவு பள்ளிக்கூடங்கள் கட்டலாம்? ஜனங்களுடைய தேவைகளை எவ்வளவு தூரத்திற்குப் பூர்த்தி செய்யலாம்? வீடில்லாமல் தவிக்கும் எத்தனை ஏழை மக்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்கலாம்? எத்தனைக் குழந்தைகளுக்குத் துணி வாங்கிக் கொடுக்கலாம்?

நாம் யுத்தத்தை ஒழிக்க வேண்டுமானால், ஒரு தேசத்திற்கும் மற்றொரு தேசத்திற்கும் ஏற்பட்டிருக்கிற விவகாரங்களைத் தீர்த்துக்கொள்ள சர்வ தேச நீதி ஸ்தலமொன்றை நியமிக்க வேண்டும். இந்த நீதி ஸ்தலம் சதா வேலை செய்து கொண்டிருக்க வேண்டும். இந்த ஸ்தலத்திற்கு நீதிபதிகளாக நியமிக்கப்படுகிறவர்கள், பல தேச அரசாங்கங்களினாலும் தெரிந்தெடுக்கப்படுகிறவர்களா யிருக்கவேண்டும். இந்தக் கோர்ட்டாருடைய தீர்ப்புப்படி, கிறிஸ்தவ நாடுகள் புலவும் நிராயுதபாணிகளாகிவிடவேண்டும். இந்தக் கோர்ட்டாருடைய உத்திரவுகளை அமுலுக்குக் கொண்டுவரச்செய்யும் பொருட்டு ஒரு ராணுவப் படை எப்பொழுதும் தயாரிப்பில் இருக்க வேண்டும். இந்த ஒரு ராணுவப்படை தவிர, வேறெந்த ராணுவமும் உலகத்திலேயே இருக்கக்கூடாது.

யுத்தக் கொடுமைகளை வருணிக்க யாருக்கும் திறமையில்லையென்றுதான் நான் கூறுவேன். மனிதர்களின் தேகத்தை ஊடுருவிக்கொண்டு இரும்புக் குண்டுகள் செல்லுகின்றனவென்பதைக் கொஞ்சம் கற்பனை செய்து பாருங்கள்! யுத்தம் காரணமாக விதவைகளாகிப் போகிறவர்களையும், அநாதைகளாகிப் போகிறவர்களையும் சிந்தித்துப் பாருங்கள்! அங்க ஹீனர்களாகி வாழ்நாள் முழுவதும் அவதிப்படுவோரை நினைத்துப் பாருங்கள்!

இந்தக் கோரமான யுத்தத்துக் கெல்லாம் காரணம் விஞ்ஞானம் என்று சிலர் கூறுகிறார்கள்; இது தவறு. இதற்குக் காரணம் அரசியல் வாதிகளே யாவர்.

—ஸர் சி. வி. ராமன்.

ஸால்வடோர் மடாரி யாகா

ஐரோப்பிய அரசியலில் ஸ்பெயினின் முக்கியத்துவம்

இவர் ஒரு ஸ்பானிஷ் அறிஞர். ஸ்பெயின் அரசியலில் பெரிதும் ஈடுபட்டவர். பிரான்சிலும் அமெரிக்காவிலும் ஸ்பானிஷ் அரசாங்க தூதராயிருந்தவர்.

ஒரு மனிதனுக்கு அழகைக்கொடுப்பதும், அவனுடைய மூக்குத்தான்; அவனுடைய அழகைக் கெடுப்பதும் அவனுடைய மூக்குத்தான். அதைப்போல இங்கிலாந்துக்கும் ஸ்பெயினுக்கும் உள்ள சிநேகத்தை அதிகப்படுத்துவதும், அந்தச் சிநேகத்தை முறிப்பதும் ஜிப்ரால்டர் பிரச்னைதான். இந்த ஜிப்ரால்டர் பிரச்னையை ஸ்பானிஷ் கண்கொண்டோ, அல்லது பிரிட்டிஷ் கண்கொண்டோ பார்க்கக் கூடாது. பொதுவாக உலகத்தை, சிறப்பாக ஐரோப்பாவை ஒரு பெரிய நாடு என்று மனத்தில் வைத்துக் கொண்டுதான் இந்த ஜிப்ரால்டர் பிரச்னையை நாம் கவனிக்கவேண்டும். தவிர, உலகப் பிரஜை என்ற ஹோதாவிலோ அல்லது ஐரோப்பியப் பிரஜை யென்ற ஹோதாவிலோதான் நாம் இந்தப் பிரச்னையைக் கவனிக்க வேண்டும்.

நம்மை ஓர் உலகப் பிரஜையாகக் கருதிக்கொண்டு, தற்போது ஐரோப்பாவில் நடைபெறுகிற கொடிய சம்பவங்களைக் கவனிக்கிறபோது சென்ற வருஷம் கோடை காலத்தில், இங்கிலாந்து தான் உலகத்தைக் காப்பாற்றியது என்ற முடிவுக்கு வருவோம். சென்ற ஜூன் மாதம் கடைசியில் பிரான்ஸ் வீழ்ச்சியுற்றபிறகு, இங்கிலாந்தின் சத்ருக்களும் நண்பர்களும் சேர்ந்து 1940ம் வருஷக் கடைசிக்குள் இங்கிலாந்தானது சரணாகதியாவது அடைந்துவிடும்; அல்லது சமாதானத்தையாவது கோரும் என்றுதான் நினைத்தார்கள். இப்படி இவர்கள் கூறுகிறபோது, இங்கிலாந்து தனியாகவே நின்றது. இப்பொழுதும் தனியாகவே நிற்கிறது. வருங்கால உலக சரித்திரத்திலேயே 1940ம் வருஷத்துக் கோடை காலம் மிகவும் முக்கியமான காலமாகக் கருதப்பெறும்.

ஒரு மனிதன், மற்றொரு மனிதனோடு யுத்தம் செய்கிறபோது அவன் உயர்ந்ததொரு லட்சியத்திற்காகப் போராடியபோதிலும், தன்னிடத்திலேயுள்ள எல்லாச் சக்திகளையும், நல்ல சக்திகளையும் கெட்ட சக்திகளையும், உபயோகித்தே போராடுகிறான். தன்னுடைய பூர்வீக பரம்பரையில் ஏதேனும் குற்ற உணர்ச்சிகள் இருந்தால் அவற்றையும் அப்பொழுது வெளிப்படுத்தி உபயோகத்திற்குக் கொணர்கிறான். உயர்ந்த லட்சியத்திற்

காகப் போராடும் இங்கிலாந்தும் இப்படியே, தனது நிகழ்கால சக்திகளையும் இறந்த காலச் சக்திகளையும் தன் துணைக்குக் கொண்டுவந்து போர் புரிய வேண்டியிருக்கிறது. அப்படி, தன்னம்பிக்கையோடு போர் புரிகிற போது, பழைய சரித்திர ஞாபகங்களையெல்லாம் அஃது இப்பொழுது தன் துணைச்குக் கொண்டுவரவேண்டியிருக்கிறது. ஏன், இப்படித் தன் சகல சக்திகளையும உபயோகிக்கிறது? அதன் தன்னலத்தியாகஉணர்ச்சிதான் காரணம். இந்தயுத்தத்தில்இங்கிலாந்து வெற்றிபெற்றுவிடுமானால்ஒருகாலாந்தகாரத்திலிருந்து மானிட சமுதாயத்தைக் காப்பாற்றிய கௌரவம் இங்கிலாந்துக்கு நிச்சயம் உண்டாகும். எனவே, இங்கிலாந்து பலஹீனப்பட்டுப் போகும்படி நாம் எவ்விதத்திலும் நடந்துகொள்ளக் கூடாது. இந்த முக்கியமான உண்மையை மனத்தில் வைத்துக்கொண்டுதான், ஆங்கிலோ—ஸ்பானிஷ் பிரச்னையை நாம் கவனிக்கவேண்டும். அகில உலக ஒற்றுமை என்கிற கோணத்திலிருந்து கொண்டு இந்தப் பிரச்னையை நாம் பார்க்கிறபோது இங்கிலாந்தின் வாழ்வும் ஸ்பெயினின் வாழ்வும் ஒன்றுபட்டிருப்பதை நன்கு காணலாம்.

இங்கிலாந்து மட்டும் வல்லமை பொருந்தியதாகவோ வீரம் பொருந்தியதாகவோ இருந்தால் போதாது. அமெரிக்கா இல்லாவிட்டால் இங்கிலாந்தும் கீழேதான் போய்விடும். அமெரிக்கா போனால் உலகமும் போக வேண்டியதுதானே. வெற்றி கண்ட பிறகு, இங்கிலாந்து, அமெரிக்கா முதலிய நாடுகள் சேர்ந்து யோசிக்க வேண்டிய விஷயமென்ன வென்றால், ஜெர்மானியர்கள் இனியும் வந்து தாக்காதபடி திட்டங்கள்போட வேண்டியதாகும். சென்ற யுத்தத்திலிருந்து நாம் கற்றுக் கொண்ட பாடமானது, இது விஷயத்தில் நாம் மிகவும் ஜாக்கிரதையாக இருக்க வேண்டுமென்று நமக்கு வற்புறுத்துகிறது. ஜெர்மானியர்களிடத்தில் இருக்கும் சில உயர்ந்த குணங்கள், உலக க்ஷேமத்திற்கு முட்டுக் கட்டையாக இருக்கின்றன. விஞ்ஞானத் துறையில் அஃது அடைந்திருக்கும் முன்னேற்றம், அதிகாரத்திற்குக் கீழ்ப்படிதல், ஜாதீய தற்பெருமை முதலியன வெல்லாம், உலக ராஜதந்திரிகள் கவனிக்க வேண்டிய விஷயங்கள்.

ஜெர்மானிய அட்டூழியங்கள் நிகழாதபடி இனி நாம் எடுத்துக் கொள்ள வேண்டிய நடவடிக்கைகளை இரண்டு கூறாகப் பிரிக்கலாம். ஏகாதிபத்திய வாதம், சர்வாதிகாரத்துவம் முதலியவைகளை யெல்லாம் கடந்துள்ள ஒரு நிலைக்கு ஜனங்களை அழைத்துச் செல்லல்; இரண்டாவது, மேற்கு ஐரோப்பிய நாடுகளையெல்லாம் ஒன்றுசேர்ப்பித்து அத்லாந்திக் மகா சமுத்திரத்தைத் தாராளமாக உபயோகிக்கும்படி இங்கிலாந்துக்கு இட மேற்படுத்திக் கொடுத்தல். இப்படி ஏற்படுத்திக் கொடுக்கிற விஷயத்தில் அமெரிக்காவும் ஆப்ரிக்காவும் ஒன்று சேர்ந்து உழைக்கக் கூடியதாக இருக்க வேண்டும்.

இந்த விஷயத்தில் ஸ்பெயின் தேசம் மிகவும் முக்கியத்துவம் பொருந்தியதாயிருக்கிறது. இந்த முக்கியத்துவத்தை மூன்று கூறுகளாகப் பிரிக்கலாம். முதலாவது அதன்

பூகோள அமைப்பு; இரண்டாவது, அமெரிக்காவுக்கும் அதற்குமுள்ள கலை ஞானத் தொடர்பு; மூன்றாவது, ஆப்ரிக்கா கண்டத்தில் அதற்குள்ள செல்வாக்கு. இந்த மூன்று அமிசங்களில், இந்தத் தேசத்தினுடைய பூகோள அமைப்புத்தான் மிகவும் விசித்திரமானதாயிருக்கிறது. பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் இதனை முக்கியமாகக் கவனிக்க வேண்டும். பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தை ஒருதேகமாகவும், அதில் பிரிட்டனை மூளையாகவும் இருதயமாகவும், கப்பல் போக்கு வரவு மார்க்கங்களை அதன் நரம்புகளாகவும் நாம் கவனித்துக் கொண்டு பார்த்தோமானால், ஸ்பெயினானது, தேகத்தோடு நெருங்கிய தொடர்புள்ள ஆனால் தேகத்தோடு சம்பந்தப்படாத ஓர் அவயவம் போலவே காணப்படும் இந்த உறுப்பை அலட்சியஞ் செய்துவிடுவதுதான், பிரிட்டனின் பழைய கொள்கையாயிருந்தது. ஆனால் இனியும் அந்த மாதிரி இருக்க முடியாது.

ஜிப்ரால்டர், ஸ்பெயினின் மூக்கு நுனி போன்றது. ஜிப்ரால்டர் பிரிட்டனுக்குச் சொந்தமாயிருந்தாலும், ஸ்பெயின் விரோதமாயிருந்தால் ஜிப்ரால்டரினால் ஏற்படுகிற சாதகம் மிகக் குறைவுதான். இதனால் ஜிப்ரால்டரைப் பற்றிய கவலை பிரிட்டனுக்கு அதிகம். பட்சபாதமில்லாமல் நாம் இந்தப் பிரச்னையை ஆராய்ச்சி செய்து பார்க்கிறபோது ஜிப்ரால்டரைவிட நேசமுள்ள ஒரு ஸ்பெயின்தான் பிரிட்டனுக்குச் சிறப்புடையதென்பது தெரியும். ஜிப்ரால்டர் ஸ்பெயினுக்குத் தேவையில்லையென்று சில ஸ்பானிஷ்காரர்கள் கூறுகிறார்கள் என்பதை நான் அறிவேன். ஆனால் இப்படிச் சொல்கிறவர்கள் பொறுப்பில்லாதவர்கள் என்றுதான் சொல்லவேண்டும். இங்கிலாந்தானது, ஜிப்ரால்டரைத் தன் சுவாதீனமாக்கி வைத்துக்கொண்டிருப்பதன் விளைவு, சாதாரண ஓர் அரசியல் பிரச்னையைவிட ஆழமானது! ஜிப்ரால்டர், இங்கிலாந்தின் வசப்பட்டிருப்பதனால், ஸ்பெயினில் ஒற்றுமை குலைந்திருக்கிறது. ஐரோப்பாவிலேயே, மிகவும் குழப்பம் நிறைந்த நாடு ஸ்பெயின்தான் என்று சொல்லப்படுவதற்கெல்லாம் காரணம், இந்த ஜிப்ரால்டர் பிரிட்டன்வசமிருப்பதுதான். தவிர, பிரிட்டனானது, தனக்குச் சம்பந்தமில்லாத வேறொரு நாட்டுக்குரிய பிரதேசத்தை தன் சுவாதீனத்தில் வைத்துக்கொண்டிருப்பதனால் சர்வதேச விவகாரங்களில் அதற்கு இருந்துவரும் மதிப்புப் போய்விடுகிறது.

இந்த நிலைமைக்குப் பரிகாரமென்ன? இங்கிலாந்தும் ஸ்பெயினும் ஒருவித நிரந்தர ஒப்பந்தம் செய்து கொள்ள வேண்டும். வெளிநாட்டு விவகாரங்கள் சம்பந்தப்பட்டமட்டில், இரண்டு நாடுகளும் ஒன்று சேர்ந்து முடிவுகொள்ள வேண்டும். இப்படிச் செய்வதனால், ஜிப்ரால்டர், ஸ்பெயினுக்குப் போய்ச் சேரும். இதற்கு ஈடாக, ஸ்பெயின் துறைமுகங்களும் அதன் சில்லரைத் தீவுகளும்; இங்கிலாந்தின் உபயோகத்திற்குக் கிடைக்கும். இங்ஙனம் உபயோகமாவது எப்பொழுது? உலக ஏகாதிபத்தியத்தின் இருதயமாகவும் மூளையாகவும் ஆகிவிட்ட பிரிட்டன், வேறு எந்த வல்லரசுகளாலேனும் தாக்கப்பட்டால், அப்பொழுதுதான்

இந்தத் துறைமுகங்களின் உபயோகம் பிரிட்டனுக்குக் கிடைக்கும்.

அமெரிக்காவில் ஏராளமான ஸ்பானிஷ்காரர்கள் வசிக்கிறார்கள். இவர்களெல்லோருக்கும் ஸ்பெயின் தாய்நாடாயிருக்கிறது. எனவே, ஸ்பெயினில் என்ன நடைபெறுகிறதோ, அது ஸ்பானிஷ் அமெரிக்காவிலும் எதிரொலி கொடுக்கும். ஆகையால், ஸ்பெயினில் ஏதேனும் கெடுதலான நிகழ்ச்சிகள் நிகழா வண்ணம் பார்த்துக்கொள்வது பிரிட்டனின் கடமையாகும்.

ஆகையால் இப்பொழுது நடைபெறுகிற யுத்தம் வெற்றி பெற்ற பிறகு, இந்த வெற்றிக்குக் காரணமாயுள்ள இங்கிலாந்தும் அமெரிக்காவும் சேர்ந்து புதியதோர் உலக ஏகாதிபத்தியத்தைச் சிருஷ்டிக்கிறபோது, பிரிட்டிஷ்—ஸ்பானிஷ் சம்பந்தம் உறுதியாக அமைய வேண்டுமென்பது என் கோரிக்கை.

இந்தியாவில் 101 கண்ணாடி உற்பத்தித் தொழிற்சாலைகள் இருக்கின்றன. இவைகளிலிருந்து வருஷந்தோறும் 2,00 00,00,000 ரூபாய் பெறுமான கண்ணாடிச் சாமான்கள் உற்பத்தியாகின்றன.